Registered as a News Paper

பொழிவு - 15
குவிப்பு -08
பக்கங்கள் - 16
விலை ரூபா 40.00
ஓகஸ்ட் 2012
(ISSN 1800-2641)

மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Social Communication Centre, Manna Paper Office, St.Joseph's Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2250789/ 023 - 3233276 / 0777420811 Fax No - 023-2250789, E. Mail : nesanmnr@gmail.com.
"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD/ 159 / News / 2012"

திருக்குடும்பச் சபையின் முப்பொன் (150) யூபிலி விழா

திருக்குடும்ப சகோதரிகள் சபை இலங்கையில் கால்பதித்து

150 ஆண்டுகள் நிறைவு!

திருக்குடும்பச் சகோதரிகளின் சபையானது இலங்கையில் முதற்பெண்துறவிகள் சபையாக 1862ம் ஆண்டு கார்த்திகைத் திங்கள் 2ம் நாளில் யாழ் மண்ணில் தடம் பதித்து 150 ஆண்டுகளை இவ்வருடம் நிறைவு செய்கின்றது. இத்திருக்குடும்பச் சகோதரிகள் அறுவரின் வருகையானது நமது மண்ணுக்கும் மக்களுக்கும் உதயதாரகையாக ஒளிவீசியது. அந்த அணையாத ஒளியின் வழியின் பயணம் செய்தோர் இன்று இறைமக்கள் பேரவையாக, சமுதாய சிற்பிகளாக, ஆற்றல்மிகு அறிஞர்களாக, பெருமைமிக்க பெண் இனமாக குடும்பங்களின் தீபங்களாக விளங்குகின்றனர்.

அக்காலத்தில் யாழ் அப்போஸ்தலிக்க பிரதிநிதியாக (Apostolic Vicar) விளங்கிய சமேரியா ஆண்டகை (அ.ம.தி) தனது ஆளுகையின் காலத்தில் இறைமக்கள் சிறப்பாக இளம்பெண் பிள்ளைகளின் நிலைப்பாட்டை உற்றுநோக்கி மனம் வருந்தினார். கல்வியறிவு, மறையறிவு, விசுவாச வாழ்வு, ஒழுக்கசீலங்கள், மனித மேம்பாட்டு வளர்ச்சி, பண்பாட்டுக் கலாச்சார விழுமியங்கள் என்பன தொய்வு நிலையில் காணப்பட்டன. இந்தியாவைப்போல் ஒரு துறவற சபைச் சகோதரிகள் இங்கு வந்து இவர்களின் நிலையை மேம்படுத்துவதாக இருந்தால் எவ்வளவோ நன்மை பயக்கும் என்று ஆதங்கப்பட்டார். பல துறவற சபைகளை நாடி விண்ணப்பித்தும் ஒன்றும் கைகூடவில்லை. இறுதியாக இறைவன் விரும்பிய சபை திருக்குடும்ப சபையாகும்.

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்

குருத்துவ வாழ்வில் வெள்ளிவிழாக் காணும்

அருட்திரு ஏ. செபமாலை அடிகளார்

யாழ் மறைமாவட்டத்தில் ஜெபரெட்னம் அடிகளாருக்கும் யூபிலி

மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்திரு. அந்தனி செபமாலை அடிகளார் தனது குருத்துவ வாழ்வில் 25 வருடங்களை நிறைவுசெய்து வெள்ளி விழாக் காண்கின்றார். எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 20ஆம் திகதி தனது 25 வருட குருத்துவ நினைவுநாளில் தன் பிறந்தகமான அளக்கைப் பங்கின் பொன்தீவுகண்டல் கிராமத்தில் உள்ள புனித அந்தோனியார் ஆலயத்தில் யூபிலி விழா நன்றித் திருப்பலியை ஒப்புக்கொடுக்கவுள்ளார்.

இவ்வாண்டு (யூலை 9ஆம் திகதி) யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்திரு. பி. ஜே. ஜெபரெட்னம் அடிகளாரும் குருத்துவ வாழ்வில் வெள்ளிவிழாவைக் கொண்டாடினார்.

அருட்தந்தையர்கள் செபமாலை மற்றும் ஜெபரெட்னம் ஆகியோருக்கு மன்னார் மறைமாவட்ட ஆயர், குருக்கள், துறவியர், இறைமக்களின் நல்வாழ்த்துக்களையும், செபங்களையும் மன்னா மகிழ்வோடு தெரிவித்து நிற்கின்றது.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

நிறைந்த மக்கள் வெள்ளத்தில் சிறப்பாக நடந்தேறிய

மடு ஆவணித் திருவிழா

கேட்ட வரம் அளிக்கும் கீர்த்தி பெற்ற சீமாட்டி!
காட்டில் குடியிருக்கும் கருணையுள்ள என் தாயே!
பாட்டில் மலர் தொடுத்தேன் பாலோடு தேன் எடுத்தேன்
நாட்டில் அமைதி என்ற நதியைத் திருப்பிவிடு.

(சொல்லின் செல்வர் புலவர் மணி அமுது)

மன்னார் கலையருவியின் ஏற்பாட்டில்

தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் நினைவுப் பேருரை

'கலையருவி' எனப்படும் மன்னார் மறைமாவட்ட சமூகத் தொடர்பு அருட்பணி மையத்தின் ஏற்பாட்டில் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் நினைவுப் பேருரை 2012 நிகழ்வும் தனிநாயகம் அடிகளார் நூற்றாண்டு விழா ஆரம்ப வைபவமும் கடந்த ஓகஸ்ட் மாதம் 2ஆம் திகதி பகல் 2.30 மணிக்கு மன்னார் நகர மண்டபத்தில் இடம்பெற்றது. மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் முன்னிலையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு கலையருவியின் இயக்குனரும் மன்னார் சர்வமதப் பேரவையின் தலைவருமான அருட்திரு தமிழ் நேசன் அடிகளார் தலைமை வகித்தார்.

தனிநாயகம் அடிகளார் நினைவுப் பேருரையை யாழ்ப்பாணத்திலிருந்து வருகைதந்த செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் அவர்கள் வழங்கினார். "தமிழ் மொழியின் எதிர்காலம்" என்ற தலைப்பில் இந்நினைவுப் பேருரை இடம்பெற்றது.

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

வவுனியா தேசிய கல்வியில் கல்லூரியில் நடைபெற்ற

வருடாந்த கிறிஸ்தவ மாநாடு 2012

வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரியின் வருடாந்த கிறிஸ்தவ மாநாடு கடந்த யூலை மாதம் 21ஆம் திகதி காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரை இடம்பெற்றது. "மறை வாழ்வால் நிலைவாழ்வை நோக்கி" என்ற கருப்பொருளில் இம்மாநாடு நடைபெற்றது. கல்லூரியின் கிறிஸ்தவ மன்றத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இம்மாநாட்டில் மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை ஆசியுரை வழங்கினார். கல்லூரியின் பீடாதிபதி திரு. க. பேனாட் மற்றும் ஆன்மீகக்குரு அருட்திரு. போ. மதன்ராஜ் ஆகியோரின் வழிகாட்டலில் இம்மாநாடு சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.

வலம்புரிச் சங்கில் பவனி வந்த புனித அன்னம்மாள்

வங்காலைப் பங்கின் பாதுகாவலியாம் புனித அன்னம்மாள் திருவிழாவின்போது (யூலை 26) வலம்புரிச் சங்கு வடிவத்தில் அமைக்கப்பட்ட தேரில் புனித அன்னம்மாளின் திருச்சுருபவம் பவனியாக எடுத்துவரப்பட்டமை பலரது கவனத்தையும் ஈர்த்த ஒன்றாக அமைந்திருந்தது. பங்குத்தந்தை அருட்திரு. ஜெயபாலன் குரூஸ் அடிகளாரின் தலைமையில் பங்கு மக்களின் ஒத்துழைப்போடு வங்காலை பங்குத் திருவிழா சிறப்பாக இடம்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2012சைகளின்

மன்னா

மனப்பொழிவு

பதிப்பாசிரியர் பகர்வது

நமது குழந்தைகளின் மௌனக் குரல் கேட்கின்றதா?

"குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று" என குழந்தைகளை தெய்வநிலையில் வைத்துப் பார்க்கின்ற பண்பாட்டின் சொந்தக்காரர் நாம். பொருள், பண்டம், காணி, பூமி என்று நமக்கு பல செல்வங்கள் இருக்கலாம். ஆனால் எல்லாச் செல்வங்களிலும் மேலான செல்வம் குழந்தைச் செல்வமாகும். "குழந்தைகள் கடவுள் அருளும் செல்வங்கள்" என திருவிவிலியம் தெளிவாகக் குறிப்பிடுகின்றது. "குழந்தைகள் மனுக்குலத்தினுடைய நம்பிக்கையின் சின்னங்கள்" என திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் கூறினார். இத்தகைய அருமையும், பெருமையும் வாய்ந்த குழந்தைகள் - சிறுவர்கள் இன்று மிகவும் கொடுமையான ஆபத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

பாதுகாப்பற்ற நிலையில், முற்று முழுதாக மற்றவர்களில் தங்கி வாழும் இக்குழந்தைச் செல்வங்கள் இன்று பல்வேறு துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகின்றனர். இவர்களுக்கு ஏற்படுத்தப்படும் இந்தக் கொடுமையினால் வெறுமனே அவர்கள் உடல் ரீதியாக மட்டும் பாதிக்கப்படுவதில்லை. மாறாக மனரீதியாக அவர்களில் ஏற்படும் தாக்கம் அவர்களின் வாழ்நாள் முழுவதும் நீடிக்கின்றது. இதனால் பல்வேறு மனநிலைப் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன.

குழந்தைகள் பாலியல் துஷ்பிரயோகம் பற்றிய செய்திகள் என்றுமில்லாதவாறு இன்று மிகப்பெரும் அளவில் ஊடகங்களில் வெளிவந்து - கொண்டிருக்கின்றன. என்றுமில்லாதவாறு நாடுபூராவும் குழந்தைகள் துஸ்பிரயோகம் மிக வேகமாக அதிகரித்துவருகின்றது.

எங்களைக் காப்பாற்ற யாருமே இல்லையா என்று இந்த அப்பாவிக் குழந்தைகள் மௌனக் குரல் எழுப்புகின்றனர். குரலற்ற இக்குழந்தைகளுக்காக குரல் எழுப்புவது, எல்லா மட்டங்களிலும் இக்குழந்தைகளின் உரிமைகளையும், பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவது சமூக அக்கறையுள்ள அனைவரது கடமையாகும்.

சிறுவர் துஷ்பிரயோகம் என்பது இன்று நாளுக்கு நாள் அதிகரித்து வரும் ஒரு பாரிய சமூக மற்றும் மனிதாபிமானப் பிரச்சினையாக மாறியுள்ளது. ஊடகங்களில் வெளியாகும் செய்திகள், பொலிஸ் நிலையங்களுக்கு, நீதிமன்றங்களுக்கு கொண்டுவரப்படும் சம்பவங்கள் பத்து வீதமானவையே. மிகுதி தொண்ணூறு வீதமான சம்பவங்கள் வெளிவருவதில்லை. பல்வேறு காரணங்களுக்காக அவை மூடி மறைக்கப்படுகின்றன. "வெளியில் சென்றால்தான் பிள்ளைகளுக்கு பாதுகாப்பு இல்லை" என்ற காலம் போய் இன்று சொந்த வீட்டுக்குள்ளேயே குழந்தைகளுக்கு பாதுகாப்பு இல்லை என்ற நிலை உருவாகியுள்ளது. சொந்த மாமன், சித்தப்பா, அண்ணன் ஏன் பெற்ற தந்தைகூட தன் குழந்தையை துஸ்பிரயோகம் செய்கின்ற வக்கிரமான ஒரு கலாச்சாரத்திற்குள் நாம் சென்றுகொண்டிருப்பதை வேதனையோடு ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

சிறுவர் துஸ்பிரயோகம் தொடர்பான குரல்கள் இன்று எல்லா மட்டங்களிலும் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியுள்ளன. இத்தகைய பாதகச் செயல்களில் ஈடுபடுவோருக்கு மரண தண்டனை போன்ற மிகக்கடுமையான தண்டனைகள் வழங்கப்பட வெண்டும் என்ற கோரிக்கைகளும் எழுந்துள்ளன. தண்டனைகளால் மட்டும் இந்த பாரிய சமூகத்தீமையை நாம் முறியடிக்க முடியுமா? என்று நாம் ஆழமாகச் சிந்திக்க வேண்டும்.

நமது எதிர்கால நம்பிக்கை நட்சத்திரங்களான சிறுவரை மிகமோசமாக – மிக வேகமாகப் பாதித்துவரும் இந்தப் பிரச்சினை தொடர்பாக கிராம மட்டத்தில் பரந்த அளவிலான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். சிறுவர் துஷ்பிரயோகம் என்னும் கொடிய தீமையை, ஆபத்தை இல்லாதொழிப்பதற்கு சமூகத்தில் உள்ள அனைத்துத் தரப்பினரும் தத்தமது சக்திக்கு உட்பட்ட வகையில் தீவிரமாகச் செயலாற்ற வேண்டும்.

மீண்டும் மறுமடலில் வந்து சந்திக்கும்வரை
அன்புடன் - அருட்திரு தமிழ் நேசன்
மன்னா பதிப்பாசிரியர்

வாசகர் எண்ணங்கள்

என் இதயத்தில் இடம் பிடித்த காதலி

உறவே உயிரே என் அன்பு மன்னாவே,
உனக்கு என் வணக்கம்! மாதத்தில் ஒருமுறை மலரும் அன்பு மலர் நீ. உன்னை இரசிப்போரும் சுவைப்போரும் காதலிப்போரும் பலர். அதில் நானும் ஒருத்தி. நீ வெளியிடும் ஒவ்வொரு அம்சங்களும் அற்புதம். உன் பணி மன்னார் மண்ணில் மேலும் செழிப்புற இறைவனிடம் வரம் வேண்டி விடைபெறுகின்றேன்.

எ. பத்திநாதன் வதனா, வாழ்க்கைப்பெற்றான் கண்டல்.

தொடரட்டும் உங்கள் தமிழ்த் தொண்டு

வாழத்துடிக்கும் ஈழத்து மக்களின் வாழ்வு மீண்டும் புத்துயிர்பெற அயராதுழைக்கும் மன்னா ஆசிரியருக்கும் அனைத்து நல் உள்ளங்களுக்கும் நன்றி. எத்தனை நெருக்கடிகள் தொடர்ந்து அச்சுறுத்தினாலும் அஞ்சாதீர் என்ற இறைவார்த்தைக்கு ஏற்ப எமக்காகத் துணிந்து குரல் கொடுத்து வரும் எம் ஆயர் பெருந்தகைக்கும் நாம் நன்றி கூறுகின்றோம்.

அனைத்து நிலையிலும் பல்வேறு செய்திகளைச் சுடச்சுட தாங்கிவரும் மன்னா எமக்கு மகிழ்வைத் தருகின்றது. மன்னாவை அனைத்து மக்களும் வாங்கி வாசித்து பயன்பெறவேண்டும்.

மன்னார் வாழ் தமிழ் கத்தோலிக்க மக்கள் மட்டுமல்ல இலங்கையின் பல்வேறு திசைகளில் வாழும் கத்தோலிக்க மக்களும் வெளிநாடுகளில் உள்ளவர்களும் மன்னாவை ஆர்வத்தோடு வாங்கி வாசிக்கின்றார்கள் என்பதை அறியும்போது மகிழ்ச்சியாக உள்ளது. தொடரட்டும் தங்கள் அரும் பெரும் தமிழ்த்தொண்டு!

வி. அ. லெம்பேட், வங்காலை

உன் புனிதப் பயணம் தொடரட்டும்!

ஆர்வலர்களின் ஆர்வமே மன்னாவே! உன் ஆக்கங்கள் அனைத்தினாலும் ஆன்மீகத் தேடலின் அவசியத்தை அகிலத்திற்கு அணி செய்து காட்டுகிறாய். வேர்கள் நிலையற்றுவிட்டால் துளிர்கள் தளிர்ப்பதெப்படி? எழுத்தாக்கப் பயணத்தில் எல்லோருமே எல்லைக் கற்களாக இருக்க நீ மட்டும் பாதையானது எப்படி? உன் பணியின் பாதையில் எங்கள் பாதச் சுவட்டையும் பதித்துக்கொள். "புதியதோர் உலகம்" செய்யப் புறப்படத் தயாராக இருக்கும் எங்கள் எழுதுகோல்களை தாங்கிச்செல்லும் விழுதாக நீ மாறு. தூங்கிக்கிடக்கும் சமூகத்திற்கு விருட்சமாய் உன் பயணம் பலனளிக்கட்டும்.

அ. மேரி கொண்செப்ரா, மடுக்கோவில், மடு.

மன்னார் மறைமாவட்டம்

திருவழிபாட்டு நாட்காட்டி – 2012

ஓகஸ்ட்

04 - தூய வேளாங்கண்ணி திருவிழா - எல்லப்பர் மருதங்குளம்.
08 - தூய கன்னிமரியாவின் பிறப்பு விழா - நானாட்டான், மாவிலங்கேணி, கரிசல், இலுப்பைக்குளம், குஞ்சுக்குளம், ஓமந்தை, விடத்தல்தீவு, எழுத்தூர், சாளம்பன், நடுக்குடா, நொச்சிக்குளம், மாறாஇலுப்பை, காட்டாஸ்பத்திரி, தலைமன்னார் பியர், மூங்கில் முறிச்சான், பாலியாறு
12 - தூய வேளாங்கண்ணி திருவிழா - கட்டுக்கரை
14 - திருச்சிலுவை அருட்சகோதரிகளின் விழா
15 - வியாகுல அன்னை திருவிழா - அடம்பன்
17 - தூய வேளாங்கண்ணி திருவிழா - சாவற்கட்டு
21 - மன்னார் மறைமாவட்ட சர்வமத அருட்பணிமைய தினம்
22 - தூய சிந்தாத்துரை மாதா திருவிழா - பெரியமுறிப்பு
24 - தூய சிந்தாத்துரை மாதா திருவிழா - பாப்பாமோட்டை
28 - தூய வேளாங்கண்ணி மாதா திருவிழா - தாமரைக்குளம்
29 - தூய மிக்கேல் திருவிழா - தரவன்கோட்டை,
- தூய சவேரியார் திருவிழா - கோட்டக்குளம்.

கலாநிதி நீ. மரியசேவியர் அடிகளாரின் 50வது குருத்துவ பொன்விழாவை ஒட்டி எழுந்த

பாமாலை

பாடியவர் : *தேசகீர்த்தி – கலாபூஷணம் தேவதாசன் BA*

பணியே செய்வீர்

தாரணியோர் போற்றுகின்ற தாய்தமிழ்சேர் யாழ்ப்பாணம்
மாரணியும் மாலைபோடும் வேளையிலே – நேரசையால்
காப்பெடுத்து பாடுதற்கு கத்துநீர் ஆழியானேன்
யாப்பொன்றில் ஓதுகின்றேன் யான்!

கங்கைசூழ் இலங்கையின் கரையின் ஓர்பால்
கடலனைக்கும் நெய்தல்நில கடவுள் மைந்தன்
தங்கமாம் நெஞ்சுடையான் தரணி வென்றோன்
தலைநகரில் கலைபரப்பும் தர்ம வேந்தன்!
அங்கியதாம் வெள்ளையுடை அணிந்த தூயோன்
ஆற்றுகின்ற தொண்டெல்லாம் அகிலம் பேசும்
பங்கமுற கற்றுணந்தோன் பக்தி வீசும்
பாரெங்கும் இமயமென பணியே செய்வீர்!

திருமறையின் சுடராக திகழும் ஆசான்
தியோகு ஆண்டகையின் திலகம் நீதான்
குருவானாய் ஐம்பதாண்டு குமுத மானாய்!
குதுகலத்தில் மிதக்கின்றார் கூட்டம் தானே!
எருவானாய் கருவானாய்! யேசு பாதை
ஏந்தலுந்தன் சேவைகளை எழுத ஏலா
பரந்ததோர் அறிவையும்தான் பலரும் கண்டார்
பாங்காக நிலமெங்கும் பணியே செய்வீர்!

காலையிலே மலர்கின்ற கமலப் பூவோ!
காவியத்தின் நாயகனாய் கடமை செய்வீர்
மாலையிலே எழுகின்ற மதிதான் என்பேன்
மக்களுக்காய் வாழ்கின்ற மனித நேயம்!
சாலையென்ற கலைத்தூது சரிதை சாற்றும்
சகலரும்தான் அறிந்ததோர் சமய போதன்
பாலைமணல் ஊற்றாக பரமன் விட்டார்
பலகாலம் பகலவன்போல் பணியே செய்வீர்!

தேசிய சமாதானப் பேரவையின் நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ்

மன்னாரில் மக்கள் பேரவை உதயம்

மன்னாரில் முதன் முறையாக 'மாவட்ட மக்கள் பேரவை' என்ற அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. மன்னார் சர்வமதப் பேரவைச் செயற்பாடுகளின் வளர்ச்சிக் கடடமாகவே இது அமைக்கப்பட்டுள்ளது.

தேசிய சமாதானப் பேரவையில் நிகழ்ச்சித் திட்டத்திற்கமைய, ஐரோப்பிய ஒன்றியத்தின் அனுசரணையில், மன்னார் சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான வளங்கள் நிறுவனத்தின் (R.P.R) ஒத்துழைப்போடு இந்த மக்கள் பேரவை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட அமைப்புக்கள் இலங்கையின் ஏனைய 12 மாவட்டங்களிலும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்துவரும் இரண்டு ஆண்டுகளுக்கு இந்த அமைப்பு செயற்படும் என்றும் மதங்களுக்கிடையிலான ஒற்றுமை, இனங்களுக்கிடையிலான முரண்பாடு மற்றும் மாவட்டத்தின் சமாதான நடவடிக்கை என்பனவற்றில் இந்த அமைப்பு கூடுதல் கவனம் செலுத்தும் எனவும் இதன் இணைப்பாளரும் ஆர்.பி.ஆர் பணியாளருமான திரு அ. அரவிந்தன் தெரிவித்தார்.

இதன் தலைவராக மன்னார் மறைமாவட்ட சமூகத் தொடர்பு அருட்பணி மையம் கலையருவியின் இயக்குனரும், மன்னார் சர்வமதப் பேரவையின் தலைவரும், மன்னா பத்திரிகை ஆசிரியருமான அருட்பணி தமிழ் நேசன் அடிகளார் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டார். இந்த அமைப்பின் உபதலைவராக பொறியியலாளர் இராமகிருஸ்ணனும், செயலாளராக ஆளுநர் விருத்தாளர் மக்கள் காதரும், உப செயலாளராக மெதடிஸ்த முகாமைக்குரு அருட்திரு குணாளனும் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர். மன்னார் ஆர்.பி.ஆர் அமைப்பின் அநுசரணையில் இயங்கும் இந்த அமைப்பானது மக்கள் சக்தியை ஒன்றுதிரட்டி மாவட்டத்தில் சமாதானத்தை ஏற்படுத்துவதை தன் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

உண்மை உறைக்கும கமிலஸ்

(நன்றி - தி. மெசஞ்சர்)

மன்னாவில் விளம்பரம் செய்யுங்கள்

மன்னாவில் விளம்பரம் செய்ய விரும்புவோர் எம்மோடு தொடர்புகொள்ளலாம். குறைந்த கட்டணத்தில் நிறைந்த பலனைப் பெற மன்னா ஊடாக விளம்பரம் செய்யுங்கள்.

- மன்னா நிர்வாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனின் நன்நடத்தைக்கு ஆன்மீகம் அடிப்படையானது

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி கிறிஸ்தவ மாநாட்டில் பீடாதிபதி திரு. க. பேனாட்

ஆன்மீகம் மனிதனின் நல்ல நடத்தைக்கு அடிப்படையானது. இதனால்தான் உளவியல் பற்றி ஆய்வுசெய்த ஆய்வாளர்கள் ஆன்மா பற்றிய ஆய்வே உளவியல் என்று குறிப்பிட்டுள்ளனர். மனிதனின் நல்ல நடத்தைக்கு ஆன்மீகத்தின் அவசியம் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது என வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரியின் பீடாதிபதி திரு. க. பேனாட் தெரிவித்தார். வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் கிறிஸ்தவ மன்றம் இவ்வாண்டு "மறைவாழ்வால் நிலைவாழ்வை நோக்கி...." என்ற தொனிப்பொருளுடன் ஏற்பாடு செய்திருந்த "கிறிஸ்தவ மாநாடு 2012" நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் கூறியதாவது,

சமயங்கள் ஆன்மீகம் பற்றி அதிகம் அக்கறை எடுத்துக்கொள்கின்றன. இதற்காக கத்தோலிக்க சமயம் மறைக்கல்வியின் தேவையை முக்கியப்படுத்துகின்றது. மன்னார், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மறைமாவட்டங்கள் முதல் தடவையாக இணைந்து இவ்வாண்டை "மறைக்கல்வி ஆண்டாக" பிரகடனப்படுத்தி செயற்பட்டு வருகின்றன. அப்பிரகடனத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் கிறிஸ்தவ மன்றமும் தனது பங்கிற்கு இம்மாநாட்டை முன்னெடுத்துள்ளது எனக் குறிப்பிட்டார்.



நோன்புப் பெருநாள் வாழ்த்துக்கள்!

நோன்புப் பெருநாளைக் கொண்டாடும் (ஒகஸ்ட் 19) அனைத்து இஸ்லாமிய சகோதரர்களுக்கும் எமது நல் வாழ்த்துக்களை மிகுந்த அன்போடு தெரிவித்துக்கொள்கிறோம். இம்மகிழ்வான புனித நாளில் நாட்டின் இன, மத நல்லிணக்கத்திற்காக பிரார்த்திப்போம். - மன்னா நிர்வாகம்

மன்னாரில் '1023 வருடங்கள்' குறுந்திரைப்படம் தயாராகிறது!

இலங்கை தமிழ் சினிமா மற்றும் குறுந்திரைப்பட வரலாற்றில் முதல் முறையாக, மனித இயற்கையை மாற்ற முயற்சிக்கும் விஞ்ஞான தொழில் நுட்பமும் அதனை எதிர்க்கும் ஒருசிலரின் ஆராய்ச்சியும் எந்த அளவிற்கு வெற்றி அளித்தது என்பதை நவீன கால காதல் கதையுடன் தெளிவுபடுத்தும் வகையில் மிக வேகமாக உருவாகிக்கொண்டிருக்கும் குறுந்திரைப்படம் "1023 வருடங்கள்"

இக்குறுந்திரைப்படத்தில் கணணி வரைகலை (Computer Graphic) தொழில்நுட்பத்தினை சரியான முறையில் பயன்படுத்தியுள்ளனர்.

மன்னார் பள்ளிமுனை St. Lucia Production டிலான் மற்றும் Asha Production நிரஞ்சன் ஆகியோர் தயாரிக்கும் "1023 வருடங்கள்" குறுந்திரைப்படத்தினை "பட்டாசு" இயக்குனர் த. ஷமிதன் இயக்குகிறார்.

பற்றீசியன் பேருலா

கல்லூரியின் பழமையையும், வரலாற்றுப் புகழையும் சாதனைகளையும் புலப்படுத்தும் விழா

யாழ் மாநகர முதல்வர் புகழாரம்

வடபுல கல்வி வரலாற்றில் பற்றீசியன் பேருலா (Patricians Walk) எனப்படுகின்ற இத்தகையதொரு நிகழ்வு முதல் தடவையாக இடம்பெறும் ஒரு நிகழ்வாகும். யாழ் மண்ணின் பெருமை படைத்த கல்லூரிகளில் ஒன்றாகத் திகழும் சென். பற்றிக்ஸ் கல்லூரிச் சமூகம் தமது கல்லூரித் தாய்க்கு எடுக்கும் இவ்விழாவானது கல்லூரியின் பழமையையும், வரலாற்றுப் புகழையும், சாதனைகளையும் புலப்படுத்துவதாகும் என யாழ் மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா குறிப்பிட்டார்.

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

வெள்ளி விழாக் காணும் ரொறன்ரோ தமிழ் கத்தோலிக்க சமூகம்

கனடா நாட்டில் உள்ள ரொறன்ரோ நகர் கத்தோலிக்க மக்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட 'ரொறன்ரோ தமிழ் கத்தோலிக்க சமூகம்' (Tamil Catholic Community of Toronto- TCCT) என்னும் அமைப்பு ஏற்படுத்தப்பட்டு 25 ஆண்டுகள் (1987 - 2012) நிறைவுறுகின்றது. இம்மகிழ்ச்சியான வேளையில் மன்னார் மறைமாவட்டத்தின் வாழ்த்துக்களையும் செபங்களையும் இந்த அமைப்புக்கு மன்னா தெரிவித்து மகிழ்கின்றது.

இச்சமூகம் இன்று ரொறன்ரோ உயர் மறைமாவட்டத்தினாலும், அரசாங்கத்தினாலும் அங்கீகரிக்கப்பட்டதொன்றாக இயங்கி வருகின்றது. இந்த அமைப்பின் தலைவராக திரு. அன்ரன் சின்னராசா பிலிப் அவர்கள் இப்போது செயற்படுகின்றார். இச்சமூகத்தின் வெள்ளி விழாவையொட்டி சிறப்பு மலர் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. அத்துடன் இச்சமூகத்தினர் மிலண்ட் திருத்தலத்திற்கு பயணம் செய்த 25 ஆண்டு நினைவாக இந்த அமைப்பினால் அங்கு மருதமடு அன்னைக்கு அர்ப்பணிக்கப்பட்ட திருப்பீடம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

ரொறன்ரோ தமிழ் கத்தோலிக்க சமூகத்தின் தலைவர் அன்ரன் சின்னராசா பிலிப்

இலங்கை வேதாகமச் சங்கத்தின் 200வது ஆண்டு நிறைவு விழா

கொழும்பில் உள்ள இலங்கை வேதாகமச் சங்கத்தின் பிரமாண்டமான தலைமையகக் கட்டிடம்

இலங்கை வேதாகமச் சங்கத்தின் (Ceylon Bible Society) 200வது ஆண்டு நிறைவு விழா கொழும்பில் கடந்த 01.08.2012 அன்று கொண்டாடப்பட்டது.

இவ்விழாவின் ஆரம்பத்தில் கர்தினால் மல்கம் ரஞ்சித் தலைமையில் நடைபெற்ற நன்றி வழிபாட்டில் கத்தோலிக்க ஆயர்கள், குருக்கள் துறவியர் பொது நிலையினர் மற்றும் பிற கிறிஸ்தவ சபையினர் பலர் கலந்துகொண்டனர்.

பிரித்தானிய காலனி ஆதிக்கத்தில் இருந்த இலங்கையில் 1812ம் ஆண்டு இலங்கை வேதாகமச் சங்கம் துவக்கப்பட்டது. விவிலியத்தை மொழிபெயர்ப்பு செய்தல், அச்சிடுதல், விநியோகம் செய்தல் ஆகிய செயல்பாடுகளில் இச்சங்கம் கடந்த 200 ஆண்டுகள் ஈடுபட்டுள்ளது.

இவ்விழாவையொட்டி, தமிழிலும் சிங்களத்திலும் 10,000 விவிலியப் பிரதிகளை விநியோகம் செய்யும் ஒரு திட்டத்தில் இச்சங்கம் தற்போது ஈடுபட்டுள்ளது.

திருவுளச்சபைக்கு ஓர் புதிய குரு

இறைவனின் திருவுளச் சபையை சேர்ந்த அருட்சகோதரன் வரப்பிரகாசம் அலன் அவர்கள் எதிர்வரும் 22.08.2012 புதன்கிழமை யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் யாழ் அடைக்கல நாயகி ஆலயத்தில் காலை 10.00 மணிக்குக் குருவாக திருநிலைப்படுத்தப்படவுள்ளார்.

இவர் இத்தாவில் புனித பார்பரம்மாள் ஆலயத்தைச் சேர்ந்தவர். தனது முதல் திருப்பலியை மேற்படி ஆலயத்தில் ஒகஸ்ட் 25ஆம் திகதி ஒப்புக்கொடுப்பார். புதிய குருவுக்கு மன்னா தனது வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவித்து மகிழ்கின்றது.

மன்னார் பிரஜைகள் குழுவின் மனிதநேயப் பணிகள்

கடந்த யுத்தத்தினால் இடம்பெயர்ந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் தமது உடமைகளை இழந்து, உரிமைகளை இழந்து, முக்கிய ஆவணங்களை இழந்து, பெரிதும் துன்பப்படுவதை உணர்ந்த மன்னார் பிரஜைகள் குழு கடந்த ஆறு மாதங்களாக பல்வேறுபட்ட துயர் துடைப்புப் பணிகளில் ஈடுபட்டுவருகின்றது.

இதனடிப்படையில் 12 வலுவூட்டல் பயிற்சிகள் பாலப்பெருமாள்கட்டு, சன்னார், இரணை இலுப்பைக்குளம், குஞ்சிக்குளம், தலைமன்னார், பாப்பாமோட்டை, மடுவீதி, கூராய், பெரிய பண்டிவிரிச்சான், அடம்பன், முள்ளிக்குளம், கன்னாட்டி ஆகிய இடங்களில் நடைபெற்றன. இதில் 3ற்கும் மேற்பட்ட மாதர் சங்கங்கள், கிராமிய அமைப்புக்கள், ஊனமுற்றோர், சிறையில் இருந்து மீண்டோர், குடும்ப உறவினரை இழந்த உறுப்பினர்கள் போன்றோர் கலந்து பயன்பெற்றனர்.

மேலும் முக்கிய ஆவணங்களை பெறுவதற்காக ஆறு நடமாடும் சேவை மன்னார் அரச அதிபர், உதவி அரசாங்க அதிபர், மாவட்ட பதிவாளர் போன்றோரின் உதவியுடன் ஆண்டாங்குளம், கள்ளியடி, இரண்டை இலுப்பைக்குளம், தலைமன்னார், மடுவீதி, வெள்ளாங்குளம் ஆகிய இடங்களில் இடம்பெற்றன. இதன்மூலம் 1,416 பொதுமக்கள் தமது முக்கிய ஆவணங்களான இறப்பு, பிறப்பு, திருமணம் ஆகிய அத்தாட்சிப் பத்திரங்களுக்கு விண்ணப்பித்து 52% ஆவணங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. 31% மானோருக்கு பதிவுகள் இல்லை எனப் பதில் கடிதம் வந்துள்ளது, இவர்கள் தமது பகுதி பிரதேச செயலாளர் மூலமும், மாவட்ட பதிவாளர் மூலமும் மீண்டும் விண்ணப்பித்து புதிய பதிவுகளை மேற்கொள்ளுமாறு பிரஜைகள் குழு திட்ட உத்தியோகத்தர் அறியத் தருகின்றார்.

மேலும் நடமாடும் சேவையின் மூலம் 30 ற்கும் மேற்பட்ட காலம் கடந்த திருமணங்களும், 14 ற்கும் மேற்பட்ட காலங்கடந்த பிறப்புக்களும் பதிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இத்திட்டத்திற்கு உதவி வழங்கிய சகல பாடசாலை அதிபர்களுக்கும், அரச உத்தியோகத்தர்களுக்கும், பிரஜைகள் குழு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றது.

தகவல் : திரு, சின்கிலேயர் பீற்றர், திட்ட உத்தியோகத்தர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கிறிஸ்தவ விசுவாச வாழ்வின் சமகாலப் போக்கினையும், நோக்கினையும் நிதானத்தோடு ஆய்வு செய்து பார்க்கவேண்டும்

சுவிஸ் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியக இயக்குனர் அருட்பணியாளர் அந்தோனிதாஸ் டலிமா

கத்தோலிக்க மக்களாகிய நாம் நமது கிறிஸ்தவ விசுவாச வாழ்வின் சமகாலப் போக்கினையும், நோக்கினையும் நிதானத்தோடு ஆய்வு செய்து பார்க்கவேண்டியது காலத்தின் கட்டாயம். பல்வேறு காரணங்களை முன்னிலைப்படுத்தி விசுவாச, ஆன்மீக வாழ்வையும், செயற்பாட்டினையும் இரண்டாம் நிலைக்கு உட்படுத்தும் அபாயகரமான மனப்போக்குகள் இன்று பெரும் கவலையளிப்பதாக உள்ளன என்று மன்னார் மறைமாவட்டக் குருவும் தற்போது சுவிஸ் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தின் இயக்குனருமாகப் பணிபுரியும் அருட்பணியாளர் அந்தோனிதாஸ் டலிமா தெரிவித்தார். சுவிஸ் தமிழ் ஆன்மீகப் பணியகத்திலிருந்து வெளிவரும் 'இறை ஒளி' என்ற பத்திரிகையின் சித்திரை - வைகாசி இதழின் ஆசிரிய தலையங்கத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

பிறந்த மண்ணை விட்டு அந்நிய மண்ணிலே அடைக்கலம் பெற்ற நாம், தொடர்ந்தும் நமக்குள்ளே, நம் சொந்த வாழ்விலே போராட்டங்களோடுதான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஏத்தகைய சூழ்நிலையில், எத்தகைய எதிர்பார்ப்போடு, எதற்காக இம்மண்ணிலே அடைக்கலம் புகுந்தோம் என்பதை எண்ணிப்பார்ப்பதும், கடந்து சென்ற காலங்களின் கசப்பானதாகவோ, இனிப்பானதாகவே அமைந்த நிகழ்வுகளை திருப்பிப் பார்ப்பதும் நாம் முயன்று பயில வேண்டிய, முன்னேறவேண்டிய இலக்குகளை நமக்குத் தெளிவாக்கும். அதுபோல அதைவிட மேலாக இப்பொழுது நாம் வாழ்ந்துகொண்டிருக்கும் சமய, சமூகப் பண்பாட்டு வாழ்வின் பரிணாமங்களையும், பரிமாணங்களையும் அளவீடு செய்து பார்க்கும் மிகமிக முக்கியமான தேவையொன்று நமக்கு இருப்பதை நாம் மறந்துவிட முடியாது.

இணைந்து வாழுதல் ஒத்துப்போதல் என்னும் நிலைப்பாடுகள் உண்மையான சமய, சமூக விழுமியங்களைப் புறந்தள்ளல் அல்லது மாற்றியமைத்தல் அல்லது மறந்து வாழுதல் என்று அர்த்தமாகாது. சரியான புரிதல்களோடும், மனப்பக்குவத்தோடும் நமக்கே சொந்தமான சமூக, சமயப் பண்பாட்டுக் கோலங்களைப் பக்குவப்படுத்தி பாதுகாத்து வாழ்வதன் வழியாக இணைந்து வாழுதல் என்னும் சிந்தனை வலுப்பெறும்.

கிறிஸ்துவோடு இணைந்த நிலையில் நம் தமிழ் கத்தோலிக்க விசுவாச வாழ்வையும், தமிழ்க் கத்தோலிக்க பாரம்பரிய விசுவாச அடையாளங்களையும் ஒன்றிணைந்து பாதுகாப்பதும், வளர்ப்பதும் நமது தலையாகிய கடமையாகும்,

உங்களதும், உங்கள் குடும்ப வழிமரபினரதும் விசுவாச வாழ்வு மிகவும் ஆழமானது என்பது அனுபவரீதியாகக் கண்டுணர்ந்த ஒரு உண்மை. சொந்த நாட்டில் வாழ்ந்தபோது நீங்கள் உங்கள் பங்குகளில் எவ்வளவு விசுவாச ஆர்வத்தோடும், அர்ப்பணிப்போடும் செயற்பட்டீர்கள் என்பதை இப்போது ஒருகணம் மீளாய்வு செய்து பாருங்கள். ஆனால் இம் மண்ணில் அத்தகைய உன்னதமான உங்களுடைய அர்ப்பணிப்பு பல்வேறு காரணங்களால் சிதைக்கப்பட்டிருப்பதைக் கண்டு வேதனையடைய வேண்டியுள்ளது. இந்நிலையில் உங்களுக்கு இறைவன் தந்த அருள் வளங்களையும், ஏனைய திறமைகளையும் கத்தோலிக்க திருச்சபையின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்தும் நல்லதொரு அர்ப்பணத்தைத் தொடர்ந்தும் ஆற்ற உங்களை அன்போடும், மகிழ்வோடும், இறைவன் அழைக்கின்றார் என்பதை ஆழமாக உணர்ந்துகொள்ளுங்கள்.

இலங்கையின் முதலாவது இணைப்பேராலயம் புதிய மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் பேராலயமாகப் பிரகடனம்

திருகோணமலை மறைமாவட்டம் 1893ம் ஆண்டு உருவானது. இதன் பின்னர் 1965இல் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை நிர்வாக மாவட்டங்கள் இணைந்து திருகோணமலை மட்டக்களப்பு மறைமாவட்டம் எனப் பெயர் பெற்றது. இவ்வாறு இணைந்து செயற்பட்ட இம்மறைமாவட்டத்தில் மட்டக்களப்பு புனித மரியாள் ஆலயம் இணைப்பேராலயம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. 03.07.2012 அன்று திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பரின் தீர்மானத்தின்படி பாப்பரசரின் இலங்கைக்கான பிரதிநிதி பேரருட்தந்தை யோசப் ஸ்பிற்றரி ஆண்டகை மட்டக்களப்பினை தனி மறைமாவட்டமாக பிரகடனப்படுத்தியதுடன் 2008ல் ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டு திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்ட துணை ஆயராக நியமிக்கப்பட்ட பேரருட்தந்தை யோசப் பொன்னையா ஆண்டகை அவர்களை மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் முதல் ஆயராக நியமித்துள்ளார். இத்துடன் எமது இணைப்பேராலயம் தற்போது பேராலயமாக உயர்த்தப்பட்டுள்ளதையும் தெரிவித்துள்ளார். இந்த மகிழ்வான நிகழ்வுகள் யாவும் செப்ரெம்பர் திங்கள் 23ம் திகதி திருச்சடங்கின் பின்னர் அதிகார பூர்வமாக பிரகடனப்படுத்தப்பட்டு பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட - விருக்கின்றன.

எனவே 204 வருடங்கள் வரலாறு (1808-2012) கொண்ட இவ்வாலயத்தை பல வழிகளிலும் புனரமைக்க வேண்டிய அவசிய தேவைகள் இனங்காணப்பட்டுள்ளன. பங்குத்தந்தையர்கள் பங்குமக்களுடன் இணைந்து 2012 செப்ரம்பர் 23ல் கொண்டாடப்படவுள்ள வரலாற்று நிகழ்வான புதிய ஆயர் பதவியேற்பு, பேராலய பிரகடனம் ஆகிய வைபவங்களை சிறப்பாகக் கொண்டாட ஆயத்தங்களை மேற்கொண்டுள்ளனர்.

இந்த வரலாற்று நிகழ்வுகள் இச்சந்தர்ப்பத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் எம் அனைவருக்கும் ஆசீர்வாதம் நிரம்பிய அருட்கொடைகளாகும். இந்த ஆசீர்வாதத்தில் தாங்களும் இணைந்துகொண்டு பங்களிப்பு நல்கி மட்டக்களப்புக்கும் புளியந்தீவுப்பங்கிற்கும் பெருமை சேர்க்க உங்கள் நன்கொடைகளை எமது வங்கிக் கணக்குக்கு நல் உள்ளத்தோடும் தாராள மனத்தோடும் அனுப்பிவைக்குமாறு உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகொள்ள:- தேசிய சேமிப்பு வங்கி - மட்டக்களப்பு, பங்கு மேய்ப்புப்பணிச்சபை க/கு இல. 1-0021-0348562
புனித மரியாள் இணைப் பேராலயம் - புளியந்தீவு, மட்டக்களப்பு.
மேலதிக தகவல்களுக்கு:- **: 065 2222226, Parish Priest, Rev. Fr. J. S. Moraes**

FB: BT/ST.Marys Cathedral /ST.Marys Cathedral,
E-mail: maryscathedral1808@gmail.com
Website: www.stmaryscathedralbatti.org

காலங்களின் தேவைகளுக்குரிய முறையில் பணியாற்றி உயர்ந்து நிற்கும் ஜேர்மன் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம்

ஜேர்மனிலிருந்து அருட்திரு. பெனற் அடிகளார்

ஜேர்மன் வாழ் தமிழ்க் கத்தோலிக்க மக்களின் ஆன்மீகப் பயணத்தின் வழிகாட்டியான ஜேர்மன் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம் 25 ஆண்டு நிறைவைக் கண்டு கொண்டதில் தமிழ்க் கத்தோலிக்கன் என்ற வகையில் நானும் மன மகிழ்வுடன் வாழ்த்துகின்றேன் என யாழ் மறைமாவட்டக் குருவும் தற்போதைய ஜேர்மன் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தின் இயக்குனருமான அருட்திரு. அந்தனி பெனாண்டோ பெனற் அவர்கள் தெரிவித்தார். தொடுவானம் இதழின் ஆசிரிய தலையங்கத்திலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கடந்த காலத்திலும் நிகழ் காலத்திலும் பணியகத்தின் வளர்ச்சிக்கு வேர்களாகவும், விழுதுகளாகவும் அமைந்து அரும்பாடுபட்ட, பாடுபடும் தொடர்பாளர்கள், பணிச்சபை உறுப்பினர்கள் மற்றும் பொதுநிலையினர் ஆகியோரை மாத்திரமன்றி இலைமறை காயாக நின்று செயற்படுவோரையும் குறிப்பாக எம் மறை சாராதவர்களையும் பாராட்டுகின்றேன்; இறையாசீர் வேண்டுகின்றேன். அவ்வாறான தன்னலமற்ற பணி புரிந்து இறையடி சேர்ந்தோரையும் இக்கணம் நினைவு கூருகின்றேன்.

எப்படி இந்த ஜே.த.க.ஆ. பணியகம் ஆரம்பமானது? வடிவம் பெற்றது? என்பது பற்றி மற்றவர்களிடம் கேட்டு அறிந்ததில் இருந்தும் தொடுவானம் மற்றும் ஏனைய ஆவணங்களில் இருந்தும் படித்தது போலவே "ஆயன் இல்லாத ஆடுகள் போல் அவர்கள் இருந்ததால், அவர்கள்மீது இறைவன் இரங்கி தமது பணியாளர்களை அனுப்பி, அவர்களை வழிநடத்தினார்" என்பது வெள்ளிடை மலை!

இவ்விறைவாக்கிற்கு அமைவாக, அருட்கலாநிதி அ. பி. யெயசேகரம் அடிகளார் பல உயர் அதிகாரிகளின் கை கொடுத்தலோடும் பல நிலைத் தோழர்களின் ஒத்துழைப்போடும் தனக்கே உரிய பாணியில் இதை ஆரம்பித்து நடத்தி வந்தார். எத்தனையோ இடர்கள், பாரிய எதிர்வுகள், எதிர்ப்புகள், இரவு பகல் பாராத நெடிய பயணங்கள், புரிந்துணர்வு இல்லாமை போன்ற முட்களின் நடுவே பணியகத்தை வளர்த்தார் என்பது பாராட்டுக்குரியது. அவரோடு தோளோடு தோள் கொடுத்தவர்களும் பாராட்டுக்குரியவர்களே. அதேபோல், 1983ன் தொடக்கப் பகுதியில் மக்களோடு மக்களாக வாழ்ந்து, மக்களின் ஆன்மீக, சமூக சேவை புரிந்தவர்களையும் இந்நேரத்தில் நினைவுகூருகின்றோம்.

ஆரம்ப காலம் முதல் இப்பணியகம் சமய வேறுபாடின்றி இங்குள்ள மக்களுக்கு உதவியது மட்டுமல்லாது, எமது புலத்தின்மீது அக்கறையும் ஆவலும் கொண்டு, குரல் எழுப்பி உரிமையுடன் செயற்பட்டதும் காலத்தால் மறக்க முடியாது. காலத்தின் தேவை அறிந்து, மக்களுக்கு பணி புரிவது திருச்சபையில் இன்றியமையாதது. அதை வத்திக்கான் சங்க ஏடும் வலியுறுத்துகிறது. அவரைத் தொடர்ந்து பொறுப்பேற்ற குருக்களின் காலத்தில், மக்களின் வாழ்க்கை நிலைகளும் அவர்களின் தேவைகளும் சற்று மாறுபட்டதாகவே இருந்தன. பிரிந்திருந்த குடும்பங்கள் ஒன்றித்தன. வயதான பெற்றோர்கள் பிள்ளைகளுடன் தங்கி வாழ இங்கு வந்து சேர்ந்தார்கள். குடும்ப எண்ணிக்கைகள் பெருகின. பிள்ளைகள் இளைஞர்களாகி இரண்டாம் தலைமுறையினராக வடிவம் பெற்றனர். எனவே, இக்கால கட்டத்தில் பணியகத்தின் சேவையும் பல புதிய வடிவங்களை எடுத்தன. பங்குகள் பல தோன்றின. பல பங்குச் செயற்பாடுகள் உருவெடுத்தன. பல புதிய முன்னெடுப்புக்கள் செயற்படுத்தப்பட்டன. அவை யாவும் பாராட்டுக்குரியவையே.

மேலும் தாயகத்தின் தேவைகளை உணர்ந்து, அதாவது இலங்கைத் தமிழ் திருச்சபையினரின் சமூகப்பணிகளையும் கருத்திற்கொண்டு இங்கிருக்கும் மக்களைப் பல வழிகளில் ஈடுபடுத்தி, புலத்தில் துயரப்பட்ட மக்களின் தேவைகளில் தொடக்க காலத்தில் இருந்து உதவியது பாராட்டுதலுக்குரியது. நான் மானிப்பாயிலும் , கிளிநொச்சியிலும் பங்குத் தந்தையாக இருந்தபோது இப்பணியகத்தின் உதவியைப் பெற்று எம் மக்களுக்கு உதவியதை என்னால் மறக்க முடியாது.

இருபத்தைந்தாம் ஆண்டில் மகிழ்ந்து பூரிப்படையும் நாம், எமது எதிர்காலத்திலும் அதன் தேவைகளை இனம் கண்டு செயற்பட அழைக்கப்பட்டுள்ளோம். அவ்வாறு செயற்பட எத்தனிக்கும்போது எதிர்கொள்ளும் மாற்றங்களுக்கு எங்களை நாமே ஏற்புடையவர்களாக்க வேண்டும். அதாவது புதிய தேவைகளில் பழமை வாய்ந்த எம்மை ஈடுபடுத்தும்போது உரசல்கள், வேதனை உணர்வுகள், புறக்கணிப்புக்கள் போன்றவை எழுகின்றன. அவை வேதனையானவைதான். ஆனால், தவிர்க்க முடியாதவை. அத்தகைய சவால்களுக்கு முகம் கொடுத்து ஆன்மீகத்தில் முன்னேற முயற்சிப்போம். எமது ஆசிய, தமிழ்ப் பண்பாட்டுக்குரிய முறையில் எமது பாரம்பரிய கத்தோலிக்க விழுமியங்களை நாம் ஐரோப்பிய மண்ணின் தன்மைக்குரிய கனகாத்திரத்தில் இழந்துவிட முடியாது. ஆனால், ஐரோப்பிய மண்ணின் சிறந்த நற்பண்புகளுடன் இணைத்து வாழ்வதே எமக்கு முன்னே வைக்கப்பட்டுள்ள பொது அறைகூவல் ஆகும். முயற்சிப்போம், வெல்லுவோம், இறையரசை நிலைநாட்டுவோம்.

குருக்கள் நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ள பிரம்மஶ்ரீ தர்மகுமார சர்மா அவர்களை வாழ்த்துகிறோம்

மன்னார் இந்து சமயத்தின் வந்தனைக்குரிய பிரம்மஶ்ரீ தர்மகுமார சர்மா அவர்கள் ஆச்சார்ய அபிஷேகம் செய்யப்பட்டு குருக்கள் நிலைக்கு உயர்வடைந்தார். கடந்த 15.07.2012 அன்று ஞாயிற்றுக்கிழமை காலையில் இப்புனித ஐதீக நிகழ்வு பேசாலையில் இடம்பெற்றது.

சிவஶ்ரீ மகாதேவ ஐயர், ஶ்ரீ ராஜாம்பாள் தம்பதிகளின் புதல்வராகிய இவர் பேசாலை ஶ்ரீ சிவ சுப்பிரமணிய சுவாமி ஆலயத்தின் பிரதம குருவாகத் திகழ்கிறார். அத்துடன் வங்காலைப்பாடு ஶ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், காட்டாஸ்பத்திரி ஶ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் போன்றவற்றில் விஷேட உற்சவங்களையும் கிருத்தியங்களையும் ஏற்று செவ்வனே நடத்தி வருபவராக இருக்கிறார்.

பிரம்மஶ்ரீ நிலையில் நோ்த்தியான ஐதீகக் கடமைகளைப் புரிந்துவந்த தனது தலமாகிய ஶ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்திலேயே ஆர்ச்சார்ய அபிஷேகம் பெற்று சிவஶ்ரீயாக உயரும் பேறுபெற்றுள்ளார். சிவஶ்ரீயாக உயர்ந்துள்ள ஶ்ரீ தர்மகுமார சர்மா அவர்கள் சமுகத்திலும் ஈடுபாடு கொண்டு சிரமதானம், கல்வி, இலக்கியம், மொழி ஆகிய துறைகளிலும் தொண்டாற்றி வருவதால் மன்னார் மக்களின் மதிப்பிற்கும், அன்புக்கும் உரியவராக விளங்கி வருகிறார். அன்னாரை மன்னார் ஆயர், குருக்கள், இறைமக்கள் சார்பாக மன்னா வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

இயேசுவின் மீட்புத்திட்டத்திலே புனித அன்னம்மாளையும் கடவுள் நினைவுகூர்ந்து பங்களித்திருக்கின்றார்

வங்காலை புனித அன்னம்மாள் திருவிழாவில் அருட்திரு. ரூபன் பெனாண்டோ

தன் மகள் மரியாளை மடியிலே தாங்கியவளாக அன்னமாள் சித்தரிக்கப்படுகின்றாள். அதாவது இயேசு மீட்பரின் மீட்புத்திட்டத்திலே கடவுள் அன்னம்மாளையும் நினைவுகூர்ந்து பங்களித்திருக்கின்றார் என்பதை இது குறிக்கின்றது. அன்னம்மாள் பல விடயங்களிலே மரியாளுக்கு கற்பிப்பதுபோல உருவகப்படுத்தப்பட்டிருக்கின்றார். அதாவது கடவுளின் திருச்சட்டங்களை தன் மகளுக்கு சொல்லிக் கொடுத்து கடவுளின் திருவுளத்தை ஆய்ந்தறியப் பழக்கியிருக்கின்றார் என மடுத்திருப்பதியின் உதவிப் பரிபாலகர் அருட்திரு. ரூபன் பெனாண்டோ கூறினார். வங்காலை புனித அன்னம்மாள் ஆலய வருடாந்த திருவிழாத் திருப்பலியில் மறையுரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். ரூபன் அடிகளார் தனது மறையுரையில் மேலும் தெரிவித்ததாவது:

திருவிவிலியத்திலே வருகின்ற திருமுறை நூல்களுக்குள்ளே அன்னாளைப் பற்றீயோ அவர் கணவர் சுவக்கீனைப்பற்றீயோ எதுவும் சொல்லப்படவில்லை. ஆனால் வேதாகமத்தின் தொகுப்பிலே கொள்ளப்படாத அதேவேளை திருச்சபைத் தாயானவள் பாரம்பரியமாகக்கொள்கின்ற மறைவு நூல்கள் (Apocryphal writings) அதாவது புறோட்டோ எவான்செலியும் (Proto Evangelium) என்கின்ற தொகுப்பு நூல்களை திருச்சபை பாரம்பரியமாய்க் கடைப்பிடித்து வருகின்றது.

இந்த மறைவு நூல்களுள் ஒன்றான தூய யாக்கோபு எழுதிய நற்செய்தியிலேயே அன்னாளைப்பற்றியும் அவர் கணவரான சுவக்கீனைப் பற்றியும் நாம் தெரிந்துகொள்ள முடிகின்றது. தூய அன்னம்மாள் பெத்தலேமிலே தாவீதின் மரபிலே தோன்றியவர். இவர் கலிலேயாவிலுள்ள நாசரேத்து ஊரைச் சேர்ந்த (யோக்கிம்) சுவக்கீன் என்பவருக்கு திருமணம் முடித்துக்கொடுக்கப்பட்டார். சுவக்கீன் பலியிடுவதற்காய் ஆட்டுக்கடாக்களை தேவாலயத்திலே தயார் செய்து கொடுக்கின்றவர். ஒரு நாள் "பிள்ளைகளில்லாத இந்த மலடன் எப்படி பலியிடலாம்? என்று இவரை பலரும் பரிகாசம் பண்ணினார்கள். வேதனையோடு சுவக்கீன் பாலைவனத்திற்குப் போய் உண்ணா நோன்பிருந்து மன்றாடினார்.

அதேவேளையிலே கணவனின் துயரத்தையும் அவர் துயரப்படுவதற்கு தானும் காரணமாகிவிட்டேனே என்று உணர்ந்தும் வேதனைப்பட்ட அன்னா கண்ணீர் சிந்தி இந்த இழிநிலையை தன்னிடமிருந்து அகற்றுமாறு இடைவிடாமல் ஜெபித்துவந்தார். இருவரின் ஜெபவல்லமையினால் அவர்களின் கண்ணீரை தன்னுடைய தோற்பையிலே சேர்த்து வைத்த கடவுள் தன்னுடைய முப்பெரும் தூதருள் ஒருவராகிய கபிரியேல் தூதரை அனுப்பி அவர்களுக்கு ஒரு பெண் பிள்ளைப்பாக்கியம் உண்டுபண்ணப்பட்டிருப்பதாகவும் அதற்கு மரியா (மிரியம்) என்று பெயரிடுமாறும் கேட்டுக்கொள்கின்றார்.

தங்களுக்குப் பிறந்த குழந்தையை 04 வயதிலேயே ஆலயத்திலே அப்போது தலைமைக்குருவாய் இருந்த சக்கரியாவிடம் (ஸ்நாபக யோவானின் தந்தை) ஒப்படைக்கின்றார்கள். அந்தக் குழந்தை 12 வயதுவரை ஆலயத்திலேயே அர்ப்பணிக்கப்பட்டு வளர்க்கப்பட்டு வந்தது. 14 வயது நடக்கின்றபோது மரியாளை யோசேப்பு என்பவருக்கு மணம் முடித்துக்கொடுத்தார்கள்.

தூய அன்னமாளை அன்னையாம் திருச்சபை தாய்மாரின், பெண்களின் - பிள்ளைகள் இல்லாத திருமணம் முடித்த பெண்களின் - பாதுகாவலியாய் கொடுத்திருக்கின்றது.

மன்னா வாசக அன்பர்களே!

மன்னா பத்திரிகையை ஆர்வத்தோடு வாங்கிப் படிக்கும் அன்பர்களே! உங்கள் பத்திரிகைக்குரிய பணத்தை காலம் தாமதிக்காமல் உடனடியாகக் கொடுத்து உங்கள் அன்பான ஒத்துழைப்பை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மன்னா பத்திரிகைப் பணத்தைப் பெற்றுக்கொள்வதில் விநியோகஸ்தர்கள் மிகவும் கஸ்ரப்படுகின்றனர். இதனால் காலதாமதமாகவே எமக்கு பணம் வந்துசேர்கிறது. இதனால் நாம் மிகுந்த நிதி நெருக்கடிக்குள்ளாகிறோம்.

- மன்னா நிர்வாகம்

வங்காலை புனித ஆனாள் அன்னையின் வருடாந்த திருவிழா

வங்காலை புனித ஆனாள் அன்னையின் வருடாந்த திருவிழா 26.07.2012 அன்று வங்காலையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பங்குத்தந்தை அருட்பணி. ஜெயபாலன் குரூஸ் அடிகளார் 17.07.2012 அன்று கொடி ஏற்றத்துடன் நவநாட்களை ஆரம்பித்துவைத்தார்.

இவ்வாண்டில் மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணியாளர்கள் நவநாட்களில் மறையுரை ஆற்றி நவநாள் திருப்பலிகளை ஒப்புக்கொடுத்தனர்.

வேஸ்பர் மாலை ஆராதனையை மறைமாவட்டக் குரு முதல்வர் அருட்பணி. அ. விக்ரர் சோசையும் திருவிழா திருப்பலியை முன்னாள் குருமுதல்வர் அ. சேவியர் குரூஸ் அவர்களும் தலைமை தாங்கி நடாத்தினர். திவ்விய நற்கருணை பவனிக்கும் அன்னையின் சுரூபப் பவனிக்கும் இவ்வாண்டு கடல் சங்கு போன்று உருவமைப்பில் தயாரிக்கப்பட் அழகான தேர் பாவிக்கப்பட்டது ஓர் சிறப்பு அம்சமாகும். இத்தேரை வங்காலையைச் சேர்ந்த சிற்பி திரு. யோ. ஜெரோமி மார்க் கடற்தொழிலாளரின் அனுசரணையுடன் வடிவமைத்திருந்தார்.

அத்துடன் ஆனாள் அன்னையின் முன்னைய இருப்பிடம் மாற்றப்பட்டு புதிய இருப்பிடம் அழகான முறையில் அமைக்கப்பட்டுள்ளது. மறைந்த சங்கீத ஆசிரியர் இம்மானுவேல் குரூஸ் அவர்கள் இயற்றி இசையமைத்த மாலை ஆராதனைப் பாடல்கள் பாரம்பரிய புகழ்பெற்றது. எந்த ஆலயங்களிலும் பாடப்படாத இப்பாடல்களை புனித செசீலியா பாடகர் சபையினர் சிறப்புற பாடினர்.

சாளம்பன் புனித அடைக்கலமாதா இளைஞர் ஒன்றிய அங்குராப்பணக் கூட்டம்

ஆட்காட்டிவெளிப்பங்கின் துணை ஆலயமாகிய சாளம்பன் புனித அடைக்கல மாதா இளைஞர் ஒன்றியக் கூட்டமானது கடந்தகால யுத்தத்தின்பின் புதிதாக மீண்டும் 11.07.2012 அன்று இரவு 7.30 மணியளவில் ஆரம்பிக்கப்பட்டது.

அன்பிய திருப்பலியை தொடர்ந்து புனித அடைக்கலமாதா ஆலயத்தில் பங்குத்தந்தை அருட்பணி ஜெயபாலன் அடிகளார் தலைமையில் மன்னார் மறைமாவட்ட நிரந்தர மறையாசிரியர் திரு. யோ. செபஸ்ரியாம்பிள்ளை அவர்களுடன் 16 இளைஞர் யுவதிகள் சமூகத்தில் முதல் கூட்டம் ஆரம்பமானது. முதலில் பங்குத்தந்தை உரையாற்றினார். அதனை தொடர்ந்து இளையோர் பெயர்ப்பட்டியல் தயாரிக்கப்பட்டு 20 இளையோர்களின் பெயர்கள் பதிவாகின. அதனைத் தொடர்ந்து நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது. இரவு 8.45 மணியளவில் கூட்டம் நிறைவுபெற்றது.

தகவல் : ஞா. கிறிஷாந்தா, சாளம்பன்.

வவுனியா மறைக்கோட்டத்தில் திருவழிபாடு பற்றிய கருத்தரங்கு

வவுனியா மறைக்கோட்டத்தைச் சேர்ந்த வழிபாட்டுக் குழுவினர் மற்றும் பாடகர் குழாமினர் ஆகியோருக்கான கருத்தரங்கு கடந்த யூலை மாதம் 16ஆம் திகதி காலை 10.00 மணி தொடக்கம் மாலை 3.30 மணி தொடக்கம் இலுப்பைக்குளம் பங்கில் இடம்பெற்றது. இதில் ஏறக்குறைய 100 பேர் வரையில் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

இக்கருத்தரங்கின் இணைப்பாளராக இலுப்பைக் குளம் பங்குத்தந்தை அருட்திரு. ஆரோக்கியம் அவர்கள் செயலாற்றினார். வளவாளர்களாக அருட்திரு. அருள்ராஜ் குரூஸ், திரு. பெஞ்சமின், திரு. யேசுராஜா ஆகியோர் கலந்துகொண்டு உரைகளை வழங்கினர். இக்கருத்தரங்கின்போது வழிபாட்டின் அர்த்தம், பங்குகளில் இடம்பெறும் வழிபாடுகளின் தன்மை, வழிபாடு பற்றிய விழிப்புணர்வு போன்ற கருப்பொருளில் உரைகளும் கலந்துரையாடல்களும் இடம்பெற்றன. மன்னார் மறைமாவட்ட வழிபாட்டு ஆணைக்குழு இயக்குனர் அருட்திரு. எஸ். அன்ரன் அவர்கள் ஒழுங்கமைத்திருந்தார்.

பெரிய முறிப்பில் ஒன்றுகூடிய வஞ்சியன்குளம், குஞ்சுக்குளம் இளையோர்

வஞ்சியன்குளம் மற்றும் குஞ்சுக்குளம் ஆகிய பங்குகளைச் சேர்ந்த இளைஞர் ஒன்றியத்தினர் கடந்த 01.07.2012 அன்று பெரியமுறிப்பில் ஒன்றுகூடல் ஒன்றை நடாத்தினர்.

அன்றைய தினம் முதல் நிகழ்வாக அறிமுகமும் சிறு கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன. அன்று இரவு வீட்டுத் தரிசிப்புக்களை மேற்கொண்டு இளைஞர்கள் தமது உறவை வெளிப்படுத்தினர்.

02.07.2012 அன்று இளைஞர்களுக்கான சிறப்பு திருப்பலி நடைபெற்றது. தொடர்ந்து சமாதானத்திற்கும் மீள் இணக்கத்திற்குமான வழங்கள் (RPR) நிறுவனத்தினால் "வன்முறையற்ற தொடர்பால்" பற்றிய பயிற்சி வகுப்பு நடைபெற்றது இந்நிகழ்வில் 43 இளைஞர் யுவதிகள் பங்குபற்றினர். இந்த நிகழ்வை பங்குத்தந்தையர்களான அருட்தந்தை ஞானாதிக்கம், அருட்தந்தை லக்ஸ்ரன் ஆகியோர் சிறப்பாக ஒழுங்குபடுத்தியிருந்தனர்.

தகவல் : சீ. ஜெயந்தன், வஞ்சியன்குளப் பங்கு

வஞ்சியன்குளம் அரிப்பு மறையாசிரியர்களின் உறவுப்பால ஒன்றுகூடல்

வஞ்சியன் குளம், அரிப்பு ஆகிய பங்குகளில் உள்ள மறைவாழ்வு பணியாளர்கள் ஒன்றிணைந்து 22.07.2012 அன்று அரிப்பில் உறவுப்பால ஒன்றுகூடலை நடாத்தினர். இதில் "மறைவாழ்வு பணியாளர்களுக்கும் பிள்ளைகளுக்குள்ள உறவும் அவர்களின் நடத்தைக் கோலங்களும்" என்ற தலைப்பில் அதிபர் றாஜா குரூஸ் உரை நிகழ்தினார். அதனைத் தொடர்ந்து உறவை வெளிப்படுத்தும் முகமாக மதிய உணவை அனைவரும் உண்டனர். பின்பு சிறிய கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. இதில் 27 மறைவாழ்வுப் பணியாளர்கள் பங்குபற்றினர். இந்நிகழ்வை அருட்தந்தையர்கள் ஞானாதிக்கம், ஒல்பன் இராஜசிங்கம் ஆகியோர் சிறப்பாக ஒழுங்கமைத்திருந்தனர்.

தகவல் : சீ. ஜெயந்தன், வஞ்சியன்குளப் பங்கு

பணிக்கர் புளியங்குளத்தில் ஆலயத் திருவிழாவும் புதிய குருவின் நன்றித்திருப்பலியும்

ஓமந்தைப் பங்கைச்சேர்ந்த பணிக்கர் புளியங்குளத்தில் புனித அந்தோனியார் ஆலயத் திருவிழாவும் புதிய குருவின் நன்றித்திருப்பலியும் இடம்பெற்றன. 20.06.2012 அன்று கொடியேற்றப்பட்டு 3 நாள் நவநாட்களுடன் 23.06.2012 அன்று காலை 7.30 மணியளவில் திருவிழாத் திருப்பலி இடம்பெற்றது. ஓமந்தைப் பங்கைச் சேர்ந்த புதிய குரு அருட்பணி. பெற்றிக் லியோ (OMI) அடிகளாரின் முதல் நன்றித் திருப்பலியும் திருவிழாத் திருப்பலியும் கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது. புனிதரின் திருச்சுரூப பவனியும் திச்சிரூப ஆசீர்வாதமும் இடம்பெற்றன.

திருப்பலி முடிவடைந்ததும் ஓமந்தைப் பங்கைச் சேர்ந்த புதிய குருவாக யாழ் மறைமாவட்டத்தில் திருநிலைப்படுத்தப்பட்ட அருட்பணி பெற்றிக் லியோ அடிகளாரை கௌரவிக்கும் முகமாக கலைநிகழ்வுகளும், பங்குமக்களின் வாழ்த்துச் செய்திகளும் இடம்பெற்றன. இந்நிகழ்வுகளை பங்குத்தந்தை அருட்பணி. அசிசி யூட் அடிகளார் சிறப்பாக ஒழுங்கமைத்திருந்தார்.

தகவல் : எம். ஆர். றெஜினா, வவுனியா.

உங்கள் பங்கின் முக்கிய நிகழ்வுகளை எமக்கு எழுதி அனுப்புங்கள்

உங்கள் பங்கில் நடைபெறும் முக்கிய செய்திகளை மன்னாவுக்கு எழுதி அனுப்புங்கள். வழமையான, வருடாந்த நிகழ்வுளை அனுப்பவேண்டாம். முக்கியமான, சுவாரஸ்யமான, மற்றப் பங்குகளுக்கு எடுத்துக்காட்டாக இருக்கக்கூடிய செய்திகளை மட்டுமே எழுதி பங்குத்தந்தையரின் கையொப்பத்துடன் எமக்கு அனுப்பிவையுங்கள். செய்திகளின் தரம் கண்டு பிரசுரிப்போம்.

- மன்னா நிர்வாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைக்கல்விப் பொழிவு

மறைக்கல்வி ஆண்டு சிறப்புக் கட்டுரை

மறைக்கல்வியின் அர்த்தமுள்ள பரிமாணங்கள்

அருட்பணி. ஆ. செபஸ்தியான்,
தமிழக மறைக்கல்விச் செயலர்.



விண்ணுலகத் தேவதையொன்று மண்ணுலக மக்களைக்காண பூமிக்கு வந்தது. மக்களோடு உண்டு உறவாடி பேசி மகிழ்ந்த தேவதைக்கு, மண்ணுலக மக்களைப் பிடித்துப்போனது. விண்ணுலகைச் சுற்றிப்பார்க்க யாராவது ஐவரை அழைத்துச் செல்ல ஆசைப்பட்டது. தனது இறக்கையில் முதலில் அமர்கின்ற ஐவரை மட்டும் கூட்டிச்செல்ல முடிவு செய்தது. இவர்களைத் தங்களோடு ஒரே ஒரு பொருளை மட்டும் எடுத்துவர வேண்டும் என்று நிபந்தனை விதித்தது.

முதலில் ஓர் இளைஞன் ஏறி அமர்ந்தான் - தனது காதலியின் உடைந்த வளையல் துண்டோடு ; இரண்டாவதாக ஒரு நோயாளி ஏறினார் - தான் உயிர் வாழத்தேவையான மருந்துப் புட்டியோடு; மூன்றாவதாக ஓர் அரசியல்வாதி ஏறினார் - சுவிஸ் வங்கிக் கணக்கை உள்ளடக்கிய ஒட்டைக்கைக் கடிகாரத்தோடு; நான்காவதாக வயது முதிர்ந்தவர் ஏறினார் - ஒரு ஜோடி பல்செட்டோடு; இறுதியாக ஒரு சிறுமி ஏறினாள் - தான் அன்பாக நேசித்த குட்டிநாயோடு.

"சிறுமியே, என் நிபந்தனையை மீறிவிட்டாய். நாய்க்குட்டியோடு சேர்ந்து ஆறு பேர் ஆகிவிடுகிறோம். ஆகவே, நாய்க்குட்டியை இறக்கிவிட்டு வா" என்றது தேவதை. சிறுமி கீழே இறங்கியபடி சொன்னாள், "நான் இங்கேயே தங்கிவிடுகிறேன். என் அன்பு குட்டி நாயைக் கூட்டிச் செல்லுங்கள்." இதைக் கேட்ட தேவதை சிறுமியிடம் இருந்த ஆழமான அன்புணர்வைக் கண்டு வியந்தது. மனமாறிய தேவதை அனைவரையும் இறங்கச் சொன்னது. நாய்க் குட்டியையும் சிறுமியையும் தனது இறக்கையில் சுமந்துகொண்டு சுதந்திரமாய் பறந்தது. (நன்றி – பரிமாணங்கள்) இது ஒரு அன்பின் பரிமாணம். இயேசு ஆண்டவர் தம் உயிரைக் கொடுத்து இவ்வுலகை மீட்டார். அவருடைய அன்பின் பரிமாணங்கள் பல அவற்றை விளக்குவதுதான் மறைக்கல்வி அந்த மறைக்கல்வியின் பரிமாணங்கள் என்ன?

01. மறைக்கல்வியின் மூன்று பரிமாணங்கள்

மறைக்கல்வியின் பரிமாணங்கள் அதன் பல்வேறு கூறுகளைக் குறிக்கிறது. "ஸடமன்சியோ" என்ற லத்தீன் வார்த்தைக்கு அளவையிடு என்று பொருள் மறைக்கல்வியின் அளவைகள் யாவை? பொதுவாக மூன்று முக்கிய பரிமாணங்கள் மறைக்கல்விக்கு உண்டு. அவையாவன:

1. அறிவித்தல்
2. வழிகாட்டுதல்
3. ஆற்றுப்படுத்துதல்

இந்த மறைக்கல்விப் பரிமாணங்கள் உலகக் கல்வியில் இருந்து பெறப்பட்டமை என்றாலும் ஒவ்வொன்றும் தம்மிலே முழுமையானவை மட்டுமல்ல ஒன்றோடொன்று தொடர்புள்ளவை. அர்த்தமுள்ள ஆழமான மறைக்கல்விக்கு இந்த மூன்று பரிமாணங்களும் தத்தமது பங்கேற்பை ஆற்ற வேண்டும். மறைக்கல்வி கற்பிப்பதின் நோக்கம், வழிநடத்துதல் மற்றும் ஆற்றுப்படுத்துதல் கிறிஸ்தவ வாழ்வை, நம்பிக்கையை எவ்வாறு வழிநடத்த முடியும் என்பதைப் பார்ப்போம்.

01.1 மறைக்கல்வியின் அறிவித்தல் பரிமாணம்

அறிவித்தல் வழியாக போதுமான அளவு அறிவு புகட்டப்படுகிறது. கற்றுக்கொடுத்தல் என்பது பாடத்தை கற்பிக்கும் முறையாகும். எனவே இதற்கென பாடத்திட்டம் போதனா முறை இன்றியமையாதவை. மறைக்கல்வி என்பது தாய்த்திருச்சபையின் தலையாய கடமையாகும். எல்லாக் கிறிஸ்தவ நிலையினருக்கும் இந்தக் கடமை உண்டு. ஏனென்றால் அது அவர்களின் அடிப்படை உரிமையும் கடமையுமாக உள்ளது. திருச்சபையின் பல்வேறு செயல்பாடுகளுக்கு நடுவே மறைக்கல்லி கற்றுக்கொடுத்தலே மிக முக்கிய செயல்பாடாக உள்ளது.

எல்லாருக்கும் மறைக்கல்வியில் 'அறிவித்தல்' என்ற பரிமாணம் ஒருவரை கிறிஸ்தவ வாழ்வுக்குள் அழைத்துச் செல்ல வேண்டும். இயேசு தம் வாழ்வில் இதனை தம் சீடர்களை உருவாக்கப் பயன்படுத்தினார். உதாரணமாக: இயேசு தம் பன்னிரு சீடருக்கும் அறிவுரை கொடுத்து முடிந்ததும் பக்கத்து ஊர்களில் கற்பிக்கவும் நற்செய்தியை அறிவிக்கவும் அவ்விடம் விட்டு அகன்றார் (மத் 11:1). அறிவித்தல் என்பது வாழ்வில் மிக முக்கிய நோக்கத்தை சுட்டிக்காட்டுகிறது. இதைத்தான் இயேசுவின் வாழ்விலும் திருத்தூதர்களின் பணியிலும் பார்க்கிறோம். அறிவித்தல் நம்பிக்கையை வளர்ப்பதில், பகிர்வதில் மிக முக்கிய பங்காற்றுகிறது.

கற்பித்தலின் நோக்கம் நம்பிக்கையை ஆழப்படுத்துவதே தவிர மறைக்கல்வியாளரை ஒரு சிறந்த ஆசிரியராக மாற்றுவது மட்டுமல்ல! எனவே நமது நோக்கம் கிறிஸ்தவ மறை அறிவை கற்றுக்கொடுப்பதோடு அதை வாழ உதவி செய்வதே! கிறிஸ்தவ வாழ்வு என்பது கடவுளுக்காக வாழ்வது; கடவுளோடு வளர்வது. இது இயேசுவின் வாழ்வில் பங்கேற்பதாகும். இந்த மறைக்கல்வி ஆண்டில் இந்த அனுபவத்திற்காக நாம் அழைக்கப்படுகின்றோம். கிறிஸ்தவர்களை மனமாற்றத்திற்கு இட்டுச்செல்வதே மறைக்கல்வியின் நோக்கம். இந்த மறைக்கல்வியில் அறிவித்தல் பள்ளிகளிலும், குடும்பங்களிலும், அன்பியங்கள் இளையோர் இயக்கங்கள் என்று எல்லா இடங்களிலும் நிலைகளிலும் நடைபெறுகிறது.

அறிவித்தலின் மூன்று நிலைகள் :

1. மறை உண்மைகளை அறிவித்தல்
2. அறநெறி சார்ந்த வாழ்வை அறிவித்தல்
3. ஒருங்கிணைந்த வாழ்வுக்கான வழியை அறிவித்தல்

இவ்வாறு நலமான ஒருங்கிணைந்த மேம்பட்ட தன்னிறைவு பெறக்கூடிய வகையில் மறைவாழ்வு பரிமாணங்களை வாழ்வாக்கும் மறைக்கல்வியே இன்றைய தேவை!

மறைவாழ்வு பயிற்சியின் ஐந்து பரிமாணங்கள்

1. மறை அறிவுப்புப் பரிமாணம்
2. திருவழிபாட்டுப் பரிமாணம்
3. மனநிலை சார்ந்த பரிமாணம்
4. அறிவு சார்ந்த பரிமாணம்
5. செயல்பாட்டு பரிமாணம்

இவற்றின் வழியாக கிறிஸ்தவர்களை கடவுளின் ஆளுமை உள்ளவர்களாக மாற்றுவதே மறைக்கல்வியின் நேக்கமாகும்.

01.2. மறைக்கல்வியின் வழிகாட்டுதல் பரிமாணம்

மறைக்கல்வியில் வழிகாட்டுதல் பரிமாணம் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. இது திருமுழுக்குப் பெற்றோர் கிறிஸ்துவில் முழுமையானவர்களாக மாற உதவுகிறது. இன்று வழிகாட்டுதல் என்பது ஒரு கலை. தூய ஆவியின் ஏவுதலாலும் வழிநடத்தலாலும் பெற்றுக்கொள்ளப்படும் நிலை. மறைவாழ்வில் சிறியவர்கள், பெரியவர்கள், இளையோர், முதியோர், நல்லவர், தீயவர் என்று எல்லா நிலையினரையும் வழிகாட்டுவது எளிதான காரியமல்ல. நம்பிக்கை சூழமைவை உருவாக்குவதில் நாம் எதார்த்தமானவர்களாக இருத்தல் நல்லது. உரோமைப் பழமொழி கூறுவதுபோல "Ubi nihil potes, nihil tentas" (செய்ய முடியாத எதையும் முயற்சி செய்யாதே) என்பதால் பயனில்லை. மறைக்கல்வி கற்றுக் கொடுப்போர் கற்றுக்கொள்வோரை மதித்து திறமைகளைக் கண்டறிந்து நன்மைத்தனத்தை உற்சாகப்படுத்தி மதிக்க வேண்டும். தனிப்பட்ட உறவில் வளர வேண்டும். ஒருவரை ஒருவர் ஏற்றுக்கொண்டு மதித்து நம்பிக்கையைப் பகிர்வதே மறைக்கல்வியின் மிகச் சிறந்த பரிணாமம்.

தற்காலத்தில் நாம் கற்றுக்கொடுக்கும் பாடங்களில் அதிக கவனம் செலுத்துகிறோமே தவிர கற்றுக்கொள்பவர்களின் மனநிலையை அதிகமாக ஆழமாய்ப் புரிந்துகொள்ள முயற்சிப்பதில்லை. மறைக்கல்வித் திட்டமிடல் என்பது கூட்டு முயற்சி மற்றும் ஒருங்கிணைந்த செயல்பாடு. எனவே மறைக்கல்வியில் வழிகாட்டுதல் வளர்ச்சியை மையமாகக் கொண்டிருக்க வேண்டும். குறிப்பாக பெற்றோர்கள் தங்களது நிலையில் சுய உணர்வில் மாபெரும் மாற்றத்தை காணுதல் காலத்தின் கட்டாயம். இதற்கான பயிற்சி இன்றியமையாதது.

01.3.மறைக்கல்வியின் ஆற்றுப்படுத்துதல் பரிமாணம்

ஆற்றுப்படுத்துதல் என்பது தன்னோடும், சூழமைவோடும், பிறரோடும் உள்ள பிரச்சினைகளை சந்தித்து சாதிக்க உதவும் காரணி. மறைக்கல்வியில் ஆற்றுப்படுத்துதல் பரிமாணம் மிக முக்கியமானது. ஆற்றுப்படுத்துதலும் மறைக்கல்வியும் இரு வெவ்வேறு செயல்களாலும் ஒன்றையொன்று கட்டி எழுப்புகின்றது.

இன்று மறைக்கல்வியாளர்கள் ஆற்றுப்படுத்துனர்களாகவும் இருத்தல் வேண்டும். குழந்தைகள் நம்பிக்கையோடு பகிர்கிறார்கள், பெரியவர்கள் தங்கள் தனிப்பட்ட அனுபவத்தை அலசுகிறார்கள். எனவே, ஒருவரை தனிப்பட்ட வகையில் தெரிந்துகொள்வதைவிட புரிந்துகொள்ள வேண்டும். அதற்கான பயிற்சிகளைப் பெற்று யுக்திகளைக் கையாளத் தயாராக இருக்க வேண்டும். இவைகளை இரண்டு நிலைகளில் செய்யலாம். முதலாவதாக தனிப்பட்ட கவனம் செலுத்தலாம். இரண்டாவதாக தகுந்த சூழ்நிலையை உருவாக்கலாம், அவர்கள் இருப்பதுபோல் ஏற்றுக்கொள்ளலாம். இவ்வாறு ஆற்றுப்படுத்துதல் மறைக்கல்வியின் வழியாக உறுதித்தன்மையையும், உறுதுணையையும் கற்றுக் கொள்வோருக்கு கொடுக்கும். எல்லாரும் முதிர்ச்சியை நோக்கி வளர்கிறார்கள்; எல்லா நிலைகளிலும் உற்சாகம் தேவைப்படுகிறது. இதைத்தான் இன்றைய மறைக்கல்வி செய்ய முயற்சிக்க வேண்டும்! மறைக்கல்வியின் பரிமாணங்களான அறிவித்தல், வழிகாட்டுதல் மற்றும் ஆற்றுப்படுத்துதல் ஆகியவற்றின் நோக்கம் கிறிஸ்தவ வாழ்வை நம்பிக்கையில் வளப்படுத்த உதவ வேண்டும். இவற்றின் மிகச் சிறந்த பயன்பாடானது நமது மறைக்கல்விப் பணியில் மிகப்பெரிய மாற்றத்தைக் கொண்டுவரும் என்பது உறுதி! ■

வாழ்க்கைப் பயணத்தில் வைரவிழாவை எட்டும்

போல் நட்சத்திரம் அடிகளார்

அன்னாரின் அறுபதாவது பிறந்த நாளில் சில பணி நயப்புச் சிந்தனைகள்

அமலமரித்தியாகிகள் சபையின் யாழ் மாகாண முதல்வர் அருட்திரு போல் நட்சத்திரம் அடிகளார் எதிர்வரும் ஒகஸ்ட் 24ஆம் திகதி தனது 60வது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார். ஒரு இறைபணியாளர் என்ற வகையில் அவரின் ஆழுமைப் பண்புகளும், செயற்திறமைகளும் விதந்துரைக்கப்பட வேண்டியவை.

யாழ் உரும்பிராய் மண்ணின் முதல் குருமணியாக வந்த அடிகளார் 1952ஆம் ஆண்டு பிறந்தார். திருமறைக்கலாமன்ற இயக்குனர் அருட்திரு. மரிய சேவியர் அடிகளார் உரும்பிராய் பங்குத்தந்தையாக இருந்தபோது இவரை சிறிய குருமடத்திற்கு அனுப்பிவைத்தார். நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் அன்புக்குரிய பணித்தளமாகிய உரும்பிராயில் இருந்து சிறந்ததொரு அமலமரித்தியாகி உருவாவார் என அன்று மரியசேவியர் அடிகளார் நினைத்திருந்தாரோ தெரியவில்லை. ஆனால் அந்த மண்ணில் இருந்து சிறந்த ஆழுமையும் செயற்திறனும் உள்ள ஒரு அமதி உருவாகியுள்ளார் என்பதுதையிட்டு இன்று நாம் மகிழ்ச்சியடையலாம்.

1980ஆம் ஆண்டு குருவாக திருநிலைப்படுத்தப்பட்ட அடிகளார் மறையுரைஞர் குழுமம், நானாட்டான், வங்காலை, உயிலங்குளம் போன்ற பங்குகள், அமதி குருத்துவ மாணவர்களின் உருவாக்கம், மாகாண நிர்வாகம், கற்பித்தல் பணி போன்ற பல தளங்களில் பல்வேறு பணிகளை சிறப்பாகச் செய்துள்ளார்.

2008ஆம் ஆண்டு பெப்ரவரி 5ஆம் திகதி அமலமரித்தியாகிகளின் மாகாண முதல்வராக நியமிக்கப்பட்ட அடிகளார் அன்று தொடக்கம் இன்றுவரை காலத்தின்

தேவையைக் கருத்தில் கொண்டு பல்வேறு செயற்திட்டங்களை சிறப்பாக முன்னெடுத்து வருகின்றார். குறிப்பாக போரின் வடுக்கள் இன்னும் ஆறாமல் இருக்கும் வன்னிநிலப்பரப்பில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் பிள்ளைகளின் கல்வி, ஆதரவற்ற சிறுவர்கள் பராமரிப்பு, இளைஞர் உருவாக்கற் பணிகள், இல்லிடமற்றோருக்கான இல்லிடங்ள் என இவரின் வழிகாட்டலில் அமதிகள் ஆற்றும் பணிகள் மெச்சத்தக்கவை.

அமதிகளின் பணித்தளங்களை விஸ்தரித்துள்ள இவர், போரின் பின்னரான காலத்திற்கு ஏற்ற வகையில் புதிய பல பணிகளையும் அறிமுகப்படுத்தியுள்ளார்.

ஈழத்தமிழ் திருச்சபையின் முக்கிய தூண்களில் ஒன்றாகத் திகழும் யாழ் மாகாண அமதிகள் இந்த மண்ணில் விசுவாச விதையை விதைத்தவர்களில் முக்கியமானவர்கள். அந்த விசுவாச விதை முளைத்து, வளர்ந்து, பலன்கொடுக்க தொடர்ந்து அவர்கள் அயராது பணியாற்றுகின்றனர்.

போல் நட்சத்திரம் அடிகளார் சிறந்த ஆழுமைப் பண்புகள் கொண்டவர். அனைத்துத் தரப்பினருடன் உறவையும் தொடர்பையும் ஏற்படுத்தக்கூடியவர். சிறந்த மறையுரையாளர். மடுத்திருப்பதியில் அந்நாட்களில் அவர் ஆற்றிய மறையுரைகள் இன்றும் நினைவுகூரத்தக்கவை. செயற்தின்வாய்ந்த நல்ல நிர்வாகி, பழகுவதற்கு இனிமையானவர். ஏழைகள்பால் அன்பும் அக்கறையும், இரக்கமும் கொண்டவர்.

இத்தகைய சிறப்பான ஆழுமையைக் கொண்ட அடிகளாரின் பணி வாழ்வு மேலும் சிறக்கவேண்டும் என இறையாசிகூறி பிறந்த நாள் வாழ்துக்களை மகிழ்ச்சியோடு தெரிவிக்கின்றோம். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத் திருச்சபைச் செய்திகள்

வடக்கு மக்களுக்கு கருத்துரிமை மறுப்பு

அமெரிக்கத் தூதுவர் பற்றீசியாவிடம் யாழ்.ஆயர் முறையீடு

யாழ் ஆயர் தோமஸ் ஆண்டகை

தனியாகவோ, கூட்டாகவோ கருத்துக்களை வெளியிட முடியாத ஒரு இக்கட்டு நிலையில் வடக்கு மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்களுக்கான சுதந்திரமான கருத்துரிமை மறுக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் இங்கு ஜனநாயக அரசியல் நிலைநிறுத்தப்படுகிறதா என்ற கேள்வியும் எழுகிறது. இவ்வாறு கடந்த ஜீலை 22ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகை தந்த அமெரிக்கத் தூதுவர் பற்றீசியா புட்டினிஸிடம் யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை முறையிட்டார். இதுவரை காலமும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராகப் பணியாற்றிய பற்றீசியா புட்டினிஸ் அமெரிக்க இராஜங்கத் திணைக்களத்துக்கு மாற்றலாகிச் செல்கிறார். ஜுலை 22ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகை தந்த அவர் யாழ் ஆயர் இல்லத்தில் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையைச் சந்தித்து உரையாடினார்.

குடாநாட்டின் தற்போதைய நிலை குறித்து ஆயரின் கருத்துக்களை கேட்பதில் அமெரிக்கத் தூதுவர் அதிக அக்கறை காட்டினார். தூதுவரிடம் யாழ். ஆயர் சுட்டிக்காட்டிய விடயங்கள் வருமாறு:

போர் நிறைவடைந்து மூன்று ஆண்டுகள் கடந்துவிட்டன. ஆயினும் வடக்கில் தனியாகவோ, கூட்டாகவோ மக்கள் கருத்துக்களை வெளியிட முடியாத நிலை இன்றும் தொடர்கிறது. இந்நிலையைச் சகித்துக்கொண்டே மக்கள் தமது வாழ்வை நகர்த்திக்கொண்டிருக்கிறார்கள். இங்கு ஜனநாயக அரசியல் நடைபெறுகின்றதா என்ற கேள்வியும் அனைவரிடத்திலும் எழுந்துள்ளது.

மக்கள் பொருளாதார ரீதியில் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அதனால் வாழ்க்கையை கொண்டு நடத்துவதில் அவர்கள் கடுமையாகப் போராடவேண்டியுள்ளது. எனவே இங்கு பொருளாதார வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் பட்சத்தில் ஏனைய பல பிரச்சினைகளில் இருந்து விலகி வாழக்கூடிய நிலை ஏற்படலாம். அரசியல் ரீதியாகவும் இதில் பல நன்மைகளை அடையலாம்.

வடக்கில் தனிநபர்கள் அச்சுறுத்தப்படுவது, தனிநபர்களின், அதிகாரிகளின் வாழ்விடங்கள் தாக்கப்படுவது ஆகிய சம்பவங்கள் தொடர்ந்துகொண்டே உள்ளன. இவை மக்கள் மனதில் கடும் அச்சநிலையைத் தோற்றுவித்துள்ளன.

இங்கு இராணுவப் பிரசன்னம் பிரச்சினைக்குரியதொன்றாகவே காணப்படுகின்றது. வீதிகள் முக்கிய இடங்களில் இருந்து படையினர் அகற்றப்பட்டாலும், அவர்களது பிரசன்னம் மக்களுக்கு இடையூறாகவே இருக்கிறது. வலிகாமம் வடக்கில் சில பிரதேசங்கள் உயர் பாதுகாப்பு வலயங்களாகவே உள்ளன. இவை மீள்குடியேற்றத்திற்கு தடையாக இருக்கின்றன. இதனால் ஆயிரக்கணக்கான மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்படாமலே உள்ளனர். இது தவிர பின்தங்கிய பிரதேசங்களில் கல்வி நிலை பாதிக்கப்பட்டுள்ளது. பின்தங்கிய மாணவர்களின் கல்வியில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டி உள்ளது.

இந்தப் பிரச்சினைகள் குறித்தும் அதிக அக்கறை செலுத்தப்பட வேண்டியது அவசியமானதாகும். யாழ் ஆயர் தெரிவித்த விடயங்கள் குறித்து கவனத்தில் கொள்வதாகத் தூதுவர் அங்கு குறிப்பிட்டுள்ளார்.

உயர்தரப் பரீட்சையில் தோற்றியோர் தொகை

கடந்த ஓகஸ்ட் மாதம் 6ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட க.பொ.த உயர்தர பரீட்சையில் புதிய பாடத்திட்டத்தின்கீழ் 2 இலட்சத்து 36 ஆயிரத்து 25 மாணவர்களும், பழைய பாடத்திட்டத்தின்கீழ் 41,646 மாணவர்களும் தோற்றினர் என இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்திருந்தது.

கண்டி மறைமாவட்டம் – 125 வருட யூபிலி விழா

கண்டி மறைமாவட்டம் உருவாக்கப்பட்டு 125 ஆண்டுகள் நிறைவடைகின்றது. 1887ஆம் ஆண்டு கொழும்பு, யாழ்ப்பாணம், கண்டி போன்ற மூன்று மறைமாவட்டங்களும் ஒரே நேரத்தில் உருவாக்கப்பட்டன. கண்டி மறைமாவட்டமானது மத்திய, ஊவா பிரதேசங்களை உள்ளடக்கியுள்ளது. 1973ஆம் ஆண்டு ஊவா மாகாணம் பதுளை மறை மாவட்டமாக மாறியது.

கடந்த 125 வருட கண்டி மறைமாவட்ட சரித்திரத்தை பின் நோக்கிப் பார்க்கும்போது இறைவன் அம்மறைமாவட்டத்தை வழிநடத்தி வந்துள்ளார். இவ்வருடம் யூன் மாதம் 13ம் திகதி கண்டி மறைமாவட்ட பாதுகாவலரான புனித அந்தோனியாரின் திருவிழாவின்போது கண்டி பேராலயத்தில் ஆயர் தலைமையில் யூபிலி நன்றித்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

தலவாக்கலையில் திருக்குடும்ப கன்னியர்களின் பொன்விழா

கடந்த யூன் மாதம் 16ம் திகதி தலவாக்கலை திருக்குடும்ப கன்னியர் தமது வருகையின் பொன்விழாவைக் கொண்டாடினர். பொன்விழாத் திருப்பலியை நிறைவேற்றிய ஆயர் அதிவண வியானி பொர்னான்டோ அவர்கள் "இவ் அருட்சகோதரிகளின் வருகையானது எமது மறைமாவட்டத்திற்கு ஓர் ஆசீர்வாதமாகும். தமது முன்மாதிரிகையான வாழ்க்கையால் சிறந்த தலைவர்களை உருவாக்கி கல்விப்பணியிலும் மேய்ப்புப்பணியிலும் சிறப்பான தொண்டாற்றி வருகிறனர்" எனக் குறிப்பிட்டார்.

வாழ்த்திப் பாராட்டுகின்றோம்

தெற்காசிய கத்தோலிக்க விவிலிய கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளராக (Co- ordinator of Catholic Biblical Federation for Southen Asia) கண்டி மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்தந்தை அல்வின் பீற்றர் பெர்னான்டோ அடிகளார் மூன்று வருடங்களுக்கு (2012 – 2015) நியமனம் பெற்றுள்ளார். இவரை மன்னா வாழ்த்திப் பாராட்டுகின்றது.

திருக்குடும்பக் கன்னியர் மடம் சாதனையுடன் சம்பியன்

வடக்கு மாகாணத்துக்கென தனியாக விளையாட்டுப் போட்டிகள் நடைபெறத்தொடங்கிய கடந்த ஐந்து வருடங்களிலும் கூடைப்பந்தாட்டத்தில் யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர் மடம் பாடசாலை தொடர்ந்து மாகாணச் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டதன் மூலம் புதிய சாதனையைப் பதிவு செய்துள்ளது.

அருட்சகோதரர் ஞா. மரியநாதன் தியாக வாழ்வில் 40 வருடங்கள்

ஆனி மாதம் மாத்தளை புனித பிரான்சிஸ்கன் மறைபரப்புச் சபையை சேர்ந்த அருட்சகோதரர் ஞா. மரியநாதன் அவர்கள் தனது துறவற வாழ்வின் நாற்பது வருட பூர்த்தியை கொண்டாடினார். இவர் 1970ம் ஆண்டில் இருந்து 1980 ஆம் ஆண்டுவரை "தன்னார்வ இறைத்தொண்டாற்றும் மறை ஆசிரியத் தொண்டராகவும், 1982ஆம் ஆண்டு தொடக்கம் பிரான்சிஸ்கன் துறவற சபையின் அருட்சகோதரராகவும் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்.

தூய நற்கருணை கொழும்பு மறைமாவட்டத்தில் நற்கருணைப் பவனியும் கண்காட்சியும்

கொழும்பு ஜோசவ் வாஸ் நிதியமும், கொழும்பு உயர் மறைமாவட்டமும் இணைந்து நற்கருணைப் பவனியொன்றையும், கண்காட்சி ஒன்றையும் கொழும்பு புனித சூசையப்பர் கல்லூரியில் ஓகஸ்ட் 3ஆம் திகதி தொடக்கம் செப்ரம்பர் 2ஆம் திகதி வரையும் நடாத்துகின்றது.

குருத்துவ வாழ்வில் வெள்ளிவிழாக் காணும் ரோனி மாட்டின் அடிகளார்

கொழும்பு உயர் மாவட்ட அருட்தந்தை ரோனி மார்ட்டின் அடிகளார் தனது குருத்துவ வாழ்வின் வெள்ளி விழாவை கொண்டாடுகின்றார். அடிகளார் 10 வருடங்களுக்கு மேலாக திருப்பாலத்துவ சபையின் தேசிய இயக்குனராக பணிபுரிந்து சிறப்பாக சேவை செய்தவர். தற்போது இலங்கை கத்தோலிக்க ஆயர் மன்றத்தின் உபசெயலாளராக பணிபுரியும் அடிகளார், இறையார்வமும், மனித நேயமும் மிக்கவர். அல்லலுறும் மக்களின் குறிப்பறிந்து தன்னிகரில்லா சேவையாற்றுபவர். அருட்தந்தை ரோனி மார்ட்டின் அடிகளார் தனது வெள்ளி விழா நன்றித் திருப்பலியை 21.07.2012 அன்று நுகேகொட புனித சூசையப்பர் ஆலயத்தில் ஒப்புக்கொடுத்தார். வெள்ளி விழாக்காணும் அருட்தந்தையை "மன்னா" பாராட்டி வாழ்த்துகின்றது.

குருத்துவ வாழ்வானது எப்போதும் தியாக மனப்பான்மையோடு இணைந்ததாகும்

மரியசேவியர் அடிகளாரின் குருத்துவ பொன்விழாவில் திருத்தந்தையின் பிரதிநிதி

குருத்துவமானது எப்போதும் தியாக மனப்பான்மையோடு இணைந்ததாகும். அருட்பணியாளரது ஒவ்வொரு செய்கையும், புரிந்துணர்வு, மன்னிக்கும் மனப்பாங்கு, பரிவிரக்கம், கருணை, பிறரை மதிக்கும் தன்மை போன்ற குணங்களைப் பிரதிபலிப்பதோடு நேர்மையும், எப்போதும் பிறரை வரவேற்கும் மனப்பான்மையையும் கொண்டிருக்க வேண்டும் என திருத்தந்தையின் பிரதிநிதி பேராயர் மேதகு ஜோசப் ஸ்பிட்டரி ஆண்டகை அவர்கள் தெரிவித்தார்.

கடந்த யூலை மாதம் 14ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மரிய சேவியர் அடிகளாரின் குருத்துவ பொன்விழா நிகழ்வுத் திருப்பலியில் மறையுரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் கூறியதாவது, அருட்பணியாளர் ஒருவர் திருப்பலி நிறைவேற்றும்போதோ அல்லது ஆராதனையின்போதோ அவர் கிறிஸ்துவைப்போல் தெரிகிறார் என நாம் குறிப்பிடுகின்றோம். ஆனால் உண்மையான அருட்பணியாளரின் வாழ்க்கை கிறிஸ்துவைப்போல திகழவேண்டும் என்றார்.

புற்றுநோய் வைத்தியசாலைக்கு கண்டி மறைமாவட்டம் ஒரு மில்லியன் ரூபா அன்பளிப்பு

கடந்த ஆனி மாதம் 25ம் திகதி கண்டி மறைமாவட்ட குருக்கள், கண்டி ஆயர் அதிவண. வியானி பொன்னான்டோ ஆண்டகையின் தலைமையில் கண்டியில் புதிதாக நிர்மாணிக்கப்படும் புற்றுநோய் வைத்தியசாலை கட்டிட நிதிக்காக ஒரு மில்லியன் ரூபாவை இக்கட்டிட நிதிக்கான பணிகளின் ஒருங்கமைப்பாளர் திரு. மொஹான் சமரநாயக்கா, Dr. ஸ்ரீவர்தன, Dr. சுதத் பெரேரா ஆகியோரிடம் கையளித்தார்கள்.

மடு அன்னைக்கு கனடாவில் திருப்பீடம்

கனடா ரொறன்ரோ தமிழ் கத்தோலிக்க சமூகம் மிட்லண்ட் திருத்தலத்திற்கு திருப்பயணம் மேற்கொண்டுவருவதன் 25 ஆண்டு நினைவாக அத்திருத்தலத்தில் மருதமடு அன்னைக்கு அர்ப்பணித்திருக்கும் திருப்பீடம் இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் தலுகாது மொத்தம் செபஸ்ரியான் (அழகு) அவர்களின்

தமிழ்ப்புலமையும் தமிழ்ப் பணியும்

(மு. சுந்தரம் பாண்டியன் (B.A.Hons.Dip.in.Ed., M.Phil)

மன்னார் மாதோட்டத்தில் செழுமையும் வளமும் பண்பும் தமிழ் மரபும் உடலோடும் உயிரோடும் கலந்து, உணர்வோடு மக்கள் வாழும் ஊர் நறுவிலிக்குளம். இவ்வூரில் திரு. திருமதி தலுகாது மொத்தம் தம்பதியினருக்கு புதல்வராக அவதரித்தவர் செபஸ்ரியான் அவர்கள். 1962 ஆம் அண்டு ஊரின் ஆரம்பப் பாடசாலையில் அரிவரி வகுப்பில் ஒன்றாகக் கல்வி கற்றோம். அக்காலம் தொடக்கம் இக்காலம் வரை எங்கள் நட்பு, உறவு, தொடர்பு, தமிழ்ச் செல்வங்களை பரஸ்பரம் பகிர்ந்து கொள்ளுதல் என்பவற்றில் எவ்வித தொய்வும், நெகிழ்ச்சியும் அற்றதொரு நினலயிலேயே தொடர்ந்துகொண்டிருந்தோம். இதற்கிடைப்பட்ட காலங்களின் பரிமாணம் ஐம்பது ஆண்டுகள் கரைந்துவிட்டன. எனினும் எமக்கு இடையேயான தொடர்புகள் அனைத்தும் இளமையாகவே இருந்தன.

இளமைக் காலத்தில் எமது ஊரின் குளத்தில் நீராடுதல், கடலுக்குச் செல்லுதல், மாடு, ஆடு மேய்த்தல், நாடகம். கலைவிழா, சினிமாப்படம் பார்க்கச் செல்லுதல், அச்சங்குளம், கட்டுக்கரைக்குளக்காட்டிற்குப் பாலைப்பழம் பறிக்கச்செல்லுதல், நாள்தோறும் வங்காலை மகாவித்தியாலத்திற்கு கல்விகற்கப் போய்வருதல் இவைபோல எத்தனையோ நூற்றுக்கணக்கான நிகழ்வுகள் அலையலையாக ஆர்ப்பரிக்கின்றன. இக்காலப்பகுதியில்தான் நண்பர் அழகு அவர்கள் ஆன்மீகத்துறைக் கல்விபெற மட்டக்களப்புக்குச் செல்கின்றார். அங்கு அவர் பெற்றுக்கொண்ட அம்சங்கள் பின்னாளில் மின்னி மிளிரச் செய்தன.

மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியில் உயர்தர வகுப்பில் இணைந்துகொண்ட நண்பர் அவர்கள் வித்துவான் சா. இ. கமலநாதன் அவர்களிடம் தமிழ் பயின்றார். வித்துவான் அவர்களின் தமிழ் முனைப்புணர்வுகள் தமிழ் மொழியில் மிகுந்த ஈடுபாட்டினையும் பற்றினையும் ஈட்டிக்கொள்ள வாய்பினை ஏற்படுத்தியது. 1978 ஆம் ஆண்டளவில் என்னையும் நண்பர் செபஸ்ரியான் அவர்கள் மட்டக்களப்புக்கு அழைத்துச் சென்று சத்துருக்கொண்டான், திருப்பெருந்துறை, கல்முனை ஆகிய இடங்களில் அமைந்துள்ள துறவற சபைகளை அறியச் செய்ததுடன் கவிஞர் காசி ஆனந்தன் அவர்களின் தந்தையார் காலமானபோது கவிஞரின் விட்டிற்கும் கூட்டிச்சென்றார். கவிஞரின் குடும்பத்தினருடன் நல்ல உறவினை நண்பர் கொண்டிருந்ததை அங்கே என்னால் உணரமுடிந்தது.

மட்டக்களப்பில் அமரர்கள் வித்துவான் F.X.C நடராசா, வித்துவான் சா. இ. கமலநாதன் அவர்களையும் சந்தித்து தமிழ் தொடர்பு நட்புடன் அவர்களுடன் உரையாட வழி சமைத்தார். இந்நிகழ்வுகளை என்னால் இன்னும் ஜீரணிக்க முடியவில்லை. ஏனெனில் நாங்கள் இருவரும் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றியிருந்த இளம் மாணவர்கள். அவர்களோ பெரியவர்கள் அதிலும் மாபெரியவர்கள் என்பதுதான் காரணம்.

இருபது வயதுகளில் அவர் உயரிய அறிவுபூர்வமான மட்டத்தில் தொடர்புகொண்டிருந்ததை எண்ணிப்பார்க்க மட்டற்ற மகிழ்ச்சி ஏற்படுகின்றது. அத்தமிழ் இணைப்புதான் பிற்காலத்தில் தமிழ் மொழியில் அவருக்கு மிகுந்த பற்றுதல் ஏற்படுவதற்குக் காரணமாக அமைந்திருக்கலாம். சங்க இலக்கியங்களில் இருந்து எங்கள் கால இலக்கியங்கள் வரை ஈர்ப்புக்கொள்ளச்செய்தது. அதற்கு ஒத்திசைவாக ஆசிரியராகக் கடமையும் ஏற்றுக்கொண்ட அன்னார் தமிழ் மறையாம் திருக்குறளை ஆழமாக நேசித்தார். அவ் அறநூலில் மானிடப் பண்புகளும், வாழும் நெறிகளும் வழிகளும் நிறைந்து இருந்ததை அவரால் உள்வாங்கிக்கொள்ள முடிந்தது. அதனாலேயே அவருடைய பேச்சிலும் முச்சிலும் திருக்குறள் ஒன்றித்து சங்கமமாகிவிட்டிருந்தது. ஏதாவதொரு விடயத்தை எந்தச் சந்தர்ப்பத்திலாவது எடுத்துச்சொல்லவெண்டியபோது வள்ளுவப் பெருந்தகையின் வாழ்வாங்கு வாழ உதவும் வரிகள் நாவிலே நர்த்தனம் புரிந்தன. இல்லறம், துறவறம், அரசியல், பொருளியல் அனைத்திலும் திருக்குறளை எடுத்து அடுக்கு மொழியில் அழகு தமிழில் சுவைபடத்தெளிப்பதில் அவருக்கு நிகர் அவரே. ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங்குறள்களையும் அவற்றிற்குத் தற்காலத்தில் பொருள்தரக்கூடிய, புரியக்கூடிய தெளிவான தமிழ் நடையில் எடுத்து இயம்பக்கூடிய வல்லமையைக் கொண்டு காணப்பட்டமை தமிழ் அன்னை அவருக்கு வழங்கிய அருங்கொடையாகும். மனித வாழ்வின் இம்மியளவான நகர்வுகளையும், அசைவுகளையும் வான்புகழ் கொண்ட வள்ளுவப் பெருந்தகை துல்லியமாகத் தமிழ்மறையில் உணர்த்தி உள்ளமையை அணுவளவும் பிறழ்ந்திடாத வகையில் பொருத்தமான இடத்தில் பொருத்தமான முறையில் எடுத்துரைக்கப் பெற்றிருந்த திறன் இறைவன் அவருக்கு வாரி வழங்கிய கொடையாகவே கொள்ளவேண்டியுள்ளது.

ஈழத்திருநாட்டில் தமிழ் அறிஞர்களின் வரிசையில் இத்தகு திறமையினைக் கொண்டிருந்தவர் செபஸ்ரியான் அவர்கள்தான் என்பதைத் துணிந்து உரைத்து முத்தாய்ப்பு வைத்திடலாம். அவருடைய அறுத்த நிறுத்தமான மொழிநடையும் குரல் வளமும் சபைநடுவே எடுத்துரைப்பதானது கணீர் என காதினைக் குளிரவைப்பது தனிச் சுவையினை உணரவைத்திடும். இவ்வற்புதமான திறனை புகழ்ந்துரைக்காத தமிழ் உணர்ந்தாரில் யாம் கண்டிடவில்லை என்பது சத்திய வாக்காகும்.

நண்பன் செபஸ்ரியான் அவர்கள் தமிழ் மறையைப்போலவே கூடுதலாக எடுத்தாண்டு உரையாற்றுவதும் பேசுவதும் சித்தர் பாடல்களையாகும். தமிழ் நாட்டில் வாழ்ந்த பதினெண் சித்தர்களின் பாடல்களில் அதீத பற்றுதல் கொண்டிருந்தார். துத்துவமும், மருத்துவமும் வாழ்வியல் நெறிகளும் நிறைந்து காணப்பட்ட சித்தர் பாடல்களில் அன்னார் கொண்டிருந்த ஈடுபாடானது நினைத்துப்பார்க்கும் வேளையில் பிரமிப்பினை ஏற்படுத்துகின்றது. திருக்குறளும், சித்தர் பாடல்களும் போலவே இரண்டாயிரம் ஆண்டுகால தமிழ் அன்னையின் அணிகலன்களும் அன்னாரை அலங்கரித்து அழகுபெறச் செய்த சிறப்புக்குரியவர்.

மன்னார் தமிழ் சங்கம் தமிழ்ச் செம்மொழி விழாவினை சிறப்புற நடத்திப் பெருமைப்படுத்தியது. அந்நிகழ்வில் அமரர் செபஸ்ரியான் அவர்களின் உரை பலரை வியக்கவைத்தது. மன்னார் மாதோட்ட மக்கள் மத்தியில் தமிழ்ச்சங்கத்தின் நிகழ்வுகள் வலிமைமிகு உணர்வினை உண்டு பண்ணியிருந்தது. மன்னார் மாதோட்டப் பிரதேச இலக்கியச் சுவடுகளும் வரலாறுகளும் வாய்ப்பேச்சளவில் கரைந்துவிடாமல் எழுத்துருவில் பதிவுசெய்யப்பட்டு ஆவணப்படுத்தப்படல் வேண்டும் என்னும் பேரவா செபஸ்ரியான் அவர்களிடம் அண்மைக் காலங்களில் மிகுதியாகக் காணப்பட்டது.

கடந்த ஆண்டு நறுவிலிக்குளம் கவிஞர் அமரர் 'செபமாலை மொத்தம் போல் கவிதைகள்' தொகுப்பு நூல் வெளியிடப்பட்டபோது அதன் திறனாய்வினை மிகச்சிறிய முறையில் மேற்கொண்டு சிறப்புரை ஆற்றிய திறனை சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள் வியந்து பாராட்டியமை பசுமை நினைவாக செபஸ்ரியான் அவர்களை நினைவுகூரச் செய்கின்றது.

அண்மைக் காலங்களில் அமரர் நண்பர் அவர்கள் மன்னார் மாதோட்டப் பிரதேச செழுமைமிகு இலக்கியச் செல்வங்களைத் தேடித்தொகுத்து நூலுருவாக்கும் எண்ணத்தினை எமக்கு ஓயாமல் உணர்த்தியிருந்தார்.

எனவே தமிழ் அன்னை தன் அருந்தவப் புதல்வனை இடைநடுவில் தன்னுடன் எடுத்துக்கொண்டாலும் அவரின் கனவினை நனவுபெறச் செய்திட தொடர்புபட்ட அனைத்து உள்ளங்களும் முயற்சி எடுக்க வேண்டும். அதற்குரிய காலம் கனியும்வரை எல்லாம் வல்ல இறைவன் பெருந்துணையை இருகரமேந்தி காத்திருப்போம்.

ஆன்மீகக் கீற்றுக்கள்

ஜெனிவி – கனடா

ஆன்மீகம் என்பது இறைவனைப்பற்றிய விழிப்புணர்வுபெற எமது வாழ்க்கை அனுபவங்களோடு பயணிக்கும் ஒரு பயணம் என எமது முன்னோர்கள் எமக்கு பாடம் கற்றுத் தந்திருக்கின்றார்கள்.

கடவுள் அனைத்தையும் கடந்தவர்; எல்லையில்லாமல் எங்கும் வியாபித்திருப்பவர். அவரை எமது எண்ணங்களால் சிந்தனைகளால் வரையறுக்க முடியாது; சிறைவைக்க முடியாது. எல்லாச் சமயங்களுமே தாம் பெற்ற அனுபவங்கள் வாயிலாக இறைவனைப்பற்றிய தெளிவைப் பெற முயன்றிருக்கின்றன. வரலாறு ஊடாக, தமது சமய நூல்கள் வாயிலாக, சமயப் பெரியார்கள் சிந்தனாவாதிகள் ஊடாக இந்தத் தெளிவைப்பெற இன்றுவரை சமயங்கள் முயன்று கொண்டே இருக்கின்றன.

கடவுள் ஒருபோதும் மாறமாட்டார். எமது அனுபவங்கள் எமது சிந்தனைகள் மூலமாக இறைவனைப்பற்றிய விழிப்புணர்வில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. இதுதான் உண்மைநிலை.

இவ்வாறு நோக்கின் திருவிவிலியத்திலே இறைவன் மனிதனைத் தமது சாயலாகவும், பாவனையாகவும் படைத்து அவனுக்குத் தேவையான அனைத்தையும் கொடுத்து அவனை சிங்காரத்தோப்பிலே வாழவைக்கிறார். ஆனால் மனிதன் என்ன செய்கின்றான்? இறைவனுடைய கட்டளையை மீறுகின்றான். இறைவன் தோப்புக்கு உலாவவந்து "ஆதாம் நீ எங்கே இருக்கிறாய்!" என விழிக்கின்றார். அதே கேள்வியைத்தான் இன்று இறைவன் எம்மையும் பார்த்துக் கேட்கின்றார். நாம் இன்று எங்கே இருக்கின்றோம்? நான், எனக்கு, எனது குடும்பம், எனது பிள்ளைகள் என்ற சிறிய வட்டத்துக்குள் எனது வாழ்வு அடங்கி ஒடுங்கிவிடுகின்றதா? இறைவனைப்பற்றிய அச்சம் எனக்கு இருக்கின்றதா? பிறருக்காக நான் என்ன செய்கின்றேன்? இறைவன் நாம் முழுமையான நிறை வாழ்வு வாழ வேண்டும் என்பதற்காகத்தான் எம்மைப் படைத்திருக்கின்றார். மனிதனை இறைவன் அழகிய 'சிங்காரத்தோட்டத்தில்" குறைவில்லாமல் வாழப்பணித்தார். ஆனால் அவனால் வாழ முடியவில்லை. வெந்ததைத் தின்று வீணே பொழுதைக்கழிப்பது வாழ்க்கையில்லை. நாமும் வாழ்ந்து பிறரையும் வாழவிட்டு சகோதரனையும் வாழவைப்பதுதான் ஆன்மீகம்.

இன்று ஞாயிறு திருப்பலியே பலருக்கு கேள்விக்குறி. சமயக்கடமைகளைப்பற்றி கேட்கவே வேண்டாம். இதில் தொண்ணூறு வீதமானவர்கள் இவ்வாறுதான் வாழ்கின்றார்கள். மிகுதி பத்து வீதமானவர்களால்தான் இன்று உலகம் இயங்குகின்றதுபோலும்!

திருவிவிலியத்தில் விடுதலைப்பயண நூலில் வெந்து போகாமல் எரிகின்ற ஒரு புதரைக்காண்கின்றார் மோசே. அதன் பொருள் என்ன? இஸ்ராயேல் மக்கள் துன்பமான, துயரமான வாழ்க்கை அனுபவங்களினூடாக எரிந்துகொண்டிருக்கின்றார்கள் என்பதுதான் அதன் பொருள். இதனை எமது தமிழ் மக்களின் வாழ்க்கை நிலையோடு பொருத்திப்பார்க்கலாம். எமது மக்களும் பல்வேறு நிலைகளில் வெந்து, நொந்து, நூலாகி, எரிந்துகொண்டிருக்கின்றனர். கல்வி, வறுமை, பொருளாதாரம், இடப்பெயர்வு, போர் இழப்புக்கள், அங்கவீனம், உடைமை இழப்புக்கள், உறவு இழப்புக்கள் என பல்வேறு வாழ்க்கை அனுபவங்கள் ஊடாக பயணத்திக்கொண்டிருக்கின்றனர். இந்த மக்கள் எவ்வாறு இறைவனை உணரப்போகின்றார்கள். அனுபவிக்கப்போகின்றார்கள், அடையப்போகின்றார்கள் என்பதே நம்முன்னால் எழுந்துள்ள கேள்வியாகும். இவர்கள் இறைவனை அனுபவிக்கச்செய்வதே செய்வதே எமது ஆன்மீகமாக அமைய வேண்டும். அதாவது சமூக, சமய, கலாச்சார, விழிப்புணர்வுபெற நாம் உழைப்பதுதான் ஆன்மீகம்.

இறைவன் நிறைவுள்ளவர்; முழுமையானவர். அவரைத் திருப்திப்படுத்த மனிதன் முயல வேண்டிய அவசியம் இல்லை. மறுவுலக வாழ்வுக்கு உழைக்க வேண்டிய தேவையைவிட நம் கண்களில் காண்கின்ற சகோதரனை அன்புசெய்ய, தேவையில் உள்ளோர்களை சந்திக்க, நமது சூழலில் நாம் செய்கின்ற பிறரன்புக்காரியங்கள் ஊடாக இறைவனின் முழுமையை பிறர் அனுபவிக்க நாம் ஒரு கருவியாக இருப்பின் அதுதான் ஆன்மீகம்.

கல்லான இதயத்தை எடுத்துவிட்டு உணர்ச்சியுள்ள, தசையுள்ள இதயத்தை அருளும்படி இஸ்ராயல் மக்களுக்காக இறைவாக்கினர் எரேமியா இறைவனை வேண்டுகின்றார். நாமும் இன்று இத்தகைய இரங்கத்தக்க நிலையில்தான் இருக்கின்றோம்.

எமது அயலானைப்பற்றிய சிந்தனை எதுவும் இல்லாது மரத்துப்போன இதயத்தவர்களாக இருக்கின்றோம். இறைவனைப்பற்றிய விழிப்புணர்வு, பயம் இல்லாதபோது எமது ஆன்மீகம் செத்த ஆன்மீகம். இறைவாக்கினர் எசேக்கியேல் உலர்ந்துபோன எலும்புகளுக்கு இறைவாக்கு கூறி அவைகளை உயிர்ப்பிக்கிறார். அதுபோல வாழ்வின் பல்வேறு துன்பமான நிலைகளில் இறந்தவர்களாக உள்ளவர்களுக்கு நாமும் இறைவாக்கு கூறவேண்டும் "நலிந்தவனை நல்வாக்கால் ஊக்கப்படுத்த வேண்டும்" அடுத்தவரைக் காணும்போது அன்பின் புன்னகை புரிவது சமாதானத்தின் ஆரம்பமாகின்றது. இங்குதான் ஆன்மீகம் ஆரம்பமாகின்றது. மேலும் கிறிஸ்துவின் ஆன்மீகத்தை நாம் உணருவது அவரது வாழ்வாலும், வார்த்தையாலும் ஆகும்.

இயேசுவின் சொல்லும், செயலும் ஒன்றாக இருந்தது. வார்த்தையொன்று வாழ்வொன்றாக இருக்கவில்லை இது அவரது ஆன்மீகம். நாம் எமது ஆன்மீகத்தை தனியாகவும், கூட்டாகவும் பல்சமயத்தவரோடு, பல் இனத்தவரோடு, பல்வேறு பண்பாடுகளோடு இணைந்து வாழ முயற்சிக்க வேண்டும். தனி மனித விடுதலைக்காகவும், சமூக விடுதலைக்காகவும் உழைப்பதற்கு ஆவியால் உந்தித்தள்ளப்படவேண்டும்.

ஆன்மீகத்தை நாம் வரையறுக்கமுடியாது. இது ஒவ்வெரு தனி மனித அனுபவங்களின் வெளிப்பாடு ஆகும். திருவிழாக் கிறிஸ்தவர்கள், ஞாயிறுதினக் கிறிஸ்தவர்கள், கடமைக் கிறிஸ்தவர்கள் என பலவகைக் கிறிஸ்தவர்கள் உண்டு. இதில் எதிலுமே அடக்கப்படாதவர்களும் உண்டு. இது தனிமனித அளவுதான். ஆனாலும் இவர்களின் ஆன்மீகம் என்பது பொது நன்மைக்கானதாக அமையவேண்டும். அனைவருக்கும் நன்மை தரவேண்டும்; அனைவரையும் வாழ்விக்க வேண்டும்.

ஆன்மீக விரயமும் தற்போது அதிகம் நடக்கின்றது. ஆலயங்களைக் கட்டுவதும் திருவிழாக்களைக் கொண்டாடுவதும் சில சடங்குமுறையான விடயங்களை முன்னெடுப்பதிலுமுள்ள ஆர்வம் அதிகரித்து வருகின்றது.

எல்லா மக்களும் ஒன்று என்ற உலகம் கடந்த சிந்தனை ஏற்பட வேண்டும். எல்லோரும் ஒரே கடவுளின் பிள்ளைகள் என்ற சிந்தனை உருவாக வேண்டும். காலம் கடந்து, இனம் கடந்து, மொழி கடந்து "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற ஒருமித்த சிந்தனைக்கு உருக்கொடுத்து வாழும்போதுதான் ஆன்மீகம் வாழப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத் திருச்சபைச் செய்திகள்

ஒலிம்பிக் வீரர்களின் கத்தோலிக்க விசுவாச அறிக்கைகள்

கடந்த மூன்று ஆண்டுகள் என் பள்ளியில் உள்ள கோவிலில் இறைவனின் சந்நிதியில் நான் செலவிடும் நேரங்கள் மிகவும் முக்கியமான நேரங்கள் என்று 30.07.2012 அன்று ஒலிம்பிக் நீச்சல் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற Middy Franklin என்ற இளம்பெண் கூறினார்.

அண்மையில் அமெரிக்காவின் திரைஅரங்கு ஒன்றில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டினால் ஆழ்ந்த அதிர்ச்சியும், வருத்தமும் அடைந்துள்ள கொலொராடோ மாநில அரோராவில் இயேசு சபையினர் நடத்தும் Reris உயர்நிலைப் பள்ளியில் பயிலும் Missy Franklin, தனது பள்ளி வாழ்க்கையில் இறைவனுக்கு முதலிடம் கொடுக்க தான் கற்றுக் கொண்டதாகக் கூறினார்.

இதேபோல, 31.07.2012 அன்று ஜிம்னாஸ்டிக் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற குழுவில் ஒருவரான Jordyn Wieber, என்ற 17 வயது பெண், குடும்பத்துடன் தான் கோவில் வழிபாடுகளில் கலந்துகொள்வது தனக்கு மிகவும் உறுதிதரும் ஒரு பழக்கம் என்று கூறினார்.

வாழ்வில் நான் சந்தித்துள்ள பல பிரச்சினைகளில் இறைவன் என்னை வழிநடத்தி வந்துள்ளதை முழுவதும் நம்புகிறேன் என்று Lopez Lomong என்ற இளைஞர் கூறினார்.

சூடானில் பிறந்த Lopez Lomong, ஆறு வயதில் அந்நாட்டு போராளிகளால் கடத்தப்பட்டு அங்கிருந்து தப்பியவர். அவர்கள் பிடியிலிருந்து தப்பிய Lopez, கத்தோலிக்கப் பிறரன்பு அமைப்புக்களின் உதவியுடன் அமெரிக்க ஐக்கிய நாட்டைச் சென்றடைந்து தற்போது அந்நாட்டின் விளையாட்டு வீரர்களில் ஒருவராக ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்று வருகிறார்.

LONDON 2012

கடவுள் எனக்கென்று ஒரு திட்டம் வைத்திருக்கிறார் என்பதை நான் ஒவ்வொரு நாளும் உணர்ந்து வருகிறேன் என்று Lopez Lomong, ICN என்ற கத்தோலிக்கச் செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் கூறினார்.

இந்த ஒலிம்பிக் போட்டிகளின்போது விளையாட்டு வீரர்களுடன் இறைவன் உடனிருக்கிறார் என்பதை வலியுறுத்தும் பல முயற்சிகள் இங்கிலாந்தில் உள்ள கத்தோலிக்கத் திருஅவை ஏனைய கிறிஸ்தவ சபைகளுடன் இணைந்து நடத்தும் "தங்கத்திற்கும் மேலாக" ("More than Gold") என்ற அமைப்பின் வழியே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் மதச் சுதந்திரம் குறித்து அமேரிக்கா கவலை!

இலங்கையில் கடந்த ஆண்டு பல மதவழிபாட்டுத் தலங்களும், சிறுபான்மை சமூகத்தினரும் தாக்குதலை சந்திக்கவேண்டிய நிலை ஏற்பட்டது என்று அமெரிக்காவின் வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆலயங்கள் மற்றும் கிறிஸ்தவ சமூகத்தின்மீது கடந்த ஆண்டு பல தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளதாக அமேரிக்கா கூறுகிறது. அதேபோல் பள்ளிவாசல்களும் தாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் சுமார் 70 விழுக்காடு அளவுக்கு பெரும்பான்மையினராக இருக்கும் சிங்கள மக்களாலேயே இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன என்றும் அமெரிக்க அரசின் அந்த ஆண்டறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

புத்தத் துறவிகள் தலைமையேற்று நடத்திய பல தாக்குதல்கள் உள்ளூரில் இருக்கின்ற ஊடகங்களில் வெளிவராமலேயே போனது என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

வத்திக்கான் ஊழல் மோசடி விசாரணை கர்தினால்களுடன் பாப்பரசர் சந்திப்பு

வத்திக்கான் நிர்வாகத்தில் காணப்படும் ஊழல் மோசடிகள் குறித்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள நியமிக்கப்பட்ட மூன்று கர்தினால்களுடன் புனித பாப்பரசர் 16ம் ஆசீர்வாதப்பர் சந்திப்பொன்றை மேற்கொண்டுள்ளார்.

வத்திக்கான் நிர்வாகத்தில் அதிகாரப் போட்டிகள் நிலவுவதாகவும் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தி சிலர் ஆதாயம் காண்பதாகவும் கூறப்படும் குற்றச்சாட்டுகளை விசாரிக்க நியமிக்கப்பட்ட 3 மூத்த கர்தினால்களுடன் பாப்பாண்டவர் தனிமையில் நீண்ட நேரம் ஆலோசனை நடத்தினார். ஸ்பெயினைச் சேர்ந்த ஜீலியன் ஹெரன்ஸ், ஸ்லோவாதியாவைச் சேர்ந்த ஜோசப் டோம்கோ, இத்தாலியைச் சேர்ந்த சால்வடோர்டிஜார்ஜி ஆகியோருடன் பாப்பரசர் நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்தார்.

"கத்தோலிக்க மதத் தலைமைப் பீடத்தை அலங்கரிக்கும் பாப்பரசர் பதவி ஏற்றது முதலே அவர் உடல் நலம் குன்றிக் காணப்படுகிறார். எனவே துடிப்பாக அவரால் செயற்பட முடியவில்லை. இதைச் சிலர் தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள நினைக்கின்றனர்." இந்தத் தகவல்கள் அடங்கிய ஆவணங்களை பாப்பரசர் சமையல்காரர் பாவ்லோகபிரியேல் என்பவர் தன்னுடைய குடியிருப்பில் வைத்திருந்தார்.

அவருடைய நடவடிக்கையில் சந்தேகம் அடைந்த பொலிஸார் அவருடைய வீட்டைச் சோதனையிட்டபோது சர்ச்சைக்குரிய சில ஆவணங்கள் சிக்கின. பிறகு இது உலக அளவில் பேசப்படும் அளவுக்குப் பெரிதானது. சமையல்காரர் பாவ்லோ மே மாதம் 23ஆம் திகதி அன்று கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். ஆனால் இந்த ஆவணம் அவர் ஒருவரிடம் மட்டும் இல்லை, வேறு சிலரிடமும் இருக்கிறது என்று கூறப்படுகிறது. எனவேதான் பாப்பரசர் இது குறித்துக் கவலை அடைந்துள்ளார்.

அனைத்து சமயத்தலைவர்களும் அமைதிக்காக உழைக்க வேண்டும்

திருத்தந்தை வலியுறுத்து

சமயத்தலைவர்கள் அமைதிக்காக உழைக்க வேண்டியது தற்போதைய சமூகத்திற்கு மிக முக்கியம் என்று ஜப்பானின் Hiei மலையில் நடைபெற்று வரும் உலக அமைதிக்கான 25வது பல்சமய செபக்கூட்டத்திற்கு அனுப்பியுள்ள தந்திச் செய்தியில் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் குறிப்பிட்டுள்ளார்.

Kyotoவுக்கு வடகிழக்கிலுள்ள Hiei மலையில் ஜப்பானின் Tendai புத்தமதப் பிரிவு ஆரம்பிக்கப்பட்ட இடத்தில் 03.08.2012 அன்று தொடங்கிய இரண்டு நாள் உலக அமைதிக்கான பல்சமய செபக் கூட்டத்தில் திருப்பீடத்தின் சார்பில் கலந்து கொள்ளும் திருப்பீட பல்சமய உரையாடல் அவையின் முன்னாள் செயலர் பேராயர் Pier Luigi Celata, இக்கூட்டத்திற்கெனத் திருத்தந்தை வழங்கிய தந்திச்செய்தியை வாசித்தார்.

1986ம் ஆண்டில் இத்தாலியின் அசிசியில் அருளாளர் திருத்தந்தை 2ம் ஜோன் போல் நடத்திய வரலாற்று சிறப்புமிக்க உலக அமைதிக்கான பலசமய செபக்கூட்டத்தின் உணர்வில் தற்போது Hiei மலையில் நடைபெற்று வரும் உலக அமைதிக்கானச் செபக் கூட்டம் மற்றும் கருத்தரங்கில் கலந்து கொள்ளும் சமயத் தலைவர்களுக்குத் தனது வாழ்த்துக்களைத் திருத்தந்தை தெரிவித்துள்ளார். இயற்கைப் பேரிடர்கள் சமயத்தில் சமயத் தலைவர்களின் பங்கேற்பு குறித்து இக்கருத்தரங்கில் கலந்து பேசப்படவுள்ளது.

'நாசரேத்தூர் இயேசு' என்ற தனது நூலின் மூன்றாவது பாகத்தை எழுதி முடித்துள்ளார் திருத்தந்தை

காஸ்தெல் கந்தோல்ஃபோவிலுள்ள பாப்பிறைகளின் கோடை விடுமுறை இல்லத்தில் ஓய்வெடுத்த திருத்தந்தை 16ம் பெனடிக்ட், நாசரேத்தூர் இயேசு என்ற அவரது நூலின் மூன்றாவது பாகத்தை எழுதி முடித்துள்ளார் என்று திருப்பீட பத்திரிகை அலுவலகம் அறிவித்துள்ளது.

இந்நூல் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்படும் என்றும் அவ்வலுவலகம் அறிவித்துள்ளது. மேலும், வருகிற அக்டோபரில் தொடங்கவிருக்கும் விசுவாச ஆண்டையொட்டி புதிய திருமடல் ஒன்றைத் திருத்தந்தை வெளியிடக்கூடும் என்று கர்தினால் பொத்தோனே கூறினார்.

2005ம் ஆண்டில; Geus caritas est, 2007ம் ஆண்டில் Spe salvi, 2009ம் ஆண்டில் Caritas in veritate ஆகிய திருமடல்களையும் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

கிறிஸ்தவ மற்றும் முஸ்லீம் இளையோருக்கு

நீதி மற்றும் அமைதிக்கான கல்வி கற்றுக் கொடுக்கப்பட வேண்டும்

திருப்பீட பல்சமய உரையாடல் அவை



நீதியையும் அமைதியையும் நேர்மையுடன் அறிவிக்கும் பொருட்டு உண்மை மற்றும் சுதந்திரத்தை வளர்த்துக் கொள்ளுமாறு கிறிஸ்தவ மற்றும் முஸ்லீம் இளையோருக்கு திருப்பீட பல்சமய உரையாடல் அவை அழைப்பு விடுத்துள்ளது.

ஒவ்வொரு குடிமகனின் மாண்பையும் உரிமைகளையும் மதிக்கும் கலாச்சாரத்தைக் கட்டியெழுப்புகிறவர்களாகவும் இவ்விளையோர் செயல்படுமாறு கேட்டுள்ள இத்திருப்பீட அவை, இவற்றை இவர்கள் தங்கள் வாழ்வில் அடைவதற்கு, ஏமாற்றும் குறுக்கு வழிகளைப் பின்செல்லாமல் பொறுமை மற்றும் விடாஉறுதியைக் கொண்டிருக்குமாறும் அழைப்பு விடுத்துள்ளது.

இம்மாதிரியான வாழ்வில் உண்மையிலேயே நம்பிக்கை வைத்துள்ள மனிதர்களால் மட்டுமே நீதியும் அமைதியும் ஆட்சி செய்யும் சமூகங்களைச் சமைக்க முடியும் என்றும் அவ்வவை கூறியுள்ளது.

கடந்த ஜீலை 19 முதல் ஆகஸ்ட் 18 வரை கடைப்பிடிக்கப்படும் ரம்ழான் மாதத்தின் இறுதியில் சிறப்பிக்கப்படும் 'Id al-Fitr விழாவுக்கெனச் செய்தி வெளியிட்டுள்ள திருப்பீட பல்சமய உரையாடல் அவை இவ்வாறு கிறிஸ்தவ மற்றும் முஸ்லீம் இளையோரிடம் கேட்டுள்ளது.

ஒருங்கிணைந்த முழு மனிதரின் தனித்துவத்தால் மட்டுமே நீதியை உறுதிசெய்ய முடியும் எனவும், சின்னாபின்னமாகியுள்ள இன்றைய நமது உலகில் அமைதி குறித்து இளையோருக்கு கற்றுக்கொடுப்பது அவசரத் தேவையாக இருக்கின்றது எனவும் அச்செய்தி வலியுறுத்துகிறது.

கிறிஸ்மஸ், ஈஸ்ரைப்போல் தீபாவளிக்கும் விடுமுறை வேண்டும்

தென்னாபிரிக்காவில் கோரிக்கை

தீபாவளியைக் கொண்டாட அன்றைய தினத்தை பொது விடுமுறையாக அறிவிக்க வேண்டும் என தென்னாபிரிக்க இந்து மகாசபை அந்நாட்டு அரசிடம் கோரியுள்ளது.

தென்னாபிரிக்காவில் கிறிஸ்மஸ் மற்றும் ஈஸ்டர் திருவிழாவுக்கு மட்டும் பொது விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. இந்துக்களும், முஸ்லிம்களும், கணிசமான அளவில் இந்த நாட்டில் இருப்பதால், தங்கள் கலாசார திருவிழாவுக்கும் விடுமுறை அளிக்க வேண்டும் எனக் கோரி வருகின்றனர். தென்னாபிரிக்க இந்து மகாசபைத் தலைவர் அஸ்வின் திரிகாம்ஜி இது குறித்த குறிப்பிடுகையில்,

'இந்துக்கள் தீபாவளியை கோலாகலமாகக் கொண்டாடி வருகின்றனர். ஆனால், அன்றைய தினம் இங்குள்ள நிறுவனங்கள் இந்துக்களுக்கு விடுமுறை அளிக்க மறுக்கின்றன. எனவே, அன்றைய தினத்தை பொது விடுமுறையாக தென்னாபிரிக்க அரசு அறிவிக்க வேண்டும்.

இதன் மூலம் இந்த விழாவில் மற்ற மதத்தினரும் பங்கேற்க வழி ஏற்படும் என்றார். முஸ்லிம்கள் பக்ரீத் திருவிழாவுக்கு பொது விடுமுறை அறிவிக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிர்வுகள் .....!

அருட்பணியாளர் அன்புராசா (அமதி) எழுதும்

சமகால சமூக அரசியல் ஆன்மீகம் சார்ந்த தொடர் 11.

வின்சன் சேர்ச்சில் தன் அரசியல் வாழ்வின் வெற்றி தோல்விகளைப் பற்றி மனம் திறந்து உரையாற்ற ஆரம்பித்தார். வாழ்க்கை அனுபவங்கள் தந்த பாடங்களைப் பற்றி வியாபித்துச் சொன்னார். அவரின் இவ்வனுபவத்தைக் கொச்சைப்படுத்தும் நோக்குடன், "சேர்ச்சில் அவர்களே, உங்கள் அனுபவம் வியப்புக்குரியது. ஆனால், அனுபவம் என்பது மூடர்களுக்குத்தானே பாடம் கற்றுக்கொடுக்கும்!" என்றான் ஒருவன். வின்சன் சேர்ச்சில் அவன் கருத்தை ஏற்றுக்கொள்வது போல தலை அசைத்துவிட்டு, "ஆமாம் நீ கூறுவது உண்மைதான், அதனால்தான் அவற்றை உனக்குச் சொல்கிறேன்!" எனப் பதிலளித்தார் அப்புத்திசாலிக்கு!

'சிம்மாசன நோய்'!

மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை ஆகிய மூவாசைகளைப் பற்றிப் பாரம்பரியமாகச் சொல்லி வருகிறார்கள். இக்கருத்தியலோடு முழுமையான உடன்பாடு இல்லாவிட்டாலும் அதனைத் தொடக்கமாக வைத்து இவ்வாசைகளைவிட இன்னுமொரு ஆசையைப் பற்றி எழுத்தாளர் அப்துல் ரகுமான், "மரணம் முற்றுப்புள்ளி அல்ல" என்ற நூலில் 'சிம்மாசன நோய்' என்ற தலைப்பில் எழுதுகிறார். "...மூவாசையைவிடப் பெரிய ஆசை சிம்மாசன ஆசை. அதனால்தான் மூன்றையும் கொடுத்தாவது அதைப்பெற முயலுகிறான் மனிதன். அதிகாரம் விசித்திரமான சாராயம். அதைக்குடிக்கிறவன் தன்னை மறப்பதில்லை; பிறரை மறந்து விடுகிறான்..." என அப்துல் ரகுமான் குறிப்பிடுகிறார்.

எந்த அளவிற்கு சிம்மாசன ஆசை நாம் வாழும் உலகைப் பீடித்திருக்கிறது என்றால் சிம்மாசனங்களில் அமர்வதற்காக அல்லது அமர்ந்திருக்கின்ற இருக்கைகளைத் தொடர்ந்து தக்க வைப்பதற்காக அல்லது இருப்பவனை கவிழ்த்துவிட்டு ஏறிக் குந்துவதற்காக மனிதர்கள் படுகின்ற பாடு – செய்கின்ற பிரயத்தனம் இருக்கிறதே, சொல்லிமாளாது! அது இறைவனை மையப்படுத்தி இயங்கும் சமய – மத அமைப்புக்களையும், நிறுவனங்களையும்கூட விட்டுவைத்தபாடில்லை என்றே தோன்றுகிறது. சொன்ன விளக்கம் போதும்! இதற்கு அப்பால் அமைதி காப்பதற்கு நன்றி...!

'நடந்தவை எல்லாம் நன்றாகவே நடந்தன...?'

27.05.2012 அன்று மட்டக்களப்பில் தமிழரசுக் கட்சி மாநாடு நடந்திருக்கிறது. வீராவேச பேச்சுக்கள், திகில் ஏற்படுத்தும் தீர்மானங்கள், பட்டாபிசேகம் எனப் பல விடயங்கள் நடந்திருக்கின்றன. "நடந்தவை எல்லாம் நன்றாகவே நடந்தன, நடக்கிறவை எல்லாம் நன்றாகவே நடக்கின்றன, நடக்கப்போகிறவை எல்லாம் நன்றாகவே நடக்கும்" எனக் கீதை கூறும். அதுபோல, 2012 தமிழரசுக் கட்சி மாநாட்டில் நடந்தவை நன்றாகவே நடந்தன!

ஆனால், நடக்கிறதையும் நடக்கப்போவதையும் பார்த்தால் மகாகவி பாரதி பாடியதுபோல,"நெஞ்சு பொறுக்குதில்லையே நெஞ்சு பொறுக்குதில்லையே, இந்த நிலைகெட்ட மனிதரை நினைத்து விட்டால், நெஞ்சு பொறுக்குதில்லையே... நெஞ்சு பொறுக்குதில்லையே!..." என மன ஆறுதலுக்காகவேனும் இச்செய்யுளை அடிக்கடி பாடவேண்டி இருக்கிறது.

மேலும், எண்ணமோ பெரிது. காரியமோ சிறிது. "எல்லாவற்றுக்கும் சத்தமும் சந்தடியும் நிறைந்த காலமிது. நாம் எல்லாவற்றையும் அமைதியாகவே செய்ய விரும்புகிறோம்" என்ற உறுதியான மனநிலையோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் செயற்பட்டால் எல்லாருக்கும் நன்மை பயக்கும் என்பது பலதரப்பட்டவர்களின் கருத்தாகும். எப்போதும்போல நமக்குள்ளே பழங்கதைகளைப் பேசிப்பேசியே காலத்தைக் கடத்தாது ஆக்கபூர்வமான செயல்களில் புலன்களைச் செலுத்துவது பயன்தரும்.

கலாநிதி மு. வரதராசனார் திருக்குறளுக்குப் பொருள் விளக்கம் எழுதியவராவார். தமிழினம் பற்றியும் அவர் ஆய்வுகள் செய்திருக்கிறார். அதில் போட்டி, பொறாமை, ஒற்றுமையின்மை ஆகிய முக்குணங்கள் தமிழர்களோடு இயல்பிலேயே இருக்கிறது என்கிறார். முத்தமிழ், முக்கனி என்பவைபோல தமிழரின் முக்குணங்கள் அமைந்திருக்கின்றன போலும்! எனினும் இனிய முத்தமிழ், சுவைநிறைந்த முக்கனி போல தமிழரின் முக்குணங்கள் இல்லாததுதான் கவலையளிக்கிறது. மு. வரதராசனாரின் ஆய்வு முடிபு, சிந்தித்து பார்க்க வேண்டிய ஓர் ஆய்வு முடிபுதான். மக்களின் பிரதிநிதிகளாக இருப்பவர்கள் இவற்றைக் கருத்தில்கொண்டு செயல்பட வேண்டிய கடப்பாடு அவர்களுக்கு இருக்கிறது என்பதை அழுத்திக் கூறவேண்டி இருக்கிறது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் குத்துக்கறணம்?

தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருக்கும் சிலர் தங்கள் நிலைப்பாடுகளில் அவ்வப்போது குத்துக்கறணம் போடுவதையும், 'குண்டக்க மண்டக்க' பேசுவதையும் - கருத்துக் கூறுவதையும் அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. இதனை தமிழ் சிவில் சமூகம் ஒருசில சந்தர்ப்பங்களில் சுட்டிக்காட்டி இருந்தது. குத்துக்கறணம் போட்டு விளையாடுகிற வயதில் தமிழ் தேசிய கூட்டமைப்பில் உள்ள பலர் இல்லை என்பதை அதில் உள்ளவர்கள் கொஞ்சம் கருத்தில் கொள்ள வேண்டும்.

அப்படி இல்லை என்று குத்துக்கறணம் போட்டு விளையாட முனைந்தால் ஊட்டி முறிந்து முண்டமாய்த்தான் கிடக்க வேண்டி வரும்! அப்படி, ஊட்டி முறிந்து முண்டத்தோடு முனங்கிக் கொண்டிருக்கின்ற சிலர் இருக்கிறார்கள் என்பதைக் குத்துக்கறணம் போட அவ்வப்போது நினைப்பவர்கள் ஞாபகப்படுத்திக்கொள்வது நல்லது.

தமிழ் கூட்டமைப்புக்குள்...!

உள்ளூர் சபைத் தேர்தல்களின் பின்னர், தமிழ் தேசிய கூட்டமைப்பிற்குள் சில குள்ளநரிகளும் ஊடுருவி இருப்பதுபோல ஆங்காங்கே சில அடையாளங்கள் தென்படுகின்றன. தனிப்பட்ட, வெறும் சுயநல தேவைகளை நிறைவுசெய்வதற்காக குறுக்கு வழிகளை சிலர் நாடுகிறார்கள்போல தெரிகிறது. பொறுப்பில் உள்ள கூட்டமைப்பினர், 'எங்களுக்கு எல்லாம் தெரியும்!' என நினைப்பார்களேயானால் எல்லாம் கவிண்டு கொட்டி,' எப்பிடி இருந்தநா, இப்பிடி ஆயிற்றனே' என்ற விவேக்கின் நகைச்சுவைத் துணுக்கைப்போல சிலருடைய 'அரசியல் வாழ்வும்', இன்னும் சிலரின் 'அரசியல் பிரவேசமும்' மாறிவிடும் என்பதையும் சுட்டிக்காட்டுவது தவிர்க்க முடியாததாகிறது!

கவனமாக, விவேகமாக, விழிப்பாக இருந்து சொல்லாலும் செயலாலும் நேர்மையோடும், மனச்சுத்தியோடும் செயற்பட வேண்டியது கூட்டமைப்பினரின் இக்காலத்து தலையாகிய கடமையும் பொறுப்புமாகும். இதனை உறுதிப்படுத்துவது பொறுப்பானவர்களின் கடனாகும். ஊர்களில், கிராமங்களில், மக்களிடையே வேண்டாத – தகாத பிரச்சினைகளையும் பிரிவினைகளையும் உருவாக்கிக் காலத்தை ஓட்டலாம் என இனிமேலும் நினைக்காமல், செயலாற்ற முன் வருவார்களேயானால், அது கூட்டமைப்புக் கூடியிருக்க உதவியாய் இருக்கும்.

தமிழ் சிவில் சமூகம்

தமிழ் சிவில் சமூகத்தின் முன்னெடுப்புகள் காலத்தின் தேவையும், பாராட்டிற்கும் உரியவை. தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர், தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளையும் நீண்டகால அபிலாசைகளையும் வென்றெடுக்க தமிழ் சிவில் சமூகத்தினரின் ஆலோசனைகளுக்குச் செவிசாய்ப்பது அவர்களுக்கு நிச்சயம் உதவியாய் இருக்கும். இல்லை என்று தாங்கள் நினைத்தபடி செயற்படுவார்களேயானால், 2013ஆம் ஆண்டு அதாவது அடுத்த மே தினத்திற்கு கட்டியிருக்கின்ற வேட்டியைக் கழற்றித் கொடுத்தாலும் கோவணத்தோடு நின்று கொடிபிடிக்க வேண்டி வரலாம்! கோவணத்திற்கு அடுத்த கட்டம் எப்படி இருக்கும் என்பதை நீங்களே கற்பனை செய்து கொள்ளலாம்!

சிவில் சமூகத்தைத் தலைமை தாங்கும் ஆயன்

தமிழ் சிவில் சமூகத்தினுடைய பிரதிநிதிகளுக்கு தலைமை தாங்குபவராக மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை திகழ்கிறார். ஆயர் அவர்களின் அரசியல் நிலைப்பாடுகள், கடந்த பல ஆண்டுகளாக குரல் இழந்த நம் மக்கள் சார்பான செயற்பாடுகள் அனைத்தையும் நோக்குகிறபோது அவரின் ஆயத்துவ ஆளுமையும், ஆடுகளின்மீது ஆயனுக்குள்ள அக்கறையும் மிகத் துல்லியமாகப் புலப்படுகிறது.

01.03.2012இல் மன்னார் ஆயருடன் 31 அருட்பணியாளர்கள் இணைந்து ஜெனிவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவைக்கு, 'மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்கள் தொடர்பில் உண்மைகள் ஏற்கப்பட்டு பொறுப்புக்கூறல் உறுதி செய்யப்பட வேண்டும்' என்ற தலைப்பில் கடிதம் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டது.

இது தொடர்பாக பி.பி.சி. செய்தி நிலையத்தினால், 'இக்கருத்து, உங்கள் தனிப்பட்ட கருத்தா அல்லது கத்தோலிக்க திருச்சபையினுடைய ஒட்டுமொத்த கருத்தா?' என ஆயர் இராயப்பு யோசேப்பிடம் வினவப்பட்டது. 'உண்மையைச் சொல்வதற்கு ஒரு பெரிய கூட்டத்தை வைத்துக் கொண்டுதான் சொல்லவேண்டும் என்றல்ல. உண்மையை, தனித்தும் சொல்லத் தயங்கேன். இது எங்களுடைய தனிப்பட்ட கருத்துத்தான்...' எனக்கூறி, தமது நிலைப்பாட்டை எப்போதும்போல துணிவோடு நிலைநாட்டியிருக்கிறார். அத்தகைய தைரியம் - துணிபு ஆயருக்கு இருக்க வேண்டும். அது நம் ஆயருக்கு இருக்கிறது.

ஆயரின் கரங்களைப் பலப்படுத்துவோம்

ஆக, இப்போது அவரின் கரங்களுக்கு நாம் கட்டாயமாக வலுச்சேர்க்க வேண்டியது நமது பாரிய கடன். அந்த வகையில்தான், தென்னிலங்கை அருட்பணியாளர், துறவியர், பொதுநிலையினர் என 61 பேர் 12.03.2012 அன்று ஐக்கிய நாடுகள் மனித உரிமை மையத்திற்கு மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக, மன்னார் ஆயரின் - அவருடன் கையொப்பமிட்ட 31 அருட்பணியாளர்களின் நிலைப்பாட்டை ஆதரித்து கடிதம் அனுப்பியிருந்தனர். பாராட்டப்பட வேண்டிய விடயம் மட்டுமல்ல நம் பிரதேசத்துப் பொது அமைப்புகளாலும், ஒன்றியங்களாலும், சிறப்பாகத் திருச்சபை சார்ந்த எல்லாத் தரத்தில் உள்ளவர்களாலும் பின்பற்றப்பட வேண்டிய ஒன்று என்பதையும் குறிப்பிட்டுக் காட்டாமல் இருக்க முடியாது.

'மன்னார் ஆயர்மீது சி. ஐ. டி. யினர் கடுமையான விசாரணை' நடத்தியிருப்பதாக பத்திரிகைகள் 12.05.2012இல் செய்தி வெளியிட்டிருக்கின்றன! இவ்வாறான விடயங்கள் மட்டில் நம் சிந்தனைகள் என்ன? எம் கூட்டுச் செயற்பாடுகள் எப்படித் தொடர்ந்து அமையப் போகின்றன? இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டுதான் 27.05.2012 அன்று மன்னார் புனித செபஸ்தியார் ஆலயச் சூழலில் நடத்தப்பட்ட அமைதிப் பிராத்தனை அமைந்திருந்தது என்பதை நோக்க வேண்டியிருக்கிறது. மிகக் காத்திரமான செயற்பாடு ஒன்று நடந்தேறி இருக்கிறது.

ஐயகோ இறைவா!

கடுமையான போர் நடந்த காலமாகிய 2009இல், இரண்டு தடவைகளாக நம் நாட்டு ஜனாதிபதி திருத்தந்தை 16ஆம் பெனடிக்ரை சந்தித்தார். இச்சந்திப்புக்களை ஏற்பாடு செய்து கச்சிதமாகக் இக்காரியங்களை முடித்தவர் கொழும்புக் கருதினால் மல்கம் றஞ்சித் அவர்கள் என்று சொல்லப்படுகிறது. இவ்வருடம் 2012 பங்குனியில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கைக்குப் பாதகமான தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது அனைவரும் அறிந்ததே.

(தொடர்ச்சி 13ஆம் பக்கம்)

புனித மாக்சிமில்லியன் கோல்பே

குரு, மறைசாட்சி – (கி.பி. 1941)

மாதமொரு புனிதரை அறிந்துகொள்வோம்

ஒகஸ்ட்

புனிதர்களின் பாதையில்

இவர் போலந்து நாட்டினர். பிரான்சிஸ்கன் சபைக் குரு. இவரது காலத்தில் ஜெர்மனியின் அரக்கன் ஹிட்லர் தமது நாசிச, நாஸ்திகக் கொள்கைப்படி பல தீங்குகளை இழைத்து வந்தான். இலட்சக் கணக்கான யூதர்களைத் தீக்கிரையாக்கினான். கிறிஸ்தவர்களையும் விட்டுவைக்கவில்லை. அவன் அப்பாவி மக்களின் இரத்தத்தைத் தாரை வார்த்ததுபோல் முந்திய நூற்றாண்டில் வேறு எந்த அரக்கனும் செய்திருக்க முடியாது.

மாக்சிமில்லியனுக்கு 47 வயது நடக்கும்போது இவரும் ஆயிரக்கணக்கானவர்களும் [illegible] நடக்கும்போது சித்திரவதைகளுக்கும் உள்ளாக்கப்பட்டனர்.

ஒருமுறை ஆஸ்விட்ஸ் என்ற நகரில் சிறைப்படுத்தப்பட்டவர்களில் இளைஞரான குடும்பத் தலைவர் ஒருவர் சாவுத் தண்டனைக்குத் தீர்ப்பிடப்பட்டார். இளைஞரோ, "என் குடும்பம் என்னாவது?" என்று கூறி அழுதார். புனிதர் இதைக் கண்டு, "உனக்குப் பதில் நான் சாகத் தயார்" என்று கூறி அச்சத்தை நீக்கினார். அவருக்குக் கார்பாலிக் ஆசிட் என்ற நச்சு ஊசி ஏற்றப்பட்டது. உயிர் துறந்தார்.

இவ்வாறு மாக்சிமில்லியன் கோல்பே மற்றவர்களுக்காக உயிரைக் கொடுத்தார். புனிதருக்குப் 10 வயது கன்னிமரி இவருக்குக் காட்சி கொடுத்திருக்கிறார். கற்பின் அடையாளமாக வெள்ளை மணிமுடி ஒன்றும் மறைசாட்சியின் அடையாளமாக சிவப்பு மணிமுடி ஒன்றும் இவருக்கு அன்னை காண்பித்தார். இரண்டில் ஒன்றைத் தெரிந்துகொள்ளச் சொன்னார். புனிதர் இரண்டையும் எடுத்துக் கொண்டார். புன்முறுவலுடன் மரியன்னை மறைந்துவிட்டார்.

இவர் தம் 16ஆவது வயதில் பிரான்சிஸ்கன் துறவற சபையில் சேர்ந்தார். அங்கே என்புருக்கி நோய் இவரைத் தாக்கியது. அப்போது அவர் உரோமையில் குருத்துவத்திற்குப் படித்துக்கொண்டிருந்தார். "தீமையைவிட நன்மை எளிதில் பரவும் தன்மையுடையது" என்ற அசையாத நம்பிக்கை கொண்டிருந்தார். அன்னை மாமரியிடம் பிள்ளைக்குரிய அன்பைக் காட்டினார். "அவர் நம்மை முழுமையாக நடத்துவதற்கு நம்மையே கையளிக்க வேண்டும். அவரின் கைகளில் நம்மை ஒப்படைக்கும்போது, நமக்கு எல்லாம் அமைதியும் நிறைவுமாக இருக்கும். அப்போது அவர் நம்மைப் பாதுகாக்கிறார், அள்ளித் தருகிறார், உள்ள, உடல் தேவைகளை நிறைவுசெய்கிறார். நம் இன்னல்களை நீக்கிவிடுகிறார்" என்பார். நாம் மரியன்னையிடம் கொண்டிருக்க வேண்டிய உறவை இவ்வாறு கற்றுக் கொடுக்கிறார்.■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீடர்களா? அன்றேல் பக்தர்களா?

தன்னார்வ இறைவார்த்தைப் பணியாளர் கி. அருளப்பு

இயேசுவின் பின்னால் சென்ற மனிதர்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று அவருடைய போதனைகளால் ஈர்க்கப்பட்டு அவரைப் பின்பற்றியுவர்கள். இன்னொன்று குணம் பெறும் பொருட்டு அவரைத் தேடியவர்கள். வெறுமனே புதுமைக்காகவும் குணத்துக்காகவும் வந்தவர்களே இவர்கள். அதைப்பெற்றவுடன் அவரைவிட்டு அவர்கள் விலகி விடுகின்றனர். ஆனால் இயேசுவைப் பின்பற்றியவர்களோ தங்களுடைய சுயநல எதிர்பார்ப்புகளை முன்வைக்காமல் இயேசுவையே முன்வைத்து அவரைப் பின்பற்றியவர்கள். இவர்கள்தான் சீடர்களாக இருக்க முடியும். வெறுமனே புதுமைகளை எதிர்நோக்கி இருந்தோமென்றால் நாமும் வெறும் பக்தர்களே. இயேசு பக்தர்களை அல்ல, சீடர்களைத்தான் தேடுகிறார் (யோவான் 6:25-27).

இக்கால உலகின் போக்கு ஓர் இயந்திரமயமானதாகக் காணப்படுகிறது. மனித வாழ்வு ஓய்வற்ற இயந்திரமாக மாறிவிடுகின்றது. பலரும் மனித வாழ்வின் அர்த்தத்தை தேடுவதில் முனைப்பாக இருக்கின்றனர். மனிதனின் இயற்கையான நாட்டம் அர்த்தத்தை தேடுவதாகும். அமெரிக்க பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்ட மதிப்பீடு ஆய்வொன்றில் 8000 மாணவர்களிடையே நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பில் 20 வீத மாணவர்கள் வாழ்க்கைக்கு அர்த்தத்தை கொடுப்பது செல்வம் என்று கூறினார்கள். 70 வீதமான மாணவர்கள் வாழ்வில் அர்த்தத்தை தேடுவதே ஒப்பற்ற செல்வம் என்று கூறினார்கள். இது அவர்களின் தேர்வு.

எப்பொழுது மனிதன் தான் ஏன் வாழ்கிறேன் என எண்ணுகிறானோ அப்பொழுதுதான் கருத்தூன்றிய வாழ்வு தழைவிடுகின்றது. பகுத்தறிவுள்ள மனிதர் ஒவ்வொருவரும் ஏதோ ஒருவிதத்தில் வாழ்வின் அர்த்தத்தை தேடுபவர்களாய் இருக்கிறார்கள். பலருக்கு அர்த்தம் மறைவானதாகவே உள்ளது. அவர்கள் விரக்தி அடைந்த நிலையிலேயே வாழ்கிறார்கள். ஆனால் என்றுமே மாறாத இறைவார்த்தை நம் வாழ்வைக் கட்டியெழுப்ப வல்லது.

கடவுளின் வாக்காக உள்ள இயேசுவை நேரடியாக சந்திப்பதில் ஏற்படும் மகிழ்ச்சியை பிறருடன் பகிர்ந்தளிப்பதே திருச்சபையின் கொடையும் தவிக்கமுடியாத கடமையுமாகும். இதைவிட மிகவும் சிறந்தது எதுவும் இருக்க முடியாது. அதாவது வாழ்வை நிறைவாக நாம் பெறுவதற்கென்று நம்மிடம் பேசி, தன் அன்பைப் பகிர்ந்துகொண்டுள்ள கடவுளை மீண்டும் ஒருமுறை நம் காலத்து மக்களை சந்திக்க தூண்டுவதே அது.

தங்களைத் தாங்களே திறக்காததன் முலம் பெற வேண்டியவைகளைப் பெறாமல் அந்நிலையிலே இருப்பது நாமே தேடிக்கொண்ட தண்டனைதானே. இங்கு நாம் ஒன்றை தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். எவ்வளவு தூரம் நம்மை நாம் திறந்தவர்களாக்கி செயற்படுகின்றோம் என்பதை பொறுத்து தான் நம்முடைய விளைச்சல் இருக்கும். அதாவது கனிகள் இருக்கும். கனி என்பது நாம் சுவைப்பது அல்ல நம்மில் இருந்து மற்றவர்கள் சுவைப்பது. இதை ஆண்டவர் இயேசுக்கிறிஸ்து எமக்குக் கூறியுள்ளார். "நீங்கள் என்னுள்ளும் என் வார்த்தை உங்களுள்ளும் நிலைத்திருந்தால் நிறைந்த கனி கொடுப்பீர்கள். நீங்கள் மிகுந்த கனிதந்து என் சீடராய் இருப்பதே என் தந்தைக்கு மகிமை" என்றார். (யோவா 15:7-8). இயேசுவை அறியாமலும் அனுபவிக்காமலும் நாம் பணி செய்ய முடியாது.

அவரது பாடுகள் மரணம் உயிர்ப்பு இவைகளின் தத்துவங்களை அறியாத ஒருவன் உண்மையான ஊழியக்காரனாக இருக்கமுடியாது. இந்தத் தத்துவத்தின் அடிப்படையிலேதான் ஆண்டவர் இயேசு பணி செய்தார்.

பணி என்றால் என்ன? ஒவ்வொரு பணியின் உருவாக்கத்திலும் ஆறு பண்புகள் முனைப்புப் பெறுகின்றன. முதலாவது எதையாவது செய்வது, இரண்டாவது வெளிப்படையாகச் செய்வது, மூன்றாவது கிறிஸ்தவ சமுகத்தின் சார்பாக செய்வது, நான்காவது கிறிஸ்துவுக்காக செய்வது, ஐந்தாவது திருமுழுக்கு, குடும்பம், குருத்துவம் போன்றவற்றினூடாக பெறப்படுகின்ற கொடைகளிலிருந்து செய்வது, ஆறாவது நம் ஒவ்வொருவருடைய சொந்த வரையறுகளுக்கிடையே இருந்து செய்வது. இந்த ஆறு பண்புகளும் உண்மையான சீடத்துவ பண்புகளை முன்னிலைப்படுத்துகிறது.

அறிவியல் பேசுவது ஆய்விலே! ஆண்டவன் பேசுவது அனுபவத்திலே! கடவுளைப் பற்றுவது அறிவு, ஆண்டவரைப் பற்றுவது அன்பு. நாம் வர்த்தையால் படைக்கப்பட்டவர்களாகவும் வார்த்தையில் வாழ்பவர்களாகவும் இருக்கின்றோம். எனவேதான் நாம் சீடர்களா? அன்றேல் பக்தர்களா? என்பதனை நாம் ஒவ்வொருவரும் பரிசீலிப்போம்.

மண்ணகப் பொருளில் மகத்துவம் இல்லை, விண்ணக செல்வம் வீழ்வதுமில்லை! உங்கள் செல்வம் எங்கே உள்ளதோ அங்கே உங்கள் மனமும் இருக்கும். இரண்டு குதிரையில் ஏறிட முடியுமா? இருவருக்குள் ஊழியம் நடக்குமா? செல்வம் ஒருபுறம், கடவுள் ஒரு புறம். ஒன்றைத் தேர்ந்தெடு உங்களில் அமைதி. செல்வம் தேர்ந்தால் தீராத் துயரம்; கடவுளைத் தேர்ந்தால் தினமும் நிம்மதி. (இயேசு காவியம்) கேட்கச் செவியுள்ளோ கேட்கட்டும்.

துயர் பகிர்கின்றோம்

குருக்கள் துறவியரில் அன்பும் அக்கறையும் கொண்ட

இராயப்பு மாஸ்ரர் இறையடி சேர்ந்தார்

விடத்தல்தீவைச் சேர்ந்த 'இராயப்பு மாஸ்ரர்' என்று அனைவராலும் அறியப்பட்ட இளைப்பாறிய அதிபரும் சமாதான நீதிவானுமாகிய திரு. பேதுரு இராயப்பு அவர்கள் கடந்த ஓகஸ்ட் மாதம் 06ஆம் திகதி தனது 84வது வயதில் இறையடி சேர்ந்தார். இவருடைய பூதவுடல் கடந்த ஓகஸ்ட் 8ஆம் திகதி விடத்தல்தீவில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

நானாட்டான் பங்குத்தந்தையும் முருங்கன் மறைக்கோட்ட முதல்வருமாகிய அருட்திரு. அகஸ்ரின் புஸ்பராஜ் அவர்களின் அன்புத்தந்தையான இவர் திருச்சபைப் பணிகளில் முழுமையாக தன்னை ஈடுபடுத்திவந்த ஓர் இறைபணியாளர் ஆவார். தனது சொந்தக் கிராமமான விடத்தல்தீவு ஆலய நிர்வாகத்தில் பல ஆண்டுகள் பல்வேறு நிர்வாகப் பொறுப்புக்களை இவர் வகித்துவந்துள்ளார். விடத்தல்தீவு புனித இயாகப்பர் ஆலய கட்டுமானப் பணிகளில் அதீத ஆர்வத்துடன் உழைத்தார். மறையாசிரியராகவும் பல ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். மறைமாவட்ட ரீதியில் தன்னார்வப் பணியாளராகவும் சில காலம் பணிபுரிந்தார்.

குருக்களை அவர்தம் பணிகளில் தட்டிக்கொடுத்து உற்சாகப்படுத்துகின்றவராக, தேவை ஏற்படுகின்றபோது அவர்களுக்கு உதவி செய்கின்றவராக அவர் விளங்கினார்.

இன்சொல் அன்றி வன்சொல் எதுவும் அவருடைய வாயில் இருந்து வந்ததில்லை. வாழ்க்கையை நேர்மறைக் (Positive) கண்ணோட்டத்தில் பார்த்துப் பழகியவர். திருச்சபைப் பணியாளர்கள் மட்டில் அன்பும் அக்கறையும் பக்தியும் கொண்ட உத்தம கத்தோலிக்கராக இவர் வலம் வந்தார். அவருடைய இழப்பை அவருடைய குடும்பத்திற்கு மட்டுமல்ல,



விடத்தல்தீவுப் பங்கிற்கும் மன்னார் மறைமாவட்டத்திற்கும் ஏற்பட்ட இழப்பாகவே கருதுகின்றோம். அன்னாரின் குடும்பத்தவர்களுக்கு மன்னா தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவர்களின் துயரைப் பகிர்ந்துகொள்கிறது. இந்த நம்பிக்கைக்குரிய நல்ல ஊழியன் விண்ணரசில் வீற்றிருக்கும் வரத்தை இறைவன் அருளுவாராக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளம் பெண்களுக்கு விடியலைக் காட்டும் கணேசபுரம் வைகறை நல்லாயன் இல்லம்

- ஸ்ரீபனா யேசுதாசன் -

போரின் தொடர் வடுக்கள் மத்தியில் வாழ்ந்த எம் இனமானது தம் சொந்த மண்ணைப் பறிகொடுத்துவிட்டு 2009.05.19ம் திகதி அன்று ஏதிலிகளாக இராணுவத்தினரிடம் தஞ்சமடைந்தனர்.

இவர்கள் இடைத்தங்கல் முகாமிலே தற்காலிகமாக தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். உயர் முட்கம்பிகளுக்குள்ளே சிறை வாழ்க்கையை அனுபவித்தனர். இளைய சமுதாயமானது தடுப்பு முகாம் என்ற வட்டத்திற்குள் வாழ்ந்துகொண்டிருந்தது. இந்நிலையிலேதான் அன்புக் கரம் நீட்டி அரவணைத்திட நல்லாயன் அருட்சகோதரிகள் தம் அன்புப் பணியை அங்கு ஆரம்பித்தனர்.

முதலில் வவுனியா போதனா வைத்தியசாலைக்குப் பார்வை இடச்சென்றவேளை அங்கிருந்த வயோதிபர், குழந்தைகள், காயப்பட்டோர், ஊனமுற்றோர் போன்றோருக்கு பல வழிகளில் உதவி செய்து அவர்களுக்கென உடைகளையும், அன்றாட அத்தியாவசியப் பொருட்களையும் வழங்கினார்கள்.

பின்னர் அங்கிருந்த இளம் யுவதிகளுக்கும், விதவைகளுக்கும், கல்வியை இடை நிறுத்தியவர்களுக்கும் என தொழிற்பயிற்சியை வழங்கினார்கள். இதனால் பெருமளவிலானோர் பல நன்மைகளை அடைந்தனர். தொடர்ந்தும் பல இழப்புக்களை சந்தித்து பாதிக்கப்பட்டவர்களுக்கும் எனையோருக்கும் உதவ முன்வந்தனர். அவர்களை சாதாரண வாழ்க்கைக்கு இட்டுச் செல்லும் நோக்குடன் முகாமுக்கு அண்மையிலே ஒரு வாடகை வீட்டினைப் பெற்று அங்கிருந்து அவர்களுக்கென பல்வேறு செயற்திட்டங்களை அருட்சகோதரிகள் முன்னெடுத்தனர்.

இம்மக்கள் பொருளாதார நிலையிலே பல இன்னல்களை எதிர்கொண்டதை அருட்சகோதரிகள் கண்ணுற்று அவர்களுக்கென நிரந்தரமான தொழில்வாய்ப்புக்களை பெற்றுக்கொடுக்க முயற்சிகளை மேற்கொண்டனர். இதற்காக தையல் பயிற்சிகளை ஆரம்பித்தனர்.

சொந்த இடங்களுக்கு செல்ல முடியாமல் வாழ்ந்தவண்ணம் இருந்தவேளையிலே இளம் யுவதிகள் பல நெருக்குதல்களை எதிர்கொண்டனர். இளம் சமுதாயத்தினைப் பாதுகாக்கும் நோக்குடனும் விசேட ஆலோசனைப் படைப்பிரிவினரின் (CID) கண்ணிகைகளிலிருந்து பாதுகாக்கும் நோக்குடனும் அருட்சகோதரிகள் முகாம்களில் இருந்தும், தடுப்பு முகாம்களிலிருந்தும் யுவதிகளைத் தம் பொறுப்பிலேற்று அவர்களுக்கோர் தற்காலிக பாதுகாப்பை ஏற்படுத்தும் நோக்குடன் வவுனியாவிலுள்ள கணேசபுரத்திலே நல்லாயன் இல்லமொன்றினை அமைத்து அவர்களை வழிநடத்தி வந்தனர். அங்கும் பல தொழிற்பயிற்சிகளை வழங்கினர். 18 பேருடன் ஆரம்பிக்கப்பட்ட இவ் இல்லமானது இன்று 300 பேருடன் வளர்ச்சி அடைந்து வந்துள்ளமையை நாம் கண்டுகொள்ளலாம். இந்நிலையிலே முதலிலே தையல் இயந்திரங்களைப் பெற்றுக்கொடுத்து சில தையல் பயிற்சிகளை வழங்கிவந்தார்கள்.

இங்கும் நிரந்தர இல்லம் இல்லாத காரணத்தினால் வாடகைக்குப் பெறப்பட்ட தற்காலிகமான இரு கொட்டில்களில் அருட்சகோதரிகளும், பிள்ளைகளும் வாழ்ந்து வந்தனர். போதியளவு வசதிகளற்ற நிலையிலே இருந்தும் அருட்சகோதரிகளின் விடாமுயற்சியும் அர்ப்பணிப்பும் யுவதிகளுக்கு கிடைக்கவே அவர்கள் தம்மை வளப்படுத்திய வண்ணம் அன்றாட வாழ்க்கையை வாழத் தலைப்பட்டனர். அதுமட்டுமன்றி கொழும்பிலிருந்து தேர்ச்சிமிகு ஆசிரியர்களை வரவழைத்து வேறு பயிற்சிகளையும் வழங்கி வந்தனர். இதனால் இப்பிள்ளைகள் தையலை நன்றாகக் கற்றதன் விளைவாக பலவற்றை தைத்துக்கொடுத்து தம் வாழ்க்கைக்கென வருமானத்தை தேடிக்கொண்டனர்.

தொழிற்பயிற்சிக்காக வந்தவர்களில் சிலர் தாம் இடைநிறுத்திய கல்வியை மீண்டும் தொடர ஆசைப்பட்டதன் விளைவாக அவர்களின் வேண்டுகோளின்படி கல்வியைத் தொடரவும் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தார்கள். இதனால் மாணவர்கள் இவ்வில்லத்திலிருந்து கல்வியைத் தொடர்ந்தார்கள். இவர்களில் G.C.E உயர்தரப் பரீட்சையிலே சிறந்த பெறுபேற்றைப் பெற்று வவுனியா மாவட்டத்திலே 2ம் இடத்தினைப் பெற்று தற்போது பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கற்றுவரும் செல்வி. வித்தியா மற்றும் ஆசிரியர் கலாசாலையில் கற்றுவரும் செல்வி. சர்மி என்பவரும் குறிப்பிடத்தக்கவர்கள். இன்னும் சிலர் சாதாரண கல்வியையும் கற்றுவந்தனர்.

இவ்வாறு வளர்ச்சியடைந்த வண்ணம் இருக்கையிலே பிள்ளைகளின் தொகை அதிகரித்தது. இதனால் நிரந்தரவீட்டினைப் பெறும் நோக்குடன் நல்லாயன் அருட்சகோதரிகளின் மாகாணத்தலைவியினாலும், மாணத்தலைமைக் குழுவினாலும் கணேசபுரத்திலே காணியொன்றினைப்பெற்று 'வைகறை நல்லாயன் இல்லம்' என்னும் பெயருடன் அருட்சகோதரிகளின் பணியானது நடைபெற்று வருகின்றது. இங்கு 300ற்கும் அதிகமான பிள்ளைகள் பயனடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இன்றும் கல்வியும், தொழில்முயற்சியும் இங்கே தொடர்ந்த வண்ணம் இருப்பது யாவரும் அறிந்ததே.

இவ்வாறாக ஆயன் இல்லா மந்தைகளாக வாழ்ந்த இவ் யுவதிகளுக்கு இவ்வில்லமானது விடியலைக் கொடுக்கும் பெண்களின் வைகறையாகத் திகழ்வதைக் காணலாம்.

கலை இலக்கியச் சாளரம்

கவிதைக் களம்

கடவுளின் கருவறை

ஆதிவனத் தொட்டிலிலே ஆடியது அலகையொன்று
அனாதையாய் விடவில்லை
அந்தரித்த மானிடத்தை.

ஊதாரித்தனத்திலே ஊரெல்லாம் உவர்க்கையிலே
உச்சிமோர்ந்து உயிர் கொடுத்தாள் அன்னை
உரிமையான அன்பாலே.

சொந்தங்களும் பந்தங்களும் செத்துப்போகும் வேளையிலே
சொத்தாக உனை எடுத்து சொர்க்கத்தின் வழியானாள்.

அடிப்போர்க்கு மறுகன்னம் எடுப்போர்க்கு உள்ளாடையும்
நடப்போர், கூட வரக்கேட்டால்.....! தனைமறந்த
தியாகமையா – அவள் ஏற்றிவைத்த யாகம்.

காறி உமிழ்வோருக்கு - அவள் முகம்
மன்னனின் எச்சில் எடுக்க ஏந்தும் பாத்திரமானது.
சாட்டைகள் விழுகையிலே அவள் உடல்
உழவன கையில ஏர்மாடானது.

சாதனைகள் என்ன செய்தாய் மனிதனே! – அவள்
வேதனையில் வேகும்போதும்கூட
"தந்தையே இவர்களை மன்னியும்....."
என மன்னிப்பின் மகுடமளித்தாள்.

அன்பு செய்ய மட்டும் தெரிந்துகொண்டவள்
மன்னிக்க மட்டும் பழகிக்கொண்டவள்
இரக்கத்தை மட்டும் சிறக்கச் செய்தவள்
கருத்தாங்கி உனைச் சுமந்துகொண்டவள்.

உலகில் ஒரு தாய் காணாத் தியாகம் - அவள்
உன்னையும் என்னையும் கருத்தாங்கியது.
வார்த்தைகள் இன்றித் தவிக்கின்றேன் - என்
வரிகளிலே அவள் தியாகம் சொல்ல
தாய் என்றால் உயிர் சுமப்பவர் - இவள்
தாய் தந்த தாய் அம்மா
உயிரிலும் மேலான – மறுவில்லா
அன்பை சுமக்குமடா இவள் இதயத்தின் கருவறை.

என் சொல்வேன் தோழனே
கருவறைகள் வெறும் உயிர் சுமக்கையிலே – என்
தாய் கடவுளின் உயிர் சுமந்தாள்

சிலுவையிலே தெரியுதையா – அவள்
இதயம் கொண்ட பிரசவ வேதனை
உயிர்ப்பினிலே தெரியுதையா
சிசு கண்டு வலிமறந்த என்தாயின் புன்னகை
வெறும் கல்லறையது சொல்லுதையா – அவள்
கருவறையின் பரம இரகசியத்தை!

அருட்சகோதரி தாரணி,
அன்பின் சகோதரிகள் இல்லம், செட்டிகுளம்.

போரின் பின்னோக்கல்

கலகலவென சிரித்து மகிழ்ந்த காகக்கூட்டம்
மரண ஒலி எழுப்பிக்கொண்டு வீதியில் விழுகின்றது.
கந்தல் துணியோடு பாட்டி ஒருத்தி
பரிதவிக்க ஓடுகின்றாள்!
"பாட்டி ஏன் இந்த ஓட்டம்?" என பாதியில் வழிமறிக்க –
"ஐயோ! என் பேரன் செல்லடியில் செத்துவிட்டான்"
எனக் கூறி ஓடுகின்றாள்.
தன் வீட்டைவிட்டு வெளியேறிக்கொண்டிருந்த
தன் மனைவியை கணவன் துரத்த
ஐயோ பரிதாபம்! வானில் வட்டமிட்டவன்
போட்ட குண்டில் அக்குடும்பமே தெருவில் விழுந்தது!

செல்லடிச்சத்தம் கிட்டக்கிட்ட நெருங்க
உடுத்திய துணியோடு யாவரும் ஓட்டமெடுக்க
மனைவி, பிள்ளையைக் காணவில்லையென
ஒருவன் பரிதவிக்கின்றான்.
ஐயோ! என் ஆசை மகனைக்
காணவில்லை என ஒரு தாய் தேடித் திரிகின்றாள்.
"ஐயோ என்ர பிள்ளை வீதியில் செத்துவிட்டதே"
என ஒருவர் அழுது குழறுகின்றார்.
இறந்த குழந்தையை தோழில் போட்டபடி
தூரத்தில் ஓடுகின்றான்.
"எத்தனை மணி நேரம்தான் பிணத்தோடு அலைவது?" என
கிடங்கொன்றில் போட்டு குழந்தையை மூடுகின்றான்.
"ஐயோ! என்ர உயிர் போகப் போகுதே" எனப்
பலரும் பல திசையில் ஓடுகின்றனர்.
வந்தவன் போட்ட குண்டில்
பலதிசையிலும் போனவர்கள் படபடவென விழுந்தனர்.

செத்தவன் எல்லாம் உரமாக நிலத்திலே கிடக்க
தப்பியவரை அழைத்துவந்து வைத்தியசாலையிலும்
கம்பிச் சிறைச்சாலையிலும் அடைத்துவிட்டனர்.
வந்த வைத்தியரிடம் ஒருத்தி, "ஐயா எனக்கு
நஞ்சூசியை போட்டுவிடுங்கள்" எனக் கேட்கின்றாள்.
"சாகவா இத்தனை தூரம் ஓடிவந்தாய்?" எனக் கேட்க
"என்ர கணவரை, பிள்ளையை காணவில்லை.
நான் மட்டும் எப்படி வாழ?" என அவள் ஆதங்கப்படுகின்றாள்.
வந்த வைத்தியர் வாய் பொத்தி நிற்கின்றார்.
ஐயோ! என்ர பிள்ளை! என்ர பிள்ளை! எனக் கூறியபடி
பலர் பைத்தியமாக! வைத்தியர் பட்ட வேதனை
கொஞ்ச நஞ்சமா!

வேலிக்கம்பிக்குள் வீடு கட்டி ஒருவர்மேல் ஒருவர்
விழுந்து படுத்துறங்க, குந்தவும் இடமின்றி கூனிக்குறுகிட,
குளிக்க நீரின்றி உண்ண உணவின்றி பரிதவிக்க,
நேரந்தவறிய உணவை உண்டு வாந்தியும் வலியும் ஏற்பட,
ஐயோ! பசிபசி என குழந்தை ஒன்று கீசிக்கதறுகிறது.
தாயின் முலையில் பாலில்லை! உடம்பிலே இரத்தமில்லை!
"ஐயோ என்ர பிள்ளை" என அவள் மாரடித்துப் புலம்புகிறாள்.
கர்ப்பிணித்தாயொன்று மயங்கிவிழுகின்றாள்.
கண்டவர் வைத்தியசாலையில் அனுமதிக்க
"பிறந்த குழந்தை இறந்துவிட்டது" என தாதியர் கூறுகின்றனர்.
"நான் மட்டும் இனி ஏன் வாழ வேண்டும்?" என
அவள் தற்கொலைக்கு முயற்சி செய்கின்றாள்.

"என் சித்தமல்ல உன் சித்தம் நாதா" என
பக்திமான் ஒருவன் பாடிப் புகழ்கிறான்.
பார்த்தவர் அவனைக் கடிந்து கொள்ள
"இந்த வேளையிலும் நீ ஆண்டவனைப் புகழ்கின்றாயா!"
ஆவேசத்தோடு கத்துகிறான் ஒருவன்.
"இப்போ நீ உயிரோடு இருப்பது அவர் செயல்தான்"
என்கிறான் அவன்!
அனைவரும் அமைதியடைகின்றனர்
அங்கே ஆழ்ந்த நிசப்தம்!

அ. ஜஸ்மிஸ் ஷிறோன், ஆவணம், நானாட்டான்.

கொஞ்சம் சிரிங்க

மற்றவர் :- தாய்மார்கள்கிட்ட ஓட்டுக்கேட்க எதுக்கு ராத்திரி பன்னிரெண்டு மணிக்கு மேல வாரீங்க?
வேட்பாளர் :- மற்ற நேரத்தில அவங்க ரி.வியில சீரியல் பாத்துட்டு இருக்காங்களே!

.....

டொக்டர் :- எதுக்கு அரைமணி நேரமா என்னையே பார்த்துகிட்டிருக்கீங்க?
நோயாளி :- உடம்பு சரியில்லைனா உடனடியா டாக்டரை பார்க்கணும்னு சொன்னாங்க. அதுதான் பார்த்துக்கிட்டிருந்தேன்.

.....

ஒருவர் :- முடி வெட்டுவதற்கு எவ்வளவு கட்டணம் வாங்கிறீங்க?
முடி வெட்டுபவர் :- பத்து ரூபாய்
ஒருவர் :- ஷேவ் பண்ணுறதுக்கு
முடி வெட்டுபவர் :- மூன்று ரூபாய்
ஒருவர் :- அப்படி என்றால் என் தலையை நன்றாக ஷேவ் செய்து விடுங்க.

.....

கடைக்காரர் :- இதற்கு முன்னால் உங்க முகத்தை எங்கையோ பார்த்திருக்கிறேனே?
மகாதேவன் :- இருக்கவே முடியாது. கடந்த முப்பது ஆண்டுகளாக இந்த முகம் என் உடம்பில்தான் இருக்கிறது.

.....

ஒருத்தி :- அதிஸ்டம் செய்த கணவன் - மனைவி என்றால் உலகத்தின் முதல் மனிதர்களாக ஆதாமும் ஏவாளும்தான்.
இன்னொருத்தி :- எதனால் அப்படிச் சொல்கிறாய்?
ஒருத்தி :- அவர்களுக்கு மாமியார் இல்லையே

கி.டெலாறோஸ், ஜோசவாஸ் நகர், நோட்டவெளி, மன்னார்

சிறுகதை

எ. பத்தினாதன் வதனா
வாழ்க்கைப்பெற்றான் கண்டல்
அலுவக்கை

முற்றிய கதிர்கள்

அந்திபுரியில் தங்கவேலு என்ற மனிதருக்கு நிறைய நிலபுலன்கள் இருந்தன. தன் ஒரே மகன் பிரபு படித்து உயர்ந்த நிலைக்கு வரவேண்டுமென்று அவர் ஆசைப்பட்டார். எனவே தன் அக்காவின் வீடு நகரத்தில் இருப்பதால் அங்குள்ள புகழ் பெற்ற பாடசாலையில் படிக்க வைத்தார். மகனும் நன்றாகப் படித்தான்.

பிரபு விடுமுறைக்கு வீட்டுக்கு வருவான். தன் பெற்றோர் விவசாயிகளாக இருப்பதால் அவர்களை மதிக்க மாட்டான். தன் மாமாவைப்போல தலைக்கனம் பிடித்தவனாக இருந்தான். தன் பெற்றோர் பெரிய உத்தியோகத்தில் இல்லையே என்க் கவலைப்படுவான். தன்னுடைய நண்பர்களின் பெற்றோர் பெரிய வியாபாரிகளாக, தொழில் அதிபர்களாக இருப்பதால் தன் பெற்றோரை கேவலமாக நினைத்தான்.

இதனால் தங்கவேலு மனம் வருந்தினார். "என் பிள்ளை பிரபுவின் கல்வி எதிர்காலம் நன்றாக இருக்கவேண்டுமென்றுதான் நகரத்தில் படிக்க வைத்தேன். ஆனால் இவன் 'அப்பா' என்று சொல்வதற்கே வெட்கப்படுகிறானே" என்று மிகவும் கவலையடைந்தார்.

கவலையோடே அவர் கடைத்தெருவுக்கு போகவேண்டியிருந்தது. எனவே தன் மனைவியிடம், வயலுக்குப் போய் கதிர்கள் முற்றிவிட்டதா? எப்போது கதிர் கொய்ய வேண்டும்? என்று நம்ம கண்ணுசாமிக்கிட்ட சொல்லி பார்த்திட்டு வரச்சொல்லு" என்றார். "மகனுக்கு சுகமில்லை என்று கண்ணுசாமி மருத்துவமனைக்கு போயிருக்கிறான், மற்ற வேலையாட்களும் வெளியே போயிற்றாங்க நான் போய் பார்த்திட்டு வரட்டுமா?" என்றாள் தங்கவேலுவின் மனைவி முத்துமணி. "வேண்டாம் இந்த வெயிலில நீ எங்க போய் பாத்திட்டு வாறது? நம்ம பிள்ளை பிரபு மோட்டார் வண்டி வச்சிருக்கிறான்தானே. அதில் போய் அவனோட பார்த்திட்டு வா; பிள்ள படிக்கிற பிள்ளதானே. பிரபுவுக்கு விவசாயத்தப் பற்றி ஒன்றும் தெரியாது. அது படிக்கிற பிள்ள. பிரபுவோட போய் நீதான் பார்த்திட்டு வரணும்" என்றார். தனக்கு ஒன்றும் தெரியாதென்று தந்தை கூறியதைக்கேட்ட பிரபுவுக்கு கோபம் கோபமாக வந்தது. "A/L படிக்கும் நான் வகுப்பிலை முதல் மாணவன். என்னிடம் வந்துதான் எல்லாரும் டவுட் கேட்கும் போது, கதிர்கள் முற்றி அறுவடைக்கு தயாராகி விட்டதா என்பதை என்னால் கண்டு பிடிக்க முடியாதா?" என கூச்சலிட்டு கத்தினான். "அம்மா நீங்க இங்கேயே இருங்க. நான் போய் பார்த்துவிட்டு வாறன்" என்றான் மகன் பிரபு. "மகனே, உனக்கு எங்கப்பா இந்த வேலையெல்லாம் தெரியப்போகுது?" என்றாள் அம்மா. "எனக்குத் தெரியாதா? எங்கட ஸ்கூல்ல படிப்பு மற்றும் அனைத்து போட்டிகளிலும் நான்தான் முதல் மாணவன். என்னட திறமையைப் பற்றி வானுமதி ரீச்சரிடம் கேட்டுப்பாருங்க" என்றவன் தன்னுடைய மோட்டார் வண்டியில் சிட்டாகப் பறந்தான்.

தன்னுடைய அப்பாவின் வயல்களைப் பார்த்து விட்டு இரவில் வீடு திரும்பினான். வீட்டிற்கு வந்தவன் அப்பாவிடம், "அப்பா! பாதி நெற்கதிர்கள் வளர்ச்சி இல்லாமல் தரையில் சாய்ந்து கிடக்கின்றன. சில பயிர்கள் நன்கு வளர்ந்து நிற்கின்றன. அவற்றை நாளையே அறுவடை செய்துவிட்டால் நல்லது. இல்லையென்றால் அந்த கதிர்களும் நமக்கு ரொம்ப நஷ்டமாகி விடும் என்றான்.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

மன்னா விளம்பரப் பலகை

"நேற்று என்பது அனுபவம். இன்று என்பது நிகழ்வு. நாளை என்பது நம்பிக்கை"
எஸ். நிரோஜிகன், மடுரோட் கட்டையடம்பன், மடுவீதி.

"நீ சுதந்திரத்தை மற்றவர்களுக்குக் கொடுத்தாலொழிய, உன் சுதந்திரத்தை வைத்துக்கொள்ள முடியாது"
(ஆலன் ஓயிட்)
"சந்தோசம் என்பது உன்னால் கொடுக்க முடிந்ததைப் பொறுத்தது, வாங்குவதைப் பொறுத்தது அல்ல"
(மகாத்மா காந்தி)
- ஜீ. ஸ்ரனிஸ், குருமண்காடு, வவுனியா.

வாழ்வில் நம்பிக்கை இல்லாவிட்டால் நீயோ சூரியன் இருந்தும் விடியாத கிழக்குத்தான். எண்ணெய் இருந்தும் எரியாத விளக்குத்தான். நம்பிக்கையை கனவாக்காதே. கனவை நம்பிக்கையாக்கு நாளைய உலகம் உன்கையில்.
வி. சுதர்ஷினி, தம்பனைச்சந்தி, நேரியகுளம்.

"எனக்கென்று உள்ளதை எவரும் தடுக்க முடியாது. எனக்கென்று இல்லாததை எவரும் கொடுக்க முடியாது"
"தோல்வியைக் கண்டு அஞ்சுபவனிடமிருந்து வெற்றி விலகுகிறது" *- ஜெ. மரியசுகிர்தா, இலுப்பைக்கடவை*

"நல்லவனாக பிறப்பது சந்தர்ப்பத்தினால்
நல்லவனாக வாழ்வது முயற்சியினால்"
செ. நிதர்சனா கோமஸ், கற்கிடந்தகுளம், முருங்கன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்மீன்களை நோக்கி .....

தொடர் கட்டுரை

அத்தியாயம் – 18

– ஆங்கில மூலம் –

அமரர். அருட்கலாநிதி பப்ரிஸ் குரூஸ் FSC

தமிழாக்கம்: அ. யோ. மரியநாயகம் சோசை J.P வங்காலை.

பாதஅணிகள் செய்பவனின் மகன்.

சுரேஷ் தனது தந்தையைப்பற்றி பெருமைப்பட்டுக்கொள்வான். அவர் ஏழையாக இருந்தாலும் நகரத்திலே சிறந்த பாத அணி செய்யக்கூடியவர். அவரது சிறிய கடை திறந்ததும் வாடிக்கையாளர்கள் குழுமிவிடுவார்கள். இந்தப் பாத அணிகள் செய்பவர் சொல்வதைச்செய்யும் ஒரு மனிதன். தேவைகள் வாக்குறுதிப்படி நிறைவேற்றப்பட்டு வந்தன. அவருடைய வேலை திறமையுடன்கூடிய நேர்த்தியானதும், துரிதமானதும் ஆகும். அவரது சொற்ப வருவாய் மூலம் தனது தேவையை முடித்துக்கொள்வார்.

ஒருநாள் அவர் சில வேலை விடயமாக பக்கத்து நகரத்திற்குச் சென்றார். தான் அந்திநேரம் வந்துவிடுவதாகக் கூறி மகனை கடையைக் கவனிக்கும்படி கூறியிருந்தார். சுரேஷ் பிரியமும், அன்பும், பொறுப்பும் மிக்கவன். அத்துடன் நேர்மையில் குறிப்பிடத்தக்கவன். அவன் மக்களுக்கு செய்யும் சேவைக்காகவும், மரியாதைக்காகவும் நகரில் உள்ள ஒவ்வொருவரும் அவனை விரும்பினர். அந்திநேரம், வாடிக்கையாளர்கள் குறைந்த நேரத்தில் ஒரு செல்வந்தர் தனது பாதணிகளைப் பழுது பார்க்க அவனிடம் வந்தார். சுரேஸ் கூடிய கவனம் எடுத்து அந்த வேலைகளை நேர்த்தியாக பூர்த்திசெய்தான். வேலை முடிந்ததும் தனது வேலைக்குக் கூலியாக ரூபா 25/= தரும்படி கேட்டான். அவர் தனது பணப்பையைத் திறந்து ஒரு 500/= நோட்டைக் கொடுத்தார். சுரேசிடம் மாற்றிய காசு இருக்கவில்லை. தான் போய் அந்தப்பணத்தை மாற்றி வருவதாகவும் அந்தச் செல்வந்தரை சில நிமிடங்கள் தாமதிக்கும்படியும் மரியாதையாகக் கூறினான். அவன் அந்த 500/= நோட்டை மாற்ற பாதையின் குறுக்காக ஓடிச்சென்றான். அந்தச் செல்வந்தர் காத்து நின்றார். ஆனால், சுரேஷ் திரும்பவில்லை, சுரேஷ் தன்னை ஏமாற்றிவிட்டதாக அந்தச் செல்வந்தர் எண்ணினார். ஆனால் அது எப்படி? இந்தக் கடை முழுவதும் எனது பொறுப்பில் இருக்கிறதே. அவரது மனதில் பல சிந்தனைகளும், எண்ணங்களும் தோன்றின. அந்த வேளையில் அவனுடைய தந்தை திரும்பி வந்துவிட்டார். அந்தச் செல்வந்தன் நடந்தவற்றைக் கூறி தனது பாக்கிப் பணத்தைக் கேட்டார். அந்தத் தந்தை செல்வந்தரை சற்றுநேரம் தாமதிக்குமாறும், சுரேசின் நாணயத்தையும் நேர்மையையும் எடுத்துக் கூறினார்.

அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்பொழுது சுரேசின் நண்பனாகிய பிரகாஷ் மூச்சு வாங்க, வாங்க ஓடி வந்து ரூபா 475/= அடங்கிய பாக்கிப் பணத்தை அந்தச் செல்வந்தரிடம் நீட்டி, "சுரேஷ் பணத்தை மாற்றிக்கொண்டு ஓடி வருகையில் ஒரு வாகனத்தில் அடிபட்டு வைத்தியசாலையில் விபத்து வாட்டில் அனுமதிக்கப்பட்டுள்ளதையும், தன்னை அருகில் அழைத்து இந்தப் பணத்தை கடையில் நிற்கும் உங்களிடம் ஒப்படைக்குமாறும் என்னிடம் தந்து அனுப்பினான்" என்று கூறினான். அந்த செல்வந்தர் ஒரு நிமிடங்கூட தாமதிக்கவில்லை. பிரகாசை தன்னுடைய காரில் ஏறும்படி கூறிவிட்டு வைத்தியசாலைக்கு விரைந்தார். அந்தச் செல்வந்தருக்கு வைத்தியசாலையில் பிரத்தியேக செல்வாக்கு இருந்தது. அவர்கள் அங்கு செல்லும்பொழுது தாதிமார் மிக கடுமையாக சுரேசைக் கவனிப்பதில் இருந்தனர். வைத்தியசாலைப் பொறுப்பாளரிடம் எவ்வளவு செலவு வந்தாலும் தான் பொறுப்பேற்பதாகவும், சுரேசுக்கு வேண்டிய எல்லா வைத்திய சிகிச்சையையும் அளிக்குமாறும் பணித்தார். சுரேசின் காலுக்கு அவசர அறுவைச்சிகிச்சை நடைபெற்றது. அது கடுமையான அறுவைச்சிகிச்சையாதலால் சுரேசுக்கு நினைவு திரும்ப சற்று தாமதமாகியது. மறுநாள் சுரேஷ் கண் விழிக்கையில் அந்தச் செல்வந்தர் தன் அருகில் இருப்பதைக்கண்டு, "உங்கள் பாக்கிப் பணத்தை தாமதப்படுத்தியதற்காக நான் மிகவும் வருந்துகின்றேன் ஐயா, நான் அந்தப் பாக்கிப்பணத்தை எடுத்துக்கொண்டு வரும்பொழுது..." அந்த செல்வந்தர் அவனைத் தடுத்து, "அது எல்லாம் சரி சுரேஸ், நீ ஒரு நேர்மையான பையன். கடவுள் உன்மீது இரக்கம் வைத்துள்ளார். காரணம் நீ ஓர் அபூர்வமான நல்ல பையன். உன்னைப்பற்றி நிறைய அறிந்துகொண்டேன். நீ நன்கு குணமடைந்ததும் எனது வேலைத்தளத்தில் என்னை வந்து சந்தி. ஏற்கனவே உனக்கென்று ஒரு வேலையை நான் உண்டாக்கியிருக்கிறேன". என்றார்.

அதிர்வுகள்..... 10ஆம் பக்கத் தொடர்ச்சி

இதனால் சர்வதேச நெருக்குவாரங்களைச் சரி செய்வதற்கும், தற்போது இலங்கையின் ஆளும் அரசு மட்டில் நல்ல அபிப்பிராயத்தை ஏற்படுத்தவும் மீண்டும் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ரை அண்மையில் நம் ஜனாதிபதி சந்தித்திருக்கிறார்.

இச்சந்திப்பின் ஒரு பகுதியாக ஜனாதிபதியுடனும், அவரின் பரிவாரங்களுடனும் கருதினால் மல்கம் றஞ்சித் அவர்கள் வத்திக்கானில் 'கேக்'வெட்டிக் கொண்டாடி இருக்கிறார் என்பதை கலர் படங்களுடன் 17.06.2012 அன்று 'மெசஞ்சர்' பத்திரிகை பிரசுரித்திருக்கிறது! ஐயகோ இறைவா! அடக்குமுறையாளர்களோடும் ஆக்கிரமிப்பாளர்களோடும் நடுவர்கள் கூட்டுச்சேர்ந்திருக்கிறார்கள். இறைவா, நீயாவது நீதியின் பக்கம் - உண்மையின் பக்கம் நிற்பாய் என நம்புகிறோம்.

இடைவிடாத வேண்டுதல்!

அப்படியாயின், இரத்தம் தோய்ந்த பூமியில் நின்றுகொண்டு, வீழ்ந்து கிடக்கிற - அநாதரவாய் ஆக்கப்பட்டு, அல்லல்பட்டு, அலைக்கழிக்கப்படுகின்ற ஏழை மக்கள் சார்பாக பெரும் நம்பிக்கையின் சின்னங்களாய் திகழுகின்ற வடகிழக்கு ஆயர்கள் ஏன் இணைந்து நின்று எம் மக்களின் இருப்புக்காக குரல் கொடுக்கக்கூடாது? காரணம் இவர்கள் பேச்சு ஒன்றுதான் இப்போது கேட்கப்படக்கூடிய நிலையிலும், சர்வதேச ரீதியில் ஏதாவது சாதிக்கக்கூடிய நிலையிலும் இருக்கிறது. நிலைகுலைந்து, சீரழிந்து, பலவீனமுற்று, காயப்பட்டு, நோயுற்று, வழிதவறி, பரிதவித்து நிற்கும் ஆடுகளுக்காக, மறைக்கல்வி ஆண்டில் ஒன்றுசேர்ந்து ஒரே மடலில் கையொப்பமிட்டு அறிவித்ததுபோல குறைந்த பட்சம் எம் இருப்புக்கான ஏக்கத்தையேனும் நிலைநிறுத்தலாம்தானே என்பது சிதறுண்டு வாழும் ஆடுகளின் இடைவிடாத வேண்டுதல்; ஆண்டவனிடத்திலும் ஆயர்களிடத்திலும்!

நடுநிலைமை என்று நளுவக்கூடாது!

நீதிபதியாக நியமிக்கப்பட்டார் முல்லா நசுருதீன். நீதிமன்ற செயற்பாடுகளை அறிந்துகொள்வதற்கு முன்பே, வழக்கு ஒன்று வந்துவிட்டது. இரண்டு பேர் தமது வாதங்களை காரசாரமாக முன்வைத்தனர். முதலாமவர் சொன்ன வாதத்தைக் கேட்ட முல்லா, "நீ கூறுவது சரிதான்" என்றார். பின்னர் பிரதிவாதியான இரண்டாம் ஆள் சொன்னதைக் கேட்ட முல்லா, "நீ கூறுவது சரிதான்" எனப் பதிலளித்தார். இருவரிடமும் இவ்வாறு முல்லா கூறியதைக் கேட்ட நீதிமன்ற உதவியாளர், "முல்லா, இவர்கள் இருவரும் கூறியது, சரியாக இருக்க முடியாதே!" எனக் சொன்னதற்கு, முல்லா, "நீ கூறுவதும் சரிதான்" என்றாராம். 'நடுநிலைமை வகிக்க வேண்டும்!,' அல்லது 'நாங்கள் பொதுவானவர்கள்,' என்று சொல்லி மதில்மேல் பூனையாய் இருந்துவிட முடியாது. மக்களின் அபிலாசைகளை – மக்கள் எதிர்கொள்ளும் அன்றாட பிரச்சினைகளை - உண்மை, யதார்த்த நிலைகளை எடுத்துச் சொல்லவேண்டிய நேரங்களில் மௌனிக்க முடியாது. தகுந்த சந்தர்ப்பங்களைத் தவறவிடாமல் பயன்படுத்தி, இவ்விடயங்களை தொடர்ந்து வெளிப்படுத்திக்கொண்டே இருக்க வேண்டியது; பொறுப்புவாய்ந்தவர்களின் தலையாகிய அறக்கடனாகும்.

தொடர் செயற்பாடுகள் மிகமிக அவசியம்

வெளிநாடுகளில் இருந்து வருகின்ற இராஜதந்திரிகள் செய்கின்ற சந்திப்புக்களின்போது மேற்சொன்ன விடயங்களைக் கூறிவிட்டால் மட்டும் போதாது. அதனோடு நம் கடமை முடிந்து போவதில்லை. நமது மண்ணின் மக்களின் இருப்புக்கான அரசியல் தீர்வு, சுபிட்சமான - சுதந்திரமான வாழ்வு பற்றி உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் தொடர்ந்து நினைவூட்டல்களைச் செய்யவேண்டி இருக்கிறது. இல்லை என்றால், இன்னும் கொஞ்ச நாட்களில் நம்மை மேற்கத்தேயமும் மறந்துவிடுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. புலம்பெயர்ந்த நம்மவர்களோடு அர்ப்பணிப்புமிக்க ஒருசிலர் இப்பணியை மிகவும் சிறப்பாகச் செய்து வருகிறார்கள். எனவே இச்செயற்பாடு ஒரு தொடர் செயற்பாடு என்பதை நாம் நன்கு புரிந்துகொள்ள வேண்டும். இதைத் தொடர்ந்து செய்வோமா? இதைத் தொடர்ந்து செய்வார்களா? (தொடர்ந்து அ...தி....ரு.....ம்.....)

மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, MANNA
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

உங்களுக்குத் தெரியுமா?

மறையறிவுப் போட்டி– 108

தொகுப்பு : திரு ச. மாட்டின் டயஸ்

சீயோன் மலைத்தொடரும் சீனாய் மலையும் கடவுளின் வதிவிடங்களாகவும் அவர் அங்கிருந்து ஜெருசலேம் தேவாலயத்திற்கு எழுந்தருள வேண்டும் என்ற கோரிக்கைகளும் இறைவனிடம் திருப்பாடல்களில் சமர்ப்பிக்கப்படுவதை நாம் காண்கின்றோம்.

சீனாய் மலையில் இறைவன் மோயீசனோடு பேசி பத்துக் கட்டளைகளைக் கொடுத்த வரலாறு வேதாகமத்தில் உண்டு. 40 வருட நீண்ட பயணத்தில் கடவுள் இஸ்ராயேலரை வழிநடத்திய வரலாறு பரம்பரை பரம்பரையாக இஸ்ராயேலருக்கு வழங்கப்பட்ட இனிய நினைவுகளாக இருந்திருக்கின்றன.

மக்கள் சாதாரணமாகச் செல்லாத - செல்லமுடியாத இடங்களாக மலையுச்சிகள் இருந்தன. கடவுளை உருவமுள்ள சடப்பொருளாகவே அவர்கள் கண்டனர். ஆகவே கடவுள் இருப்பதற்கு ஒரு இடம் தேவை எனக்கருதியதால் - உயரத்தில் உள்ள மலையுச்சிகளை கடவுள் வாழும் இடங்களாக எண்ணிப் பார்த்தனர்.

கிறீஸ்துவின் காலத்தில் அவர் தன் தந்தையை விழிக்கும்போது வானகத் தந்தையே என்று விழித்தார். அப்போஸ்தலர்களுக்கு எப்படிச் செபிக்க வேண்டும் என்று கற்றுக் கொடுத்தபோது விண்ணகத்திலிருக்கின்ற எங்கள் தந்தையே - பரலோகத்திலிருக்கின்ற எங்கள் பிதாவே என்று கற்றுத் தந்தார்.

ஆக கடவுளின் இருப்பிடம் மலையுச்சிகளிலிருந்து பரலோகமாக மாறிவிட்டது.

இனி எமது வினாக்களுக்கு வருவோம். வினாக்கள் 72ம் திருப்பாடலில் இருந்து 78ஆம் திருப்பாடல் வரையுள்ள பகுதிகளிலிருந்து தொகுக்கப்படுகின்றன.

1. 72ம் திருப்பாடல் ஏனைய திருப்பாடல்களை பெரிதும் மாறுபட்டுள்ளது. ஒரு மன்னனின் நல்லாட்சிக்காக இறைவனை வேண்டும் மன்றாட்டுக்களாக உள்ளன. அந்த மன்னன் யார்?
2. இந்த மன்றாட்டுக்களை இறைவனிடம் சமர்ப்பிப்பவர் யார்?
3. விழித்தெழுவோரின் கனவுபோல் அழிந்துபோவோர் யார்?
4. திருப்பாடல் 74 எதற்காக இறைவனிடம் மன்றாடும் பாடலாக அமைந்துள்ளது.
5. கிழக்கிலிருந்தோ மேற்கிலிருந்தோ பாலை வெளிகளிலிருந்தோ மலைகளிலிருந்தோ ஏதும் வராது என்றால் தீர்ப்பு எங்கிருந்து வரும்?
6. ஆண்டவரின் மாட்சி எதைவிட உயர்ந்தது?
7. என் துன்ப நாளில் என் தலைவரை நாடி நான் செய்த நான்கு கருமங்களும் என்ன?
8. கடலுக்குள் இறைவன் தமக்கு வழி அமைத்தார். வெள்ளத்தின் தமக்குப் பாதை ஏற்படுத்தினார். ஆயினும் எவருக்கும் புலப்படாதது எது?
9. வில் வீரரான எப்ராயீம் மக்கள் போரில் புறங்காட்டி ஓட வேண்டி ஏற்பட்டதற்கான 3 காரணங்கள் எவை?
10. பாலைநிலத்தில் கடவுள் இஸ்ராயேலரை எவ்வாறு வழிநடாத்தினார்.

மாணவர் மறையறிவுப் பகுதி இல. 106 இற்கான கேள்விகளுக்கு 20 பேர் விடையளித்திருந்தனர். இவர்களுள் பரிசுக்குரியவராகத் தெரிவுசெய்யப்பட்ட அதிஸ்ரசாலி

கென்றீசன் சுகந்தினி,
பொன்தீவுகண்டல், அளவக்கை

பாராட்டுக்குரியவர்களாக தெரிவுசெய்யப்படும் 10 அதிஸ்ர சாலிகள்

1. அருட்சகோதரி. வேஜினியா, மாத்தளை
2. மி. யூஜிற்றா, இசைமாலைத்தாழ்வு, முருங்கன்.
3. மா. ஜெபர்சன், வட்டுப்பித்தான் மடு, உயிலங்குளம்.
4. வி. ஜீன் விகாட், 5ம் வட்டாரம், விடத்தல்தீவு.
5. யோ. மேரி றொசானி, செ.செபஸ்.கோவில்.ஒழு, மன்னார்.
6. பி. டனிஸ்ரா, தோட்டவெளி, தாராபுரம்.
7. எம். சாலினி, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
8. அ. ஆன் ஜெறோமி குரூஸ், தாழ்வுபாடு, மன்னார்.
9. வி. ஆன் சௌமியா, 5ம் வட்டாரம், விடத்தல்தீவு.
10. என்.எச். ஜிம்சன் குலாஸ், 9ம் வட்டாரம், வங்காலை.

போட்டி 106 இற்கான சரியான விடைகள்

1. கடவுளின் இல்லத்தில் பச்சை ஒலிவமரக் கன்றுபோல் இருக்கின்றேன். (52:28)
2. இறை மக்களை ஒடுக்கியோரின் எலும்புகளை (53:5)
3. புறாவுக்கு உள்ளது போன்று இறகுகளை எனக்கு அளிப்பவர் யார்? என்று கேட்கின்றார். (55:6)
4. நேர்மையாளரை (55:22)
5. தாவீதரசனின் கண்ணீரை (56:8)
6. கடவுளின் வாக்குப் பிறழாமை (57:10)
7. கருவிலிருந்தே நெறிதவறிச் செல்கின்றனர். பிறப்பிலிருந்தே பொய்பேசித் திரிகின்றனர். (58:3)
8. தாவீதரசன் வீட்டருகே காத்திருந்து அவரைக் கொல்வதற்கென்று சவுல் ஆட்களை அனுப்பியபோது (59)
9. கொடி ஒன்றை ஏற்றி வைத்தார் (60:4)
10. இறைவனின் இறக்கைகளின் பாதுகாப்பில் (61:4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.121

நீதித்தலைவர்கள் அதிகாரம் 1 முதல் 21 முடிய

உங்கள் விடைகளை செப்ரம்பர் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். (பதிப்பாசிரியர்)

04		19		02			26		
35	✱			✱	12			✱	18
	31	27	05			✱	32		
20					17		36	08	✱
	✱			✱		01			
28	22			07	13		16	✱	
		03	✱			✱			09
	06			29	34	21	10	25	
					✱		15	✱	
23	✱	11	14		30			24	33

(___ என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறைவார்த்தையின் இடைச்சொற்கள் என்பதை கவனத்தில் கொள்ளவும்)

இடமிருந்து வலம்

2. அவர் ..... மனிதர்
5. ஆனால், ... நீ கருவுற்று ஒரு மகனைப் பெற்றெடுப்பாய்.
6. ..... பெரித்தைத் தங்கள் தெய்வமாக வைத்துக்கொண்டனர்.
7. இப்பொழுது புறப்பட்டுச் சென்று அவனோடு ..... என்றான்.
10. எருபாகாலின் மகன் யோத்தாமின் ..... அவர்கள் மீது விழுந்தது.
11. இஸ்ரயேல் மக்கள் ஆண்டவரிடம், "நாங்கள் ..... செய்தோம்.
12. பென்யமின் புதல்வருக்குப் ..... கொடுப்பவன் ___ கூறியுள்ளோம்.
17. ..... மன்னனிடமும் அனுப்பினர்.
20. ..... நமக்கிடையே சாட்சியாக இருப்பார்" என்றனர்.
21. அவர்கள்___முற்றுகையிட்டுக் ..... வரையில் ___ அழித்து ___ வந்தனர்.
22. நாங்கள் உன்னைக் ..... மாட்டோம்" என்றனர்.
26. அவள் ..... கதவு நிலையின்மீது இறந்தன.
30. அவள் அவளுடைய ஒரே .....
32. சவரக் ..... அவன் தலைமீது படக்கூடாது.

வலமிருந்து இடம்

6. அவர் தம்___முளையோடு ..... நூலைப் பிடுங்கி எறிந்தார்.
9. நான் உன்னோடு இருப்பதால் நீ ..... ஒரு___வெல்லாய் என்றார்.
15. ஆனால் பென்யமின் மக்கள் தங்களுக்குத் ..... வரப்போகிறது என்பதை உணரவில்லை.
17. மிதியானியர் பாளையம்___வடக்கே ..... மலை___இருந்தது.
19. ..... உங்களை அவர்கள் கையிலிருந்து விடுவித்தேன்.
24. கிதியோனுக்காக! ஒரு - .....
27. ஆண்டவர், "முதலில் ..... செல்லட்டும்" என்றார்.
31. அவர் ஒரு கழுதையின் பச்சைத் ..... எலும்பைக் கண்டு___கொன்றார்.
34. நகரின் அதிகாரி ..... எபேதின்___சினமுற்றான்.

மேலிருந்து கீழ்

1. அப்பொழுது, எஞ்சிய உயர்குடியினர்..... நடைபோட்டனர்.
3. எபேதின் மகன் .....
4. அவர்மீது ஆண்டவரின் ..... இருந்தது.
5. ஐயோ ..... என் தலைவராகிய ஆண்டவர்
6. பாதையில் பயணம் செய்வோரே ..... மகிழுங்கள்.
7. இம்மக்கள் அனைவரும் கானானின் ..... முறையை அறிந்திருக்கவில்லை.
8. இந்நகரின் முன்னாள் பெயர் ..... என்பதாகும்.
16. ஒட்டகங்களின் கழுத்தில் இருந்த இளம்பிறை ..... களை எடுத்துக்கொண்டார்.
18. அவர் எக்காளம் ..... அபியேசர்___வருமாறு அழைத்தார்.
19. ஆண்டவர் கிதியோனிடம் ..... போன்று___தனியாக நிறுத்து.
20. கீசோன் ..... அவர்களை அழைத்துச் சென்றது.
28. இந்த முறை மட்டும் என்னை ..... கூரும்.
29. நீ போக அஞ்சினால் முதலில் ..... என்ற___செல்.
35. மூன்று நாளாகியும்___கதைக்கும் ..... காண முடியவில்லை.

கீழிருந்து மேல்

3. அப்பொழுது___அரைக்கும் ..... அபிமெலக்கின்___பிளந்தாள்.
5. அம்மனிதர் ..... தங்க விரும்பவில்லை.
6. ஓரேபை ஓரேபாவில் உள்ள ..... மேல் கொன்றனர்.
9. அவள் உயர்தரக் கிண்ணத்தில் ..... கொண்டு வந்தாள்.
11. ..... வைக்கும் தோற்பையைத் ..... கொடுத்தார்.
13. ஏனையோர்___திரும்பி ..... பாறைக்கு ஓடி வந்தனர்.
14. நீ செல்லும் ..... உமக்குப் பெருமை தராது .
16. உம்மீது ..... கூர்வோர்___வாழட்டும்.
23. நாங்கள் அவனுடன் ..... கொள்ள வேண்டும்" என்றார்.
25. அவர் கம்பளியை முறுக்கிப் பிழிய ..... நீர் ஒரு கிண்ணம் முழுவதையும் நிரப்பியது.
33. இஸ்ரயேலுக்கு எதிராக ஆண்டவரின் ..... மூண்டது.
34. ஆயினும்___தலைவர்களுக்குச் ..... கொடுக்கவில்லை.
36. இஸ்ரயேலின் கடவுளாகிய ஆண்டவரின் ..... பாடுவேன்.

விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 119ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:

முதலாம் பரிசு:
ஜே. ருக்ஷிக்கா,
பாலைக்குளி, நானாட்டான்.

இரண்டாம் பரிசு:
ப. நிலாளன்,
இத்திக்கண்டல், அடம்பன்.

மூன்றாம் பரிசு:
எவ். கில்மன்,
மணற்குளம், உயிலங்குளம்.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 57 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 55 பேர்.

விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 119ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

1. நே. மெரினா, சிறுக்கண்டல், முருங்கன்.
2. அருட்சகோதரி மேரி பற்றீசியா, ஆலயவீதி, தோட்டவெளி.
3. எஸ். பெனடிற் தயாளன், இலுப்பைக்குளம், நேரியகுளம்.
4. ச. ஆன் அருள்மொழி குரூஸ், எமில்நகர், மன்னார்.
5. நே. றிச்சட், சிறுக்கண்டல், முருங்கன்.
6. ரொ. ஸ்ரெலா, இல. 50, வீரபுரம், நேரியகுளம்.
7. என். சி. ஜெகஜீவன் ரோச், பள்ளிமுனை, மன்னார்.
8. ஞா. மரிய ஜெனிஸ்ரின், ஜோசப்வாஸ் நகர், தோட்டவெளி.
9. நே. மெரினா, சிறுக்கண்டல், முருங்கன்.
10. பா.பானுஷா, டொமினிக்கன் கன்னியர் இல்லம், துள்ளுக்குடியிருப்பு
11. எஸ். பிரான்சிஸ், பீரிஸ், முத்தரிப்புத்துறை.
12. ப. நிலக்சினி, இத்திக்கண்டல், அடம்பன்.
13. சி. மில்றோய் பீரிஸ், முத்தரிப்புத்துறை.
14. எம். செபமாலை, வீரபுரம், நேரியகுளம்.
15. சிபோள் மரிய காணிக்கை பீரிஸ், முத்தரிப்புத்துறை.
16. ம. வினுசா, ஜோசப்வாஸ் நகர், தோட்டவெளி.
17. சி. நோயல் கிறிஸ்ரி றோச், மாவட்ட நீதிமன்றம், மன்னார்.
18. நே. அனோஜா, சிறுக்கண்டல், முருங்கன்.
19. பி. நிஜேளினி, ஜோசப்வாஸ் நகர், தோட்டவெளி.
20. தே. லக்ஷனா, சிறுக்கண்டல், முருங்கன்.
21. ப. கனிஸ்ரலா, வேதசாட்சிகள் கோவிலடி, தோட்டவெளி.
22. அகுஸ்தீன் இசைக்கியேல், ஜோசப்வாஸ் நகர், தோட்டவெளி.
23. ப. நிசாந்தினி, இத்திக்கண்டல், அடம்பன்.
24. தே. ஆன் ஜீவனா, சிறுக்கண்டல், முருங்கன்.
25. எ. ஜெனி டானியல், யோசப்வாஸ் நகர், தோட்டவெளி.
26. எஸ். எம். சுபாஜினி, ஜோசப்வாஸ் நகர், தோட்டவெளி.
27. திருமதி. தாமோதரம்பிள்ளை, தபால் கந்தோர் வீதி, மன்னார்.
28. எஸ். நினோளா குரூஸ், தியோகு வீதி, தாழ்வுபாடு.
29. எ. டினுசா சாளினி, யோசப்வாஸ் நகர், தோட்டவெளி.
30. ஏ. மாகிறட், தபால்கந்தோர் வீதி, மன்னார்.
31. எஸ். நிசாந்தினி கூஞ்ஞு, 8ம் வட்டாரம், குழந்.வீதி, மன்னார்.
32. குணமணி சேவியர், பெரியகடை, மன்னார்.
33. கமலா கிறிஸ்தோப்பர், மடுமாதா வீதி, சின்னக்கடை, மன்னார்.
34. யே. கிறிஸ்தம்மா, இத்திக்கண்டல், அடம்பன்.
35. எஸ். மெறின் சோசை, தியோகு வீதி, தாழ்வுபாடு.
36. தேவிகா பத்மராஜா, மடுமாதா வீதி, பெற்றா, மன்னார்.
37. ம. றீசாராசமலர் குரூஸ், அரிப்பு, சிலாவத்துறை.
38. வி. பியூளினி, ஜோசப்வாஸ் நகர், தோட்டவெளி.
39. அ. ஆன் ஜெறோமி குரூஸ், தாழ்வுபாடு, மன்னார்.
40. மா. ஜெபர்சன், வட்டுப்பித்தான்மடு, உயிலங்குளம்.
41. மத்தியூஸ் குரூஸ், அரிப்பு, சிலாவத்துறை.
42. டி. சஞ்சிகா, பனங்கட்டிக்கொட்டு, மன்னார்.
43. பி. டிறோண், பனக்கட்டிக்கொட்டு, மன்னார்.
44. இ. டிறோண், குழந்தையோசுபுரம், மன்னார்.
45. டி. டிலைக்ஷி, பனக்கட்டிக்கொட்டு மேற்கு, மன்னார்.
46. ரி. திபெக்ஷன், மூர்வீதி, மன்னார்.
47. ரி. கீர்த்தனா, மூர்வீதி, மன்னார்.
48. ஆர். றொயிஸ்ரன், பெற்றா, மன்னார்.
49. பி. பதுஜா, சாந்திபுரம், மன்னார்.
50. அ. அஜித்தா, சின்னக்கடை, மன்னார்.

இல.119 இற்கான சரியான விடைகள்

சு[1]	ம[21]	ப்	ப	வ[5]	ர்	✱	பு[12]	ய	ம்
வ	க	✱	டி	ல	கா[16]	ல்	க	ள்	க
ர்	ன்	✱	கூ[7]	க்	ல்	ம்	ழை	ரு	ல
க[10]	ன	ல்	யி	கை[2]	ம	வ	✱	அ[9]	க[14]
ள்	✱	தி	✱	க்	னை	பா[25]	லை	ர	கு[6]
சு	ரி	ப[23]	ஆ[17]	ழ	கி	நெ[15]	இ[27]	தீ[29]	✱
பூ[20]	✱	ட்	வீ[8]	வ[26]	ரு	க[19]	ட	வு	ள்
வே	பா[18]	ட	ல்	பு[22]	உ[28]	த	சூ[24]	றை	க்
டு	✱	இ[13]	றை	வ	ன்	த்	✱	நி[3]	லா
ந[4]	ம்	பி	க்	கை	னை	செ[11]	வி[22]	லை	✱

விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.120ற்கான முடிவுகளை 2012ம் ஆண்டு செப்ரம்பர் மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.

முற்றிய கதிர்கள்.....

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

மகனது அறியாமையை எண்ணிப் புன்சிரிப்பு சிரித்தார் அப்பா. "பிரபு, தரையில் சாய்ந்து கிடக்கும் நெற்பயிர்கள்தான் முற்றிய கதிர்கள். நிமிர்ந்து நிற்கும் பயிர்கள்தான் உண்மையிலேயே செழித்து வளராதவை. இவற்றை நன்கு வளர்த்து பயிர்களோடு அறுவடை செய்தால் இவற்றிலிருந்து ஒரு நெல் மணிகூடத் தேறாது. நிமிர்ந்த பயிர்களும் எப்போது முற்றி சாய்ந்து தரையில் கிடக்கிறதோ அன்றுதான் அறுடை செய்ய வேண்டும்" என்றார் அப்பா.

பிரபுவோ அவமானத்தால் தலை குறுகிப்போனான். தனக்கு எல்லாமே தெரியும், தெரியாதது ஒன்றுமே இல்லை. கிராமத்து மனிதரான அப்பாவுக்கு என்ன தெரியும் என்று நினைத்து கர்வப்பட்டவன் வெட்கத்தில் தலைகுனிந்தான்.

இதுதான் சமயம் என்று உணர்ந்த தங்கவேலு "மகனே! நன்கு வளர்ந்து தலைதாழ்ந்து கிடக்கும் பயிர்களை பணிவுடைய பெரியவர்களுக்கு உதாரணமாகச் சொல்வார்கள். நிமிர்ந்து நிற்கும் பயிர்களை தலைக்கனம் கொண்டவர்களுக்கு ஒப்பிடுவர். "தலைக்கனம் எப்போதும் அழிவைத்தரும். தாழ்மையான குணமே உயர்வைத்தரும்" என்றார்.

இரு பொருள்பட அப்பா கூறிய வார்த்தையின் மூலம் தவ் தவறை உணர்ந்தான் பிரபு.

"என் எதிர்காலம் சிறப்பாக அமைய வேண்டும் என்பதற்காக நகரத்தில் படிக்க வைத்து எவ்வளவோ பணம் செலவு செய்தீர்கள். நீங்கள் செய்யும் தியாகத்தை மறந்துவிட்டு உங்களை மிகவும் புண்படுத்தி விட்டேன், என்னை மன்னிச்சிடுங்க அப்பா... இனி எனக்குத்தான் எல்லாம் தெரியும் என நினைக்க மாட்டேன். முற்றி சாய்ந்த நெற்கதிர்களைப் போல பணிவோடு இருப்பேன்" என்றான் மகன் பிரபு.

இதைக்கேட்ட தந்தை தங்கவேலு மகிழ்ச்சியில் திகைத்தார்.

சிந்தனை : *இன்றைய இளைஞர் சமுதாயம் தலைக்கனம் கொண்ட நிலையில் பெரியோரை மதிக்காமல் அவர்களின் அறிவுரைகளை அலட்சியம் செய்து வாழ்கின்ற நிலையைப் பார்க்கின்றோம். எனவே நாமும் பிரபுவைப்போல் எல்லாம் எனக்குத்தான் தெரியும் என்று வாழாமல் - தலைக்கனம் கொண்டு அலையாமல் சாய்ந்த நெற்கதிர்களைப்போல அடக்கமாக, பணிவுடன் இருப்போம்.*

மன்னார் மறைமாவட்டத்தின் .....

1ஆம் பக்கத் தொடர்ச்சி

செபமாலை அடிகளார் கடந்த 25 வருடங்களாக பல்வேறு பணித்தளங்களில் பணியாற்றியுள்ளார். மன்னார் பேராலயத்தில் உதவிப் பங்குதந்தையாகவும், பின்னர் தலைமன்னாரில் உதவிப் பங்குத்தந்தையாகவும் பணியாற்றிய இவர் விடத்தல்தீவில் 4 வருடங்கள் பங்குத்தந்தையாகவும், பின்னர் ஓமந்தையில் ஒன்றரை வருடங்களும் செட்டிகுளத்தில் 6 மாதங்களும், தோட்டவெளியில் 4 வருடங்களும் பங்குத்தந்தையாகப் பணியாற்றினார்.

பின்னர் 2002ஆம் ஆண்டு மே மாதம் மறைப்பணியையும், உயர்கல்வியையும் மேற்கொள்ளும் பொருட்டு அமெரிக்காவிற்குச் சென்றார். நான்கு வருடங்களின் பின்னர் 2006ஆம் ஆண்டு நாடு திரும்பிய அவர் வவுனியாவில் 3 வருடங்கள் பங்குத்தந்தையாகவும் (2006 ஒகஸ்ட் - 2009 ஏப்ரல்), பின்னர் குடும்பப்பணி நிலையத்தின் இயக்குனராக 2 வருடங்களும் (2009 ஏப்ரல் - 2011 ஏப்ரல்) தொடர்ந்து 2011 ஏப்ரல் தொடக்கம் கற்கடந்தகுளம் பங்குத்தந்தையாகவும் பணியாற்றி வருகின்றார்.

ஹிட்லரின் அரசால் கொல்லப்பட்ட உரோமா மக்களின் நினைவுக் கூட்டம்

இலண்டன் நகரின் கைட் (Hyde) பூங்காவில் உள்ள இனவேள்வி நினைவுச் சின்னத்தின்முன் கடந்த 03.08.2012 அன்று நினைவு நிகழ்வொன்று நடைபெற்றது.

இரண்டாம் உலகப் போரின்போது பல்வேறு இனங்களை அழிக்கும் செயல்பாடுகளில் ஹிட்லரின் ஜெர்மனி ஈடுபட்டிருந்தது. அழிக்கப்பட்ட இனங்களில் ஒன்று உரோமா (Roma) என்றழைக்கப்படும் நாடோடி இனத்தவர்.

இவ்வினத்தைச் சேர்ந்த 500,000க்கும் அதிகமானோர் நச்சுவாயு அறைகளில் கொல்லப்பட்டனர். இவர்களின் இறுதிக் குழுவாக நச்சுவாயு அறைகளுக்கு 3000 பெண்களும் சிறுவர், சிறுமியரும் 1944ம் ஆண்டு ஆகஸ்ட் 2 மற்றும் 3ம் தேதிகளில் கொல்லப்பட்டனர்.

ஹிட்லரின் அரசால் கொல்லப்பட்ட 5 இலட்சத்திற்கும் அதிகமான Roma மக்களின் நினைவாக இந்த நினைவுக் கூட்டம் நடத்தப்பட்டது.

தயவுசெய்து அவதானியுங்கள்

நீத்தார் நினைவுப் பகுதியில் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவுகளைப் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்.

கட்டண விபரம்

கறுப்பு வெள்ளை 4,500/= கலர் 7,500/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவஞ்சலி

10ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 23 05 1934

உதிர்வு 11 03 2002

திருமதி. அ. மரியமுத்து

(பள்ளங்கோட்டை. நானாட்டான்)

பத்து வருடங்கள் என்ன பத்தாயிரம் வருடங்கள் கடந்தாலும்
உங்கள் பாசமும் பெயருக்கு ஏற்ற நேசமும்
எம்மை விட்டு பிரிவதில்லை அம்மா
நாங்கள் இன்று உயர்ந்து நிற்க
நீங்கள் ஏணி ஆகினீர்கள்
எங்கள் உயர்வு காண நீங்கள்
இன்று எம்மோடு இல்லை.
மெழுகு என உருகி ஒளியினை ஊட்டி
வளர்த்துவிட்ட தாயே
உங்கள் பிரிவை எண்ணி துயருறா நாள் ஏதும் இல்லை.
உங்கள் ஆன்மா இறைவனில் இளைப்பாற
அனுதினமும் வேண்டுகின்றோம்.

என்றும் உங்கள் நினைவுடன் :- பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 12 12 1958

உதிர்வு 28 08 2011

திரு.த. செபஸ்ரியான் குரூஸ் (ஸ்ரீபன்)

(தாழ்வுபாடு. மன்னார்.)

ஓடி மறைந்தது ஓராண்டு காலம்
மறக்க முடியவில்லை அப்பா உங்கள் சிரித்த முகத்தை
இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில்
இறைவனுக்குப் பணி செய்வதில் என்றுமே
பின்நிற்க மாட்டீர்கள்.
வான் வீட்டிலும் உங்கள் பணி தொடர்ந்து
செய்ய சென்று விட்டீர்களா அப்பா!
நிச்சயமாய் நம்புகின்றோம் நீங்கள்
இறைவன் காலடியில் இருப்பீர்கள் என்று.

உங்கள் பிரிவால் துயருறும் :-
மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், உற்றார் உறவினர்கள்.

தகவல் :- எஸ். பிரதீபா பிறின்ஸ் (பிரான்ஸ்)

3ம் ஆண்டு நினைவஞ்சலி 2 1/2ம் ஆண்டு நினைவஞ்சலி

ஆன் மேரி திரேசா பயஸ்
பிலிப்புப்பிள்ளை (பெரியா)

திரினிற்றி அன்ரன்
கமலநேசன் (குஞ்சு)

கொன்வென்ட் வீதி, மன்னார்.

மலர்வு 27.08.1945 மலர்வு 29.04.1952
உதிர்வு 06.08.2009 உதிர்வு 08.02.2010

"நீதிமான்களின் ஆன்மாக்கள் கடவுளின் கையில் உள்ளன. வேதனைகள் எதுவும் அவர்களைத் தீண்டாது"

இவர்களின் பிரிவால் துயருறும்

மகள் அருணி, பெறாமக்கள், சகோதரி, சகோதரன், மருமக்கள், பேரப்பிள்ளைகள், மைத்துனர்கள், மைத்துனிகள், பிள்ளைகள், பெறாமக்கள், சகோதரி, சகோதரன், மருமக்கள், பேரப்பிள்ளைகள், மைத்துனர்கள், மைத்துனிகள்,

மற்றும் உற்றார் உறவினர், நண்பர்கள். (லண்டன், பிரான்ஸ்)

திருக்குடும்பச் சபையின் முப்பொன் (150) யூபிலி விழா

1ஆம் பக்கத் தொடர்ச்சி

1858ம் ஆண்டு தை மாதம் 11ம் திகதி அமலமரித் தியாகிகள் சபை நிறுவுனர் யூஜின் டி. மசனட்டுக்கும் திருக்குடும்ப சபை நிறுவுனர் பீற்றர் பியன்வெனு நோ ஆய் அவர்களுக்கும் இடையில் ஓர் இணைப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. அதில் நம்பிக்கையும், பரஸ்பர உதவியும் வலியுறுத்தப்பட்டது. ஆயர் சமேரியாவின் வேண்டுகோளுக்கிணங்கி இரு சபை நிறுவுனர்களும் திருக்குடும்ப சகோதரிகளை இலங்கைக்கு அனுப்ப சம்மதம் அளித்தனர்.

இவர்களது வருகைக்கு முன் 1861ம் ஆண்டு இரு நிறுவுனர்களும் (மாசி 8, வைகாசி 21) இவ்வுலகை நீத்து இறைபதம் அடைந்துவிட்டனர். ஆயர் சமேரியா, யூஜின் டி மசனட் ஆண்டகையின் பிரிவின் பின் நடைபெற்ற பொதுச்சங்கத்தில் பங்குபெற்ற பிரான்சுக்குச் சென்றபோது அங்கு ஆயத்தமாக இருந்த ஆறு சகோதரிகளையும் தன்னுடன் கூட்டிவந்தார். அவர்கள் "மாறி சேவியர் மாசான், மாறி ஸ்ரனிஸ்லாஸ் குயின், மாறி கெலன் வின்ரர், மாறி தெரேஸ் வான் மோஸ், மாறி ஜோசெல் மறோஆ, மாறி லிகோரி றோஜா" இவர்களுடன் அருட்தந்தையர்கள் புவாசோ, பூற்றன், 3 அமலமரித்தியாகிகள் சகோதரர்களும் அடங்குவர்.

1862ம் ஆண்டு புரட்டாதி 6ம் திகதி ருலொன் என்னும் இடத்திலிருந்து "கனடா" என்னும் கப்பல் புறப்பட்டு 14ம் திகதி அலக்சாந்திரியா துறைமுகத்தை வந்தடைந்தது. அங்கே "லாசறிஸ்ற" குருக்கள் அன்பு சகோதரிகளின் வரவேற்பும் ஆதரவும் இவர்கள் சில நாட்கள் தங்குவதற்கு வசதியாக அமைந்தது. அங்கிருந்து 16ம் திகதி கயிதோவுக்குச் சென்றனர். அங்கு தங்கியபோது திருக்குடும்பம் தங்கிய வீடு, அவர்கள் தரிசித்துச் சென்ற "மடோனா" மரம், தேவதாய் பாலனின் உடுப்புக்கழுவிய தொட்டி இவற்றையெல்லாம் தரிசித்து மகிழ்ச்சியடைந்தனர்.

அங்கிருந்து ஐப்பசி 1ம் திகதி "எக்கோ" எனும் கப்பலில் பயணத்தைத் தொடங்கி ஏடின் எனும் இடத்தை அடைந்து அங்கு இளைப்பாறி பயணத்தைத் தொடர்ந்து காலித்துறைமுகத்தை வந்தடைந்தனர். கடல் வருத்தம் (Sea Sick) ஒவ்வாமை, தட்ப வெப்ப சுவாத்திய நிலை, இவற்றையெல்லாம் அனுபவித்து நாற்பது நாட்களின்பின் காலி துறைமுகத்தில் கரை சேர்ந்தனர். அங்கு ஒரு கத்தோலிக்க குடும்பத்தினரால் வரவேற்கப்பட்டு பராமரிக்கப்பட்டனர். 22ம் திகதி மாலையில் காலியை விட்டுப் புறப்பட்டு மறுநாள் கொழும்பை வந்தடைந்தனர். 1ம் திகதி கொழும்பைவிட்டுப் புறப்பட்டு "பேள்" என்னும் கப்பலில் பயணத்தை மேற்கொண்டு 2 நாட்களின்பின் 1862ம் ஆண்டு கார்த்திகை மாதம் 2ம் திகதி யாழ்ப்பாணத்தில் வந்திறங்கினர். கப்பல் வந்து தரிப்பதைக்கண்ட எம் குருக்கள் ஆயரை ஆர அரவணைத்து முத்தமிட்டு வரவேற்றனர். ஆயர் இரவில் தரைக்குச் செல்ல விரும்பாததால் திருப்பலி முடிந்தபின் படகில் சென்றனர். அருட்தந்தையர்கள் பொஞ்சீன், மோலா ஏனைய குருக்கள் பெருந்திரளான மக்கள், திருமதி மேரி ஆன் விளனகன், மகள், மாணவர்களுடன் வந்திருந்தனர். எல்லாக் குருக்களும் சிலுவைக் கொடியோடு தமிழ் கலாச்சார வாத்தியக் குழுவோடு தவில் இசைக் கருவிகள், நாதஸ்வரங்களுடன் வரவேற்றனர். செந்நெற்கதிரும், செங்கரும்பும், பன்னிற மலரும், கண்கவர் மாலையும், வாழையும், தாழையும், தோரணங்களும் கண்கொள்ளாக்காட்சியாக இருந்தது. ஆம் அது யாழ் வரலாற்றின் பொன்னாள். நகரமெங்கும் ஒரே விழாக்கோலம்!

அவர்கள் இறங்கிய இடத்தில் மேடையமைத்து நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. ஆயர் தம் மந்தைகளின் பாராட்டுக்களைப் பெறவிரும்பியதால் ஒருவர் ஆங்கிலத்தில் வாழ்த்துப்பா வாசித்தார். அருட்தந்தை பொஞ்சீன் ஆயரின் பெயரால் சிற்றுரை வழங்கினார். பின்னர் ஆயரைப் பின்சென்று சகோதரிகள், குருக்கள், மக்கள் மரியாள் பேராலயத்தை நோக்கிப் புறப்பட்டனர். ஆலய மணிகள் ஆர்ப்பரிக்க நன்றிக் கீதம் (Tedeum) பாடியபின் ஆயர் இல்லத்தில் விருந்து பரிமாறப்பட்டது. நல்ல வரவேற்புக்கள் கிடைக்கப்பெற்று குடும்ப விழாவாகத் அது திகழ்ந்தது. இவ்வாறாக திருக்குடும்ப சகோதரிகளின் வருகையால் யாழ் மக்கள் மகிழ்ச்சியடைந்தனர்; நன்மைகள் பெற்றனர்.

எனவே 150 ஆண்டுகளாக இறைவன் ஆற்றிய வியத்தக நிகழ்வுகளுக்காக, பொழிந்து வரும் அருள் வரங்களுக்காக உளம் நிறைந்த நன்றிப் பெருக்குடனும் பொங்கும் மகிழ்வுடனும், விழாக்கொண்டாட முன்வந்துள்ளோம். இவ்வைபவ விழாவிற்கு முன்னேற்பாடாக சில நிகழ்வுகளை முனைப்புடன் முன்னெடுத்துள்ளோம்.

பாதச்சுவடுகள் - ஒலி ஒளிச் சித்திரம்

பாகம் 1 - கால்கோள் சுவடுகள் -
ஆவணி 5ந் திகதி ஞாயிறு மாலை 8.30

பாகம் 2 - வரலாற்றுச் சுவடுகள் -
புரட்டாதி 2ந் திகதி ஞாயிறு மாலை 8.30

பாகம் 3 - அனுபவச் சுவடுகள் -
ஐப்பசி 7ந் திகதி ஞாயிறு மாலை 8.30

இவ்விடயங்கள் ஒளிபரப்பப்படும் இடம்

ரூபன் மரியாம்பிள்ளை அடிகளாரை இயக்குனராகக் கொண்டு இயங்கும் "பிசப் சௌந்தரா மீடியா சென்ரர்"
1. தமிழ் கத்தோலிக்க செய்தி லங்கா தொலைக்காட்சி TCNL (Tamil Catholic News Lanka)
2. இணையத்தளம் WWW.Tcnlnet.com
முகவரி:- இல. 891, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல : 0212226085
3. டான் மியுசிக், மன்னார்.

திருக்குடும்பச் சகோதரிகள், யாழ் மாகாணம்.

உள்நாட்டு வெளிநாட்டு சந்தாதாரர்களே

உங்களுக்கு அனுப்பப்படும் பத்திரிகையின் முகவரிக்குக் கீழே உங்கள் சந்தாக் காலம் குறிக்கப்பட்டுள்ளது. அதைப் பார்த்து உரிய காலத்தில் உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் -கொள்ளுங்கள். சந்தாவை புதுப்பிக்காதவர்களுக்கான பத்திரிகையை எதுவித முன்னறிவித்தலும் இன்றி நிறுத்திவிடுவோம் என்பதை வருத்தத்தோடு அறியத் தருகின்றோம். மன்னார் நிர்வாகம்

தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் நினைவுப் பேருரை

1ஆம் பக்கத் தொடர்ச்சி

மன்/ புனித சவேரியார் பெண்கள் பாடசாலை மாணவியர் இறைவணக்கம் நிகழ்த்தினர். இந்நிகழ்வின் வரவேற்புரையை மன்/ சித்திவிநாயகர் இந்துக் கல்லூரியின் அதிபர் திரு. ஜ. தயானந்தராஜா அவர்கள் நிகழ்த்தினார். மன்னார் வலயக் கல்விப் பணிமனையின் தமிழ் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி பெப்பி விக்ரர் லெம்பேட் அவர்கள் தனிநாயகம் அடிகளாரின் திருவுருவத்திற்கு மாலை அணிவித்து விளக்கேற்றினார்.

இந்நிகழ்வில் மன்னார் தழல் இலக்கிய வட்டத்தின் கவியரங்கமும், மன்/ புனித சவேரியார் பெண்கள் பாடசாலை மாணவியரின் நடனமும், மன்/ சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி மாணவிகளின் நடனமும் சிற்பு நிகழ்ச்சிகளாக இடம்பெற்றன. மன்னார் ஆயர் அவர்கள் திரு. ஆறு திருமுருகனுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். தமிழ் நேசன் அடிகளார் நினைவுச் சின்னம் வழங்கினார். வைத்தியர் திரு. கதிர்காமநாதனும், வைத்தியர் திரு. அழகக்கோன் அவர்களும் திரு. ஆறு திருமுருகன் அவர்களுக்கு மாலை அணிவித்து பொன்னாடை போர்த்தினர்.

மடு கல்வி வலய தமிழ் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வி நா. வல்லிபுரம் அவர்கள் நன்றியுரை நிகழ்த்தினார். கலையருவியின் மத்தியகுழு உறுப்பினர் திரு. அந்தோனிதாசன் பெனாண்டோ நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார்.

பற்றீசியன் பேருலா

3ஆம் பக்கத் தொடர்ச்சி

யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரியின் உள் நாட்டிலும் சர்வதேச நாடுகளிலும் வாழும் பழைய மாணவர்கள் கல்லூரிச் சமூகத்துடன் இணைந்து நடாத்திய ஒன்றுகூடலின் முதல் நாள் நிகழ்வு 04.08.2012 அன்று பற்றீசியன் பேருலாவாக (Patricians Walk) கல்லூரியின் புகழ்பூத்த அதிபர் அருட்பணி. லோங் அடிகளாரின் திருவுருவச் சிலை நிறுவப்பட்டுள்ள யாழ்ப்பாண பொது நூலக முன்றலில் இருந்து ஆரம்பித்து கல்லூரி வளாகத்தை சென்றடைந்தது. இந்நிகழ்வில் சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் அருட்பணி ம. ஜெறோ செல்வநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ் மறைமாவட்ட குருமுதல்வரும் கல்லூரியின் முன்னாள் அதிபருமாகிய அருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்கள் கலந்துகொண்டார். மங்கள வாத்தியங்கள் முழங்க பாடசாலை மாணவர்களின் பான்ட் வாத்தியம், தமிழ் இன்னியம் என்பவற்றுடன் கல்லூரியின் தேசிய மாணவர் படையணி, கல்லூரி விளையாட்டுக் குழுக்கள் மன்றங்களின் உறுப்பினர்கள் அணிவகுத்துச் செல்ல கல்லூரி சாதனைகளை பிரதிபலிக்கும் பதாதைகளை தாங்கிய வண்ணம் மாணவர்கள், பழைய மாணவர்களும் சகோதர பாடசாலை ஆகிய யாழ் திருக்குடும்ப கன்னியர் மடம் தேசிய பாடசாலை மாணவிகளும் இப்பேரணியில் கலந்துகொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னா

நிகழ்வுகளின் நிழல்கள்

வவுனியா தேசிய கல்வியில் கல்லூரியில் நடைபெற்ற

வருடாந்த கிறிஸ்தவ மாநாடு 2012

திரு. க. பேனாட்

மன்னார் ஆயர்

அருட்.திரு. நவாஜி மட்டக்களப்பு

அருட்.திரு. மதனராஜ

இணைபிரியா இல்லற வாழ்வில்

50 ஆண்டுகள் நிறைவு

திருமணப் பொன்விழா

(27. 08. 1962 – 27. 08.2012)

திரு திருமதி. மோசேஸ் குரூஸ் மாசில்லா டயஸ்

தாழ்வுபாடு, மன்னார்.

அலைகடலோரமதில் அழகுறவே அமைந்திருக்கும்
தாழ்வுபாடு எனும் தளைவு நகரில் கோவில்
கொண்டெழுந்தருளி அனுதினமும் அனுகூலமளிக்கும்
புனித வளனார் காவலிலே வசிக்கின்ற தம்பதியர்
மோசேஸ் குரூஸ் மாசில்லா டயஸ் என்பவர்கள்
இல்லற வாழ்வில் இணைந்து 50து ஆண்டுகளை
இறைவன் கிருபையால் நிறைவு செய்வதையிட்டு
உறவுகள் ஒன்றிணைந்து வாழ்த்துகின்றோம்
உற்றமும் சுற்றமும் எந்நாளும் உங்களை வாழ்த்தி
ஒற்றுமையாய் பிரியாத வரம் கேட்டு
நீங்கள் வாழ வாழ்த்தும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள்.

மன்னார் கலையருவியின் ஏற்பாட்டில்

தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் நினைவுப் பேருரை

கலாநிதி ஆறு திருமுருகன்

மன்னார் ஆயர் ஆறு திருமுருகனுக்கு பொன்னாடை போத்துகின்றார்.

திரு.ராதா

திரு.தாயானந்தராஜா

கௌரவ வினோ M.P.

திருமதி பெப்பி விக்ரர் லெம்பேட் மாலை அனிவிக்கின்றார்

நீங்காத நினைவுகள்

1ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 25 12 1932

உதிர்வு 09 08 2011

திரு. B.J. இம்மானுவேல் (கிளாக்கர்)

(புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி)
பெரியகடை, மன்னார்.

அன்பின் இருப்பிடமாய் பாசத்தின் பொக்கிஷமாய்
பண்பிலே நல்ல மனிதனாய்
குடும்பப வாழ்விலும், சமூக பணி வாழ்விலும்,
இறைசேவையிலும்
மண்ணக வாழ்வை வாழ்ந்து முடித்தவரே
நீர் இறைபதம் அடைந்து ஓராண்டுகள் உருண்டோடியும்
எம் இதய ஓலங்கள் ஓயவில்லையே
இன்று நீர் எமதருகில் இல்லையே இருந்தும் எம்
நெஞ்சை விட்டகலாத அகல் விளக்காய்
எம் நெஞ்சில் இருப்பீர்கள்.
உங்கள் ஆன்ம அமைதிக்காக
என்றும் இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:-
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார் உறவினர்கள்.

3ம் ஆண்டு மற்றும் 31ம் நாள் நினைவஞ்சலி

திருமதி. அந்தோனியா குரூஸ் ஞானபாக்கியம் — திரு. செபஸ்ரியான் ஞானபாக்கியம் டலிமா

(8ம் வட்டாரம், பேசாலை.)

மலர்வு :- 02 - 06 - 1946
உதிர்வு :- 23 - 09 - 2009

மலர்வு :- 17 - 07 - 1944
உதிர்வு :- 10 - 07 -2012

அன்பான பெற்றோரே, நீங்கள் இறைபதமெய்தி
காலங்கள் பல கடந்தாலும்
உங்களை எப்படி நாம் மறப்போம்?
உங்களின் அன்பை யார் எமக்கு ஈடுசெய்வார்கள்?
எமது மகிழ்வின் நற்செய்திகளைப் பகிர்ந்துகொள்ள
பக்கத்தில் நீங்கள் இல்லையே! அன்போடு எம்மை
அணைத்து நானிலத்தில் நலமாய் வாழ வழிசெய்தீர்.
உங்களின் இனிய நல் நினைவுகள் இதயத்தில் என்றும்
நிறைந்துள்ளது. உங்கள் பிரிவுத் துயர் உள்ளத்தில்
உயர்ந்து எழுகின்றது. பிறப்பவர் எல்லாம் இறப்பது நியதி
எனினும் உங்கள் பிரிவுத் துயர் நெஞ்சமதில்
நீங்காது நிற்கின்றது.

பிரிவால் துயருறும் :-
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
தகவல் :- எஸ். ஞானசேகரம் டலிமா

3ம் மாத நினைவஞ்சலி

மலர்வு 28 08 1926

உதிர்வு 15 04 2012

திருமதி. பிறிசில்லா ராசமலர் யேசுரத்தினம்

பெற்றா, மன்னார்.

ஊன்' கொடுத்து உயிர் கொடுத்து
உம்மையே உருக்கி எம்மை வாழவைத்து
உள்ளதெல்லாம் கொடுத்த உத்தமியே
பாசத்தோடு பண்பும் ஊட்டி இப்பாரினிலே
எமை வாழ்வாங்கு வாழவைத்த எம் கண்மணியே
பரமனின் பாதத்தில் உம் பதியுடன் சேர்ந்திருந்து
எங்களுக்காய் வேண்டும் அம்மா.

நீங்கா நினைவுடன் :-
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரன், சகோதரி மற்றும் உறவினர்.
தகவல் :- Dr. ரதனி யூட் (மகள்)

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு மன்னார் பிரதான வீதி 17ம் இலக்கத்திலுள்ள கறிற்றாஸ் – வாழ்வுதயம் அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org